கல்கி



KALKI

5.3.1967

40 காசு



எங்கெங்கிருந்தெல்லாமோ அவை வந்தன, குழந்தைக்குப் பரிசுகளை ஏந்தி. 'என்னுடைய பலத்தை உனக்குக் கொடுக்கிறேன்' என்றது யானை. 'என்னுடைய சுறுசுறுப்பைத் தருகிறேன்' என்றது மான். 'வலுவான என் பற்கள்' என்று முன்வந்தது முயல். 'கூர்மையான பார்வை' என்றது மிஸ்டர் மியாவ். 'உறுதியான எலும்புகள்' என்று கர்ஜித்தது சிங்கம். 'நோய்களை எதிர்க்கும் சக்தி'யைத் தர முயன்றது கரடி

'இந்த அதிசய அமுல் டின்னிலுள்ள ஆசிகள் அனைத்தையும் வழங்குகிறேன்' என்றது அறிவு முதிர்ந்த ஒரு குரல்.



அமுல் பால் உணவு குழந்தைகளுக்குத் தேவையான வைட்டமின்கள் நிறைந்தது.

இந்தியாவின் ஏகபோக விநியோகஸ்தர்கள் : VOLTAS வோல்டாஸ் லிமிடெட்.

ASPJAB7/51-TA25

கல்கி

பொருளடக்கம்

பராபவ, மாசி, 21 :: மார்ச், 5

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


நினைவுத் திரையில்...

வங்க இலக்கியத்துக்குப் புத்துயிர் அளித்த பங்கிம் சட்டர்ஜி ஒரு நண்பருடன் இரண்டு மணி நேரம் வரை பேசிக்கொண்டேயிருந்தார். அந்த இரண்டு மணி நேரமும் அவர் தம்முடைய நாவல்களைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார். அந்த நண்பரும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டே வந்தார்.

கடைசியில் ஸ்ரீ சட்டர்ஜி அந்த நண்பரைப் பார்த்து, "சரி, இது வரை என் சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசினோம். இனி உங்களுடைய சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசுவோம். நான் கடைசியாக எழுதிய நாவலைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்!

கல்கி, மார்ச் 2, 1947

இதயம் கலந்த இனிய வாழ்த்துக்கள்!



'கனியை அப்படியே கையால் பிடித்து விட்டோம்' என்பதுபோல் தோற்றமளிக்கிறார் தமிழகத்தின் முதன் மந்திரியும் தமிழ் மக்களின் அன்புத் தலைவருமான திரு அண்ணாதுரை அவர்கள். ஜனநாயக விருட்சத்தில் பழுத்த இந்த ஆட்சிக் கனியிலிருந்து நல்வாழ்வு எனும் சாற்றைப் பிழிந்து மக்களுக்குப் புது அரசு அளிக்குமாக

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்



மலர் 26 ❑ இதழ் 31

அடங்கெழில் சம்பத்து

அடங்கெழில் சம்பத்(து) அடங்கக்கண்(டு) — ஈசன்
அடங்கெழிலஃதென்(று) அடங்குக உள்ளே

இது நம்மாழ்வார் உலகத்துக்குத் தந்த உபதேசம்.

முதலில், இந்த உபதேசம் காங்கிரஸ் கட்சியின் உள்ளத்தில் பாய்ந்து தூய்மை உண்டாக்க வேண்டும். பல்லாண்டுகளாக அனுபவித்த சம்பத்து திடீர் என்று 'அடங்கி'ப் போயிற்று. அனுபவித்த போது அது ஈசன் சம்பத்து என்பதை மறந்துவிட்டதன் பயன். சூழ்ச்சிகளை மறந்துவிட்டு இந்த வீழ்ச்சி ஈசன் அருளால் வந்த ஓர் எச்சரிக்கையும் சோதனையுமே என்று காங்கிரஸில் சேர்ந்த பெரியோர்களும் சிறியோர்களும் உணர்வார்களாக!

இரண்டாவதாக, தி. மு. க. தோழர்களுக்கு நான் நினைவூட்டுவதும் ஆழ்வார் உபதேசமே. வந்து சேர்ந்திருக்கும் சம்பத்து ஈசன் சம்பத்தும் அருளும் ஆகும். அதை வெளியில் சொல்லாமல் உள்ளத்தில் ஈசனுக்கு அர்ப்பணமாக்கி அடக்கத்துடன் அனுபவிக்க வேண்டும். இல்லாவிடில் இரவில் தூங்கி, காலை எழுந்ததும் எங்கேயோ மறைந்து விடும். நாட்டின் நன்மை, தருமத்தின் வளர்ச்சி இவற்றையே நம்முடைய நோக்கமாக வைத்துக் கொண்டு பணி செய்வோமாக.

தி. மு. க. தொண்டர்களுக்கும், அபிமானிகளுக்கும்: இத்தனை நாட்கள் காங்கிரஸ் அனுபவித்த சலுகைகளையும் பெற்ற லாபங்களையும் இப்போது நாம் அனுபவிக்கலாமே என்று அந்தக் குழியில் நாமும் இறங்கினோமானால் வெகு நாட்கள் வேண்டியதில்லை, சீக்கிரமே ஈசன் பாடம் கற்றுக்கொள்ளச் செய்வான். அதிகாரம் வந்திருக்கும் போது நாம் எப்படி நடந்து கொள்ளுகிறோம் என்பதுதான் பெரிய சோதனை. காங்கிரஸ் வெட்கப்படும்படியாக நடந்து கொள்ள வேண்டும். நிருவாக அதிகாரிகளிடம் சென்று 'இது செய், அது செய்' என்று கேட்கலாகாது. நிருவாகம் நியாயப்படி, கட்சிச் சார்பில்லாமல் நடைபெற வேண்டும்.

ராஜ்ய நிருவாகத்தில் நமக்கு இருக்கும் அதிகாரம் மிகக் குறைவு. தற்போது எல்லாமே மத்திய ஆட்சியில் சிக்கிக் கொண்டிருக்கின்றன. இது சீர்ப்பட்டு ராஜ்யங்களுக்கு நியாயப்படி சுதந்திரம் ஏற்படுவதற்கு நாளாகும்.

'தில்லியில் தமிழ்நாட்டு மந்திரிகள் யாரும் இல்லையே, இது நமக்கு நஷ்டமாயிற்றே' என்று சில காங்கிரஸ் தலைவர்கள் நம்முடைய மூளையைக் குழப்புகிறார்கள். அந்தக் குழப்பத்துக்கு இடம் தர வேண்டாம். சுதந்திரக் கட்சி அங்கத்தினர்களும், தி. மு. க., முஸ்லிம் லீக் கட்சிகளின் அங்கத்தினர்களும் 100க்கு மேல் தில்லி மக்கள் சபையில் நமக்காகக் காவலும் கவசமும் காப்புமாக இருப்பார்கள். நியாயப்படி அடைய வேண்டிய சலுகைகளை நிருவாக அதிகாரிகளே தர முடியும். மந்திரிகளின் சிபாரிசு வேண்டியதில்லை.

மத்திய அரசாங்கத்தில் மந்திரிகள் சிலர் தமிழர்களாக இருந்தால் லாபமாகுமே என்று எண்ணுகிறவர்கள் காங்கிரஸில் சேர்ந்து விட வேண்டியவர்கள். கூழுக்கும் மீசைக்கும் இரண்டுக்கும் ஆசைப்படலாகாது. காங்கிரஸை எதிர்ப்பது நம்முடைய கடமை. அப்படியிருக்க மந்திரிகள் சிலர் அங்கிருக்க வேண்டும் என்று ஆசைப்படுவது மடமையாகும். இந்த ''ஐந்தாம்படை''தான் நமக்குப் பெரிய சத்துரு.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

புதிய அத்தியாயம்

மாங்கலியதாரணம் ஆனவுடன் நாயனக்காரர் 'ஆனந்தம் ஆனந்தம்' ஊதும் போது திருமண வீடு எப்படிக் குதூகலிக்குமோ, அது போல் தமிழ் நாடே இன்று கலியாணக் கோலாகலம் கொண்டிருக்கிறது.

இந்த நிமிடத்தில் கோடாது கோடி இதயங்களும் நன்றி நிறைந்த நெஞ்சுடன் புண்ணிய புருஷர் ராஜாஜியை எண்ணி நமஸ்கரிக்கின்றன. எதிர்க்கட்சிகள் பலவாக இருக்கலாம்—ஆனால் அவை புரிந்த வாதங்களின் ஆணி வேர் இந்தப் பெருமகனிடம் உதித்தவைதாம். எதிர்க்கட்சிகள் ஒன்று கூடியதற்கான ஆதாரக்கலை இந்த மகாத்மாவின் சிந்தனையில்தான் சுரந்தது. தேசத்தின் அச்சத்தை நீக்கி, அவரவரும் மனச்சாட்சிப்படி நடந்து, தங்களது மாண்பைக் காத்துக் கொள்ள அபயதீபம் ஏந்தியவரும் இந்த மகனீயர்தாம். தொண்ணூறுண்டை நெருங்கிய பருவத்திலும் தோல்விகளுக்குத் தலை சாயாது உறுதியுடன் செயற்பட்ட தொண்டர் திலகத்தின் திருப்பணி பழுத்துவிட்டது. வெற்றி தோல்வி இரண்டையுமே சலனமின்றி ஒன்றாக ஏற்கும் கருமயோகியே அவர் எனினும், இன்று மக்கள் விழிப்புற்று ஜனநாயகத்தின் உட்பொருளைப் புரிந்து கொண்டு விட்டதில் அவர் நிச்சயமாக நிம்மதி கொள்ளலாம். யதேச்சாதிகாரத்தை அழிப்பதற்கு உறுதுணையாக இருந்த அவர், இனி நல்லாட்சி என்னும் ஆக்கப்பணி சிறப்புற நடைபெறவும் உறுதுணையாக நீண்ட காலம் நம்மிடைவாழ் ஆண்டவனை இறைஞ்சுகிறோம்.

தமிழகத்தில் காங்கிரஸ் என்கிற ஜமீன்தாரிக் கூட்டத்தை ஒழித்ததற்கு முக்கியமான காரணம் எதிர்க் கட்சிகள் ஒரே மனத்தோடு, அந்தரங்கசுத்தமான பரஸ்பர நல்லெண்ணத்தோடு இணைந்து செயலாற்றியதுதான். சிறிதும் மனத்தில் களங்கமின்றி தி.மு.க.—சுதந்திரக் கட்சி — முஸ்லீம் லீக் — தமிழரசுக் கழகம் முதலிய கட்சிகள் செயலாற்றிய பாங்கு அரசியல் சரித்திரம் கண்டறியாதது. இப்பேர்ப்பட்ட பரஸ்பர நம்பிக்கையுடன் ஒன்றுபட்டு உழைத்த கட்சிகள் அனைத்துமே நம் போற்றுதலுக்குரியன.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மக்களின் மதிப்பில் மிகவும் ஓங்கி வளர்ந்து விட்டனர். அக்கட்சித் தொண்டர்கள் கூலிக்காக வேலை செய்பவர்களல்ல. தொண்டை விலைக்கு வாங்கும் பொருளாதார வசதியும் அக்கட்சிக்குக் கிடையாது. அவரவரும் தம் கைக் காசைச் செலவழித்துக் கொண்டும், ஆங்காங்குள்ள பாட்டாளி மக்களின் சிறுசிறு அன்பளிப்புக்களைக் கொண்டும் ஒரு பெரிய ராஜ்யத்தின் தேர்தலையே வெற்றிகரமாக நடத்தி முடித்திருப்பது இந்திய அரசியல் வரலாற்றில் ஓர் இனிய சகாப்தமாகும். தி. மு. க. தலைவர்களின் நேர்மையும் கண்ணியமும் வாக்குத் திறனும், முன்பு அவர்களைச் சந்தேகித்த கண்களையும் தெளிவுசெய்து விட்டன. இன்று அவர்கள் சமூகம் முழுவதின் நம்பிக்கைக்கும் பாத்திரமாகி உள்ளனர்.

தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள தி. மு. க.வுக்கு நம் இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். தாம் எதையும் எதிர்ப்பவரல்ல என்றும், எந்த வறட்டுச் சித்தாந்தத்தையும் முரட்டுத்தனமாகப் பிடித்துக் கொண்டிருப்பவரல்ல என்றும், திறந்த மனத்துடன் எப்பிரச்னையையும் அணுகப் போவதாகவும் கூறியுள்ள அறிஞர் திரு அண்ணாதுரை அவர்களின் ஆட்சியில் தமிழகம் மேம்பாடு காணும் என்று நம்பி மகிழ்கிறோம். விலைவாசிகளின் உயர்வைக் குறைப்பது, வரிப் பளுவை இலேசாக்குவது, டம்பாச்சாரித் திட்டங்களை விட்டு மக்களுக்குதவும் திட்டங்களில் முனைவது, நிர்வாகத் தூய்மை — ஆகிய விஷயங்களில் புது மந்திரி சபை விசேஷ கவனம் செலுத்தும் என்று திரு அண்ணாதுரை கூறியிருப்பது காதில் தேனாகப் பாய்கிறது; இதுவே காரியாம்சத்தில் அமுதாக வயிற்றில் பாயும் நாளும் விரைவில் வரும் என்று நம்புகிறோம். ராஜாஜியின் ஆலோசனைகளில் தி. மு. க. தலைவர்களுக்குள்ள நம்பிக்கை நமது இந்த நம்பிக்கைக்கு வலி ஊட்டுகிறது.

மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்று, மக்களின் நலனுக்குகந்த காரியங்களைச் செய்யாவிடில் ஆளும் கட்சி வாழ முடியாது என்பதைத் தேர்தல் நிரூபித்து விட்டது. ஆட்சி அதிகாரம், புராதனப் பெருமை, அதிகார வர்க்கத்தின் துணை, பண பலம், அச்சுறுத்தும் ஆயுதங்கள், தனி மனிதர்களின் வசீகரணம், மூவர்ணக் கொடி போன்ற மயக்கு சாதனங்கள் — இவ்வளவும் பெற்றிருந்த காங்கிரஸ் தோல்வியுற்றதெனில் அதற்குக் காரணம் மக்களின் நலனை அது கவனிக்கவில்லை என்பதை வாக்காளர் புரிந்து கொண்டதுதான். ஆனைப்பட்ட காங்கிரஸையே மக்கள் ஊதித் தள்ளிவிட முடியும் என்று கண்டவர்கள், இயல்பாகவே மக்கள் நலனிலும் நிர்வாகத் தூய்மையிலும் அடர்ந்த ஈடுபாடு கொண்டுள்ளபோது தமிழகத்தின் நல்லாட்சியைப் பற்றி இனி ஏன் ஐயம் கொள்ள வேண்டும்?

இப்போது காங்கிரஸ்காரர்களுக்கு உள்ள பொறுப்பையும் கட்டிக்காட்ட விரும்புகிறோம். எந்தக் கட்சி ஆட்சியில் இருப்பினும் பலமுள்ள எதிர்க்கட்சியும் இருக்க வேண்டியது ஜனநாயகத்துக்கு அவசியம் என்று கூறி வந்திருக்கிறோம். சுமார் ஐம்பது ஸ்தானங்கள் பெற்றுள்ள காங்கிரஸ் இன்று ஜனநாயக முக்கியத்துவம் வாய்ந்த எதிர்ப்புப் பணியை நல்ல முறையில் ஆற்ற வேண்டும். சொந்த லாபங்களை மறந்து தேசக்ஷேமத்தை மட்டுமே நோக்க இப்போது அதற்கு அதிக வாய்ப்பு உண்டு. 'குற்றம் கண்டு பிடிக்க வேண்டும்' என்பதில் பிடிவாதமாக இராமல் தி. மு. க. ஆட்சியின் குண-தோஷங்களைச் சீர்தூக்கிப் பார்த்துக் காங்கிரஸார் தமது ஆலோசனைகளை அளிக்கவேண்டும்.

கட்சிகளையும் கட்சித் தலைவர்களையும் மட்டும் வாழ்த்தினால் போதுமா? இன்று

மக்களாகிய நம்மை நாமே வாழ்த்திக்கொள்ள வேண்டும். நாமே நம்மைப் பற்றிப் பெருமிதம் கொள்ளும் விதத்தில் நடந்துகொண்டு விட்டோம். 'அச்சத்துக்கு ஆளாகமாட்டோம்; லஞ்சத்துக்கு மசியமாட்டோம்; தனிமனிதரின் பிரமையைக் கண்டு பிரமைகொள்ள மாட்டோம்; வகுப்புத் துவேஷங்களுக்கு அடிபணிய மாட்டோம்' என்பதை நாம் ஆணித்தரமாக உலகம் காண நிரூபித்து விட்டோம். இதில் கடைசியில் குறிப்பிட்ட வகுப்புத் துவேஷ அரக்கனை இந்தத் தேர்தலில் வென்றது காங்கிரஸின் மீது பெற்ற வெற்றியைவிடப் பெரியது. இந்த அரக்கனைக் கொல்லும் மந்திரத்தை நமக்குத் தந்த அரசியல் முனிவர் நம் நாட்டின் அரசியலை மட்டுமின்றி ஆன்மாவையே காதது விட்டார். அவர் காட்டிய அன்பு வழியில் நன்கு ஊறிவிட்ட தி. மு. க. தலைவர்களின் ஆட்சியில் தமிழகத்தில் நேசமும், நம்பிக்கையும், கூட்டுறவும், ஒத்துழைப்பும் நாளும் பெருகி, தமிழகம் பாரதத்துக்கே வழிகாட்டுமாறு உயர்வு பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

பாரதத்தாய் பள்ளியெழுந்தாள்!

பாரத தேசத்தின் வாழ்வை நிர்ணயிக்கும் பொருளாதாரக் கொள்கை, வரி விதிப்பு முறைகள், அந்நிய உறவுகள், பாதுகாப்புக் கொள்கை முதலிய ஜீவாதாரமான அம்சங்கள் யாவும் மத்திய சர்க்காரின் வசமே உள்ளன. எனவே, ராஜ்ய சட்டசபைத் தேர்தல்களுக்கு நாம் எவ்வளவு கவனம் தந்த போதிலும் நாட்டின் நல்வாழ்வுக்கான அடிப்படைகளை அமைத்துத் தரும் மக்கள் சபைத் தேர்தலே அதிமுக்கியமானது. இந்த அதிமுக்கியமான விஷயத்திலும் நம் பாரத வாக்காளர்கள் மிகுந்த விவேகத்துடன் வாக்களித்திருப்பது மகிழ்ச்சிக்கு உரியது.

காங்கிரஸின் பல்லைப் பிடித்துப் பார்த்தாயிற்று. அதன் பழைய ராட்சத பலம் குன்றிவிட்டது. இந்தக் குன்றிய பலம், அக்கட்சிக்குள்ளேயே நிலவும் இடது—வலது பூசல்களால் மேலும் குன்றும். எனவே, அது தலைதெறிக்க எதுவும் செய்ய முடியாது என்பது நிச்சயம். அடக்கமும் நிதானமும் கொண்டு மிதமாகவே செயலாற்றும் சர்க்கார்தான் சுதந்திரக்கட்சி விரும்புவதும். இன்றிலிருந்து பரதேச்சாதிகார ஒழிப்பு தொடங்கி விட்டதாகக் கருதுகிறோம். முற்றிலும் மாறிய அரசாங்கத்துக்குத் தேசம் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டு விட்டது என்று நம்புகிறோம்.

மக்கள் சபையில் கட்சிகள் அமைந்துள்ள போக்கே தேசமெங்கிலுமுள்ள எல்லா ராஜ்ய சட்டசபைகளின் நிலவரத்துக்கும் பிரதிபலிப்பாகும். இந்த நிலவரம் எதைக் காட்டுகிறது? இந்திய மக்கள் அனைவரும் விழிப்புப் பெற்று விட்டதைக் காட்டுகிறது. பாரத மாதா திருப்பள்ளி யெழுந்து விட்டதைக் காட்டுகிறது. நாடு முழுவதிலுமே காங்கிரஸின் பலம் கணிசமாகக் குறைந்து விட்டது. அது பெரும்பான்மை பெற்றுள்ள இடங்களிலும் முன்னளவு பலமில்லை. ராஜஸ்தானம், பஞ்சாப், பீஹார், வங்காளம், உத்தரப் பிரதேசத்தில் அறுதிப் பெரும்பான்மையே அதற்குக் கிட்டவில்லை. கேரளத்தில் கம்யூனிஸ்ட் கூட்டணி ஆட்சியும், தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியும், ஒரிஸ்ஸாவில் சுதந்திரக் கட்சி முன்னணி தாங்கும் ஆட்சியும் ஏற்பட விருக்கின்றன. இதில் சுதந்திரக் கட்சி பெற்றுள்ள வெற்றியை விசேஷமாகக் குறிப்பிட வேண்டும். அந்தக் கட்சி பணக்காரர் கட்சி என்றும் ஏழைகளின் நலனைக் கவனியாத கட்சி என்றும் அநியாயமாகப் பலத்த பிரசாரம் செய்திருக்கிறார்கள். நாடு முழுவதிலும் அதற்கு ஸ்தாபன அமைப்பும் அவ்வளவாகப் பலமானது என்று சொல்ல முடியாது. அவ்வாறிருக்க எல்லா மாநிலங்களிலும் அது மகோன்னதமான முன்னேற்றம் கண்டிருப்பதைக் குறிப்பிட வேண்டும். தமிழகத்தில் சட்டசபைக்காக இருபத்தொன்பதே ஸ்தானங்களுக்குப் போட்டியிட்டு (இவற்றில் திருமங்கலத்துக்கான தேர்தல் இனிதான் நடக்க வேண்டும்) 22 ஸ்தானங்களை அது வென்றிருப்பதும், மக்கள் சபைக்காக எட்டு ஸ்தானங்களில் போட்டியிட்டு ஆறைப் பெற்றிருப்பதும் நம் மக்களுக்கு அக்கட்சியில் ஏற்பட்டு வரும் பிடிப்புக்கும், தி. மு. க.வின் மனப்பூர்வமான ஒத்துழைப்புக்கும் சான்றாகும். ஒரிஸ்ஸாவில் புது சர்க்கார் அமைக்கும் பணியிலே சுதந்திரக்கட்சி தலைமை தாங்குவது தனிமனித சுதந்திரத்தை மதிக்கும் அனைவருக்கும் பேருவகை ஊட்டுவதாகும். எட்டாண்டுகளுக்குள், எண்ணற்ற இடையூறுகளை மீறி அக்கட்சி பெற்றுள்ள வளர்ச்சி சத்தியத்தின் சக்தியையும் தருமத்தின் பலத்தையுமே காட்டுகிறது.

அடுத்த இதழில் :

❊ முடிவு காணாத மர்மங்கள்

❊ பாராளுமன்றம் பற்றிய ருசியான தகவல்கள்

ராஜாஜியின் கருத்துக்கள்

காங்கிரஸிடம் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை அக்கட்சி இழந்துவிட்டது என்பதைத் தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டி விட்டன. ஆனாலும் தேர்தல் முடிவுகளிலிருந்து மக்களின் பொருளாதார ஞானம் விஷயமாக நான் எவ்வித அனுமானமும் செய்யவில்லை. பொருளாதாரக் கொள்கை தான் 'வாழ்வா சாவா' என்கிற மகத்தான தேசியப் பிரச்னையைத் தீர்ப்பது.

ஒரு தேசத்தின் சகல விவகாரம் மீதும் ஒரே கட்சி நீண்ட காலமாகச் செலுத்தி வந்த ஆதிக்கத்தை அழுத்தந் திருத்தமாக எதிர்க்கும் வகையில் மக்களின் வாக்கு அமைந்திருப்பதை முக்கியமான விஷயமாகக் கருதுகிறேன். ஜனநாயகத்துக்கு ஆக்ஸிஜன் கொடுக்க ஒரு வாய்ப்பு வந்திருக்கிறது. முறையற்ற நிர்ப்பந்தங்களிலிருந்து நிர்வாகத்தை மீட்க அவகாசம் கிடைத்திருக்கிறது.

* * *

மற்ற கட்சிகளின் விஷயம் எதுவாயினும், அநேகமாக எல்லாப் பகுதிகளிலும் காங்கிரஸ் தொண்டர்கள் வன்முறைகளில் இறங்கப் பார்த்தது அவமானமாகும். அவர்களுடைய பாஷையிலும் அடக்கமின்மையையும், ஒழுங்கீனத்தையும் கண்டோம். பத்திரிகை அறிக்கைகள் இவற்றைப் பொது மக்கள் பார்வைக்கு வைக்கவில்லை. அஹிம்சை, கண்ணியம் இவற்றைப் போதித்த முனிவர் ஒரு காலத்தில் வளர்த்த கட்சியில் இவ்வாறு நேர்ந்தது விசனகரமானது. இதற்குக் காரணம் என்ன? இருபதாண்டு ஆட்சி செலுத்திய பின்னும் கட்சியால் அந்தஸ்தும், பொது ஜன ஆதரவும் பெற முடியவில்லை. இதைப் புரிந்து கொண்ட ஆத்திரத்தில்தான்—வரவிருக்கும் தோல்வியை முன்கூட்டிக் கண்ட ஏமாற்றத்தில்தான்—வன்முறைகளில் இறங்கிவிட்டார்கள்; தரக் குறைவாகப் பேசினார்கள். இவை ஒரு தாற்காலிகப் போக்காகவே இருக்கும் என்றும், தேர்தல் ஜுரம் முடிந்தவுடன் இவை அழிந்துபோகும் என்றும் நம்புகிறேன்.

* * *

இந்தியா முழுவதும் சுற்ற வேண்டிய சமயத்தில் சுகவீனம் காரணமாக நான் சென்னையிலேயே முடக்கப்பட்டேன். சென்னையில் நானே கண்டதிலிருந்தும் கேள்விப்பட்டதிலிருந்தும் எல்லாக் கட்சிகளையும்விடத் தி. மு. க.வே மிகவும் கௌரவமாகவும் அமைதியாகவும் தேர்தல் பிரசாரம் செய்ததாகத் தெரிகிறது. சீர்திருத்தம்—பகுத்தறிவு என்கிற பெயர்களில் சமயத்தையும், மரபுப்படி வந்த கட்டுப்பாடுகளையும் அவமதிக்கின்ற போக்கு அக்குழுவினருக்கு முன்பு ஏற்பட்டிருந்ததால் அவர்களைக் கண்டே அஞ்சியும் வெறுத்தும் வந்த பலர்கூட, இப்போது அவர்கள் கௌரவமாகப் பிரசாரம் செய்ததாகச் சான்று கூறியிருக்கிறார்கள். தேர்தல்கள் முக்கியமானவைதாம். ஆனால் அவற்றைவிட, முன்பு துவேஷம் நிலவி வந்த வகுப்பினருக்கிடையே தற்போது ஏற்பட்டு வரும் ஒற்றுமையும், அநுதாபமுமே அதிக முக்கியமானவை எனக் கருதுகிறேன்.

* * *

சீனத்தின் உள்நாட்டு நிலவரம் கொந்தளிப்பில் இருப்பது, கம்யூனிஸ்டுகளின் வீச்சுக்கு அருகிலுள்ள நாடுகளுக்கு நல்லதல்ல. சீனக் கொந்தளிப்பு பற்றி இந்நாடுகள் மகிழ இடமில்லை. மாறாக, இந்த உள்நாட்டு நிலை காரணமாகவே கம்யூனிஸ்ட் தலைவர்கள் தேசத்தின் கவனத்தையும் சக்தியையும் வெளிநாட்டு ஆக்கிரமிப்பில் திருப்பிவிடக் கூடும். ருஷியாவையும் அமெரிக்காவையும் அலைக்கழிக்கச் சீனத்தால் முடியாது; எனவே இது பற்றிச் சீனம் நினைக்காது. ஆனால் சீன எல்லையில் உள்ள ஆசிய நாடுகளின் மீது பார்வையைத் திருப்புவது அதற்குச் சுலபமானதே என்பதை நினைவுகொள்வோம்.


* * *

சென்னை ராஜ்யத்தில் காங்கிரஸின் வீழ்ச்சிக்குச் சிகரம் வைத்தாற்போல் அமைந்தது ஸ்ரீ காமராஜர் தமது சொந்த விருதுநகர் தொகுதியில் தோல்வியுற்றது. சென்னை ராஜ்ய கல்லூரி மாணவர்களுக்கு உரியது இந்த வெற்றி. ஸ்ரீ ஸ்ரீநிவாசன், எம்.ஏ., பி.எல். ஒரு மாணவர் தலைவர். சென்னை ராஜ்யத்தின் பல பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் வந்து அவரது தேர்தல் பிரசாரத்துக்கு உதவினர்.

இச் சமயத்தில் தமது அரசியல் கொள்கைகளில் அவருக்கு இருந்த பற்றுதல் மட்டுமின்றி சரீர பலமும் துணிச்சலுமே கூட அவருக்குத் தேவைப்பட்டன. காமராஜரின் தோல்வி காங்கிரஸுக்கு எதிராக உருவான இளைஞர் சமுதாயத்தின் புரட்சி அடைந்த வெற்றியாகும். ஜனநாயகப் பற்று கொண்ட அனைவரது நன்றியையும் பெற ஸ்ரீ ஸ்ரீநிவாசன் தகுதியுடையவராகிறார்.

* * *

பெரும் புகழ்பெற்ற அணு விஞ்ஞானி டாக்டர் ஒப்பன்ஹைமர் காலமாகிவிட்டார். சகல வைத்திய வசதிகளும் கிடைக்கக்கூடிய அமெரிக்காவில் அறுபத்திரண்டு வயது என்பது சாகும் பிராயம் அல்ல. அணு ஆயுதச் சோதனைகளைத் தடுக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்வதற்காக நான் அமெரிக்கா சென்றிருந்த போது ஒப்பன்ஹைமர் என்னை வந்து பார்த்தார். அதை ஒரு பெரிய கௌரவமாக எண்ணுகிறேன். அவர் விஞ்ஞானியாக மட்டும் பெரியவரல்ல; மனிதர் என்ற முறையிலேயே பெரியவர். அணு ஆயுதம் என்பது ஒரு தார்மிகப் பிரச்னை பற்றிய விஷயம் என்று அவர் கருதினார். அணு ஆயுதத் தயாரிப்புக்கு உதவ மறுத்தார். அணுப்பிளப்பு பற்றி தாம் அறிந்திருந்த உண்மைகளை அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல் இருந்தார். இது ஒரு பெரிய சர்ச்சைக்குரிய விஷயமாயிற்று. பொய் சொன்னதாக அவர் மீது குற்றம் சாட்டினார்கள். ஆனால் ஹைட்ரஜன் குண்டு பயங்கரத்திலிருந்து உலகைக் காப்பதையே அவர் பெரிதாக மதித்தார்.


காங்கிரஸ் ஆட்சி
ஒரிஸ்ஸா
தமிழ்நாடு
கேரளா
ஸ்திரமான மாளிகை!

சளியை அறவே அகற்ற புதிய சக்தி



அனேலியம்

மற்றெந்த மருந்தையும் விட அதிகப் பயன் தருவது

துரித நிவாரணம்
சருமத்தினுள்
சீக்கிரத்தில் செல்கிறது

கறை ஏற்படுத்தாதது
பிசுக்குத் தன்மையும் குறைவே

மென்மை மிக்கது
பச்சைக் குழந்தைகளின்
பூவுடலுக்கும் கூட உகந்தது

அனேலியத்தை உபயோகிக்கும் முறை

1. மார்பில் தடவித் தேய்க்கவும்
2. கழுத்தில் பூசிக்கொள்ளவும்
3. மூக்கின் இருபுறமும் தடவவும்
4. அனேலியத்தை வெந்நீரில் கரைத்து, அதன் ஆவியை உள்ளிழுக்கவும்

சளி பிடிக்கும்வரை காத்திராதீர் - இன்றே அனேலியம் வாங்குங்கள்

என்ன சேதி?

■ உவகையூட்டும் விஷயம்!

■ சபாஷ் சென்னை!

■ நிஜாம் மறைவு

ஜாதி பேதத்தையும் பயத்தையும் விடுத்து ஐயப்பாட்டினை எல்லாம் அகற்றித் தி. மு. க.வுக்கு ராஜாஜி கேட்டுக்கொண்டபடி எல்லாரும் வாக்களித்திருப்பது கண்கூடு.

'காங்கிரஸ் வேண்டாம்' என்று தமிழ்நாடு சீட்டுக் கிழித்ததற்கு முக்கியமான காரணங்கள் காங்கிரஸின் நிருவாக முறைகளினால் ஏற்பட்ட விலைவாசி உயர்வும் காங்கிரஸின் ஆட்சிமொழிக் கொள்கையுமாகும். வரிக் கொடுமையும், உணவின்மையும், மற்ற இன்னல்களும் எல்லா மாநிலங்களுக்கும் பொது. இவற்றோடு ஹிந்தி ஏகாதிபத்தியத்தையும் தமிழகம் எதிர்த்து நின்றது. இது தமிழ்நாட்டுத் தேர்தல் முடிவுகளை நிர்ணயித்த முக்கியமான அம்சங்களில் ஒன்று. இதை நமது அடுத்த மத்திய சர்க்கார் நன்ருகப் புரிந்து கொண்டு ஆவன செய்ய வேண்டும். இந்த உண்மையைத் தில்லிக்கு எடுத்துக்காட்டுவதில் ராஜ்ய சர்க்கார் முழுமூச்சுடன் ஈடுபடும் என்பதைத் திரு அண்ணுதுரையின் நிருபர் கூட்ட உரையிலிருந்து அறிந்து பேருவகை அடைகிறோம். தமிழகத்தில் காங்கிரஸ் அரசு செய்யத் தவறிய காரியத்தைத் அக்கறையுடன் செய்யவிருக்கும் தி. மு. க. இன்றைய மக்களுக்கு மட்டுமின்றி வருங்கால வாரிசுகளுக்கும் பேருதவி புரிந்த பெருமையை அடையுமாக!


'தில்லி இந்தியாவின் அரசியல் தலைநகரமாயினும் சென்னையை ஓர் அறிவுத் தலைநகரமாக மதிக்கிறேன்' என்று ஜவாஹர்லால்ஜி கூறுவது வழக்கம். பன்னிரண்டு சட்டசபை ஸ்தானங்களுக்கும் சரி, இரு மக்கள் சபை ஸ்தானங்களுக்கும் சரி காங்கிரஸை அடியோடு கைகழுவிவிட்ட அறிவுத் தலைநகரின் தீர்ப்புக்குத் தனி மதிப்புத் தரத்தான் வேண்டும்.

அறிவுத் தலைநகரை மட்டும் சொல்வானேன்? மத்திய ஆட்சி பீடம் அமைந்துள்ள அரசியல் தலைநகரான தில்லியும் காங்கிரஸைவிடப் பெரும்பான்மையான ஸ்தானங்களுக்கு ஜனசங்கத்தைத்தான் தேர்வு செய்துள்ளது.

இந்த இரு மாநகரங்களின் முடிவு அகில பாரதத்திலுமுள்ள விஷயமறிந்த மேன்மக்களின் முடிவுக்கு ஓர் உருவம் எனலாம்.

ஹைதராபாத் நிஜாம் என்று சொன்னவுடனேயே இரு வேறு சித்திரங்கள் மனத்தின் முன் தோன்றும். பழங்காலக் கதைகளில் மட்டுமே கேள்விப்பட்டுள்ள அபரிமிதமான செல்வச் செழிப்பும், பொற்கட்டிகளும், ரத்தினக் குவியலும் ஒரு சித்திரம். இவ்வளவுக்கும் அதிபராக இருந்த போதிலும் எளிமையிலும் எளிமையாகச் சாமானிய மனிதர் போல் வாழ்ந்த நிஜாமின் தோற்றம் இன்னொரு சித்திரம். அவரைப் போல் தனிகரும் இருந்ததில்லை; அவரைப்போல் எளியவரும் இருந்ததில்லை.

நிஜாம் அவர்கள் ஹைதராபாத்தின் மன்னராகச் செங்கோல் ஓச்சிய காலத்தில் மக்கள் நலனுக்காகச் செய்த அபிவிருத்திகள் பலப் பல. இது காரணமாகவே அவர் ராஜ்யாதிகாரத்தை இழந்தபின்னரும் மக்களால் பெரிதும் மதிக்கப்பெற்று வந்தார்.



நிஜாம் அவர்கள் தெய்வபக்தி நிறைந்தவர். மெத்தப் படித்தவர். கவியாகப் புகழ் பெற்றவர். உதார சித்தமுள்ளவர். ஒஸ்மானியா சர்வகலாசாலை அவரது கொடைச் சிறப்பை என்றும் எடுத்தியம்பி வரும். காசி ஹிந்து சர்வகலாசாலை, சம்ஸ்கிருத அபிவிருத்திக்குப் பெரும் பணி புரியும் பண்டார்கர் நிலையம், இந்தியப் பண்பாட்டுக்காகத் தாகூர் நிறுவிய சாந்திநிகேதனம் ஆகியவற்றுக்கும் அவர் வாரி வழங்கியதிலிருந்து அவரது தாராள மனப்பான்மையையும், சமத்துவ நோக்கையும் உணரலாம்.

நிஜாம் அவர்களின் மறைவில் ஒரு புகழ் பெற்ற அரசப் பெருங்குடியின் சரிதம் முடிந்துவிட்டது.

காமராஜரை வென்றவர்



முதல் நாள் வரை மாணவராகக் கருதப் பட்ட இளைஞர் மறு நாள் ஓர் அரசியல் வெற்றி வீரராக மாறிவிட்டார் என்பது கண்டு தமிழகம் — ஏன் பாரதமே வியக்கிறது. இந்த வியப்புக்கும் பெருமைக்கும் பாத்திர மான இளைஞர், விருதுநகர்த் தொகுதியில் சென்னை சட்டசபை வேட்பாளராக நின்று அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் திரு காமராஜரைவிட அதிகப்படியான வோட் டுக்கள் பெற்று வெற்றி கண்ட அதிசயத்தை நிகழ்த்திய திரு பி. சீனிவாசன்தான்!

ஐம்பது நாட்களுக்கு மேலாக, இரவு பகல் வித்தியாசமில்லாமல் தம்முடைய சக மாணவர் கோஷ்டியுடன் தாம் நின்ற தொகுதியில் கிராமம் கிராமமாக, வீடு வீடாக, நபர் நபராக நேரில் கண்டு தம் கொள்கைகளை வலியுறுத்தி அவர்களுக்குப் புரிய வைத்ததுதான் அவருடைய வெற்றி யின் ரகசியம் எனத் தெரிந்து கொள்ள முடிந்தது. நூற்று அறுபத்தெட்டு கிரா மங்கள், எண்பத்தி மூவாயிரம் வாக்காளர்கள் என்றால் சும்மா தானா?


"தமிழ்நாட்டு அரசாங்கம் கடைப்பிடித்து வந்த கொள்கைகள் பலவற்றில், குறிப்பாக அவர்களுடைய மொழிக் கொள்கை எனக் கும் என் போன்றவர்களுக்கும் ஆத்திரத்தை ஊட்டுவதாக இருந்தது. இதை எதிர்த்துச் சுட்டிக் காட்டுவதற்காக நான் 1962 - ம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலேயே பங்கு கொள்ள முயன்றேன். ஆனால் அப்போது எனக்கு ஒரு வேட்பாளராக நிற்பதற்கான வயது ஆகவில்லை என்று நிராகரித்துவிட் டார்கள். அப்போதிருந்தே எப்படியாவது அடுத்த தேர்தலுக்கு நின்று விடுவது என்று முடிவு செய்து விட்டேன். அந்த ஆண்டுத் தேர்தல் முடிவுகளை அலசி அலசி ஆராய்ச்சி செய்வது என்னுடைய அன்றாட வேலைகளில் ஒன்றாகி விட்டது. இன்றைக்கு எனக்குக் கிட்டியிருக்கும் வெற்றிக்கு இந்த ஆராய்ச்சி ஓர் அடிப்படையான காரணம் என்றுகூடச் சொல்லலாம்.



"இடையே 1965-ம் ஆண்டில் நடந்த ஹிந்திப் போராட்டம் மாணவர்களின் உள்ளங்களிலே அரசாங்கத்தினிடம் தீராத வெறுப்பைத் தோற்றுவித்து விட்டது. இதுவும் என்னுடைய தேர்தல் தீவிரத்தை அதிகப்படுத்த உதவியது. என்னுடைய மாணவ நண்பர்கள் என்னை விடாமல் ஊக்கிக் கொண்டிருந்தார்கள்! அவர்கள் எனது இந்த வெற்றிக்கு அளித்த உதவியை வார்த்தைகளால் மதிப்பிட முடியாது" என்று ஆரம்பித்தார் திரு சீனிவாசன்.

"உங்கள் சென்ற தேர்தல் ஆராய்ச்சி எந்த வகையில் உங்களுக்கு உதவியது?"

''சென்ற தடவை காங்கிரஸ் கட்சிக்கு எதிராக இந்தத் தொகுதியில் நின்றவருக்கு எந்தெந்த வகைகளில் சரிவு ஏற்பட்டது, அவருக்கு எங்கெல்லாம் ஒத்துழைப்பு சரியானபடியில்லை, ஏன் இல்லை என்றெல்லாம் அலசிப் பார்த்துத் தெரிந்து கொண்ட பிறகு என் திட்டங்களைத் தயார் செய்து கொண்டேன். விருதுநகர், ஓர் ஊரைத் தவிர அந்த வட்டாரத்திலுள்ள பல ஊர்களில் சமுதாய வாழ்வின் ஆதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய யாரும் இதுவரையில் வழி செய்ததாகத் தெரியவில்லை. பாதைகள் நேராக இல்லாமற் போனாலும், வசதிகள் இல்லாமற் போனாலும் ஒவ்வொரு கிராமத்துக்கும் போய் ஒவ்வொரு வாக்காளரையும் நேரில் சந்தித்துப் பேச முனைந்தேன். பலருக்குக் காங்கிரஸ் கட்சியைத் தவிர வேறு கட்சி ஏதும் தமிழ் நாட்டில் இருப்பதாகவே தெரியவில்லை.



தேர்தல் தினத்தில் ஒவ்வொரு சாவடியிலும் மேற்பார்க்க என் நண்பர்கள் முன்வந்தார்கள். பயந்து சிதறி ஓடும் வாக்காளர்களை வரிசைப்படுத்தி அனுப்பி வைக்கும் பொறுப்பைக்கூட அவர்கள் சில இடங்களில் ஏற்க நேர்ந்தது. என் நண்பர்கள் ஆங்காங்கு கிடைத்ததை வைத்துக் கொண்டு சமையல் செய்து சாப்பிட்டு, சுகத்தையும் சிரமத்தையும் மறந்து தொண்டு செய்தார்கள்.

''நாற்பதுக்கு மேற்பட்ட என் நண்பர்கள் மேடைப் பேச்சில் வல்லவர்கள். எங்கள் கட்சியின் திட்டத்தையும் கொள்கைகளையும் தெளிவாகப் பாமர மக்களுக்கு எடுத்து விளக்கினார்கள்.''

''மக்கள் உங்கள் வேண்டுகோளையும் லட்சியங்களையும் புரிந்து கொண்டார்களா ?''

''பலருக்குப் புரிந்தது. சிலருக்குப் புரியவொட்டாமல் செய்ய ஒரு கும்பலே வேலை செய்தது. நாங்கள் எங்கு சென்றாலும் ஒரு கும்பல் எங்களைத் தொடர்ந்து கொண்டிருந்தது. நாங்கள் ஜாக்கிரதையாக, கண்ணியமாக ஒதுங்கி நின்று செயல்படவேதான் விரும்பினோம். 'பெரிய பேராலி' என்ற கிராமம் என்று ஞாபகம். அங்கு சிலர் எங்களை வம்புக்காக வழிமறித்தார்கள். அப்படி மறித்தவர்களில் ஒரு நபர், என்னை இந்தத் தேர்தலுக்குள் தீர்த்துக் கட்டிவிடுவது என்று சபதமே செய்திருந்தாராம்!

இன்னொரு கிராமம். சின்னப்பரெட்டிப் பட்டி என்று ஞாபகம். ஆண்பிள்ளைகளெல்லாம் வோட்டுச் சாவடிக்குச் சென்றிருந்தார்கள். சில வயோதிக ஸ்திரீகள்தாம் இருந்தார்கள். அந்தக் கிராமத்தினர் என்னிடம் அநுதாபம் கொண்டவர்கள் என்று சில முரடர்கள் தீர்மானித்து விட்டார்கள். அதற்குப் பழி வாங்கும் நோக்கத்துடன் ஒரு வைக்கோல் போருக்குத் தீ வைத்துவிட்டார்கள்! நல்ல வேளை. அது கிராமத்துக் குடிசைக்குத் தாவு முன்பு அந்த வழியாகப் பக்கத்து ஊர் வோட்டுச் சாவடிக்குச் சென்று கொண்டிருந்த என் நண்பர்கள் நின்று தீயை அணைத்துத் தைரியம் சொல்லி விட்டுப் போனார்கள்.''

''இந்த மாதிரி பயமுறுத்தல் செய்கைகள் உங்கள் ஊக்கத்தைப் பாதிக்கவில்லையா ?''

''முதலாவது நான் இந்த வட்டாரத்தைச் சேர்ந்தவன். இந்த மாவட்டக்காரன். சலசலப்புக்கு அஞ்சாதவன். போராட்டம் என்பது என் வாழ்க்கையுடன் கூடவே பிறந்தது. மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் படித்தபோது அப்போது ஹாஸ்டல் நிர்வாகத்துடன் ஏற்பட்ட மாணவர் போராட்டத்தில் பங்கு

கொண்டேன். அதன் விளைவு பி. ஏ. வகுப்பில் எனக்கு அங்கு இடம் கிடைக்கவில்லை! மதுரை தியாகராசர் கல்லூரியில் பி. ஏ. படித்தேன். அங்கே கல்லூரி முதல்வருடனேயே மோதல். எம். ஏ. வகுப்பில் இடம் கேட்டுப் போய் நின்றபோது கையை விரித்து விட்டார்கள். பட்டினத்துக்கு எதற்கோ வந்தவன் பச்சையப்பன் கல்லூரியில் எம். ஏ. வகுப்பில் புகுந்தேன். 1961ம் ஆண்டு இறுதியில் என்று நினைக்கிறேன். ஓர் அரசியல் தலைவர் மொழிக் கொள்கை பற்றிப் பேசியது கேட்டு மனம் பொறுக்காமல் ஒரு மாணவர் ஊர்வலம் ஏற்பாடு செய்து அதன் முன் நின்று நடத்திச் சென்றேன். நேராக செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குள் புகுந்தேன். அன்று முதல் மந்திரி திரு காமராஜர். நான் ஒரு சாதாரண மாணவன்! அவரிடம் எங்கள் ஊர்வலத்தின் லட்சியத்தை எடுத்துச் சொல்ல முயன்றபோது அவர் அலட்சியத்தோடு, 'உங்களையெல்லாம் யார் கல்லூரிகளுக்கு வரச் சொன்னார்கள்?' என்ற ரீதியில் பேசினார். அந்த இடத்திலேயே, அந்த நேரத்திலேயே என் உள்ளத்திலே ஒருவித ஆவேச வித்து விழுந்து விட்டது.

''அந்த வித்து ஐந்து வருடங்களாக வேர் விட்டு வளர்ந்து மரமாக மாறியது. நான் எங்கள் தலைவர் அண்ணாவிடம் போய் எனக்கு விருதுநகர்த் தொகுதியில் நிற்க அனுமதி கொடுக்கும்படி வேண்டியபோது அவர் தயங்கினார். ஆனால் நூற்றுக்கணக்கான என்னுடைய மாணவ நண்பர்கள் எனக்காக அவரிடம் வந்து வாதாடிய பிறகும், அவரே நேரில் அந்தப் பகுதிகளுக்கு வந்து பார்வையிட்டுத் திரும்பிய பிறகும் தான் எனக்கு அரைமனத்துடன் அனுமதி கிடைத்தது.

''எனக்காக டிபாசிட் பணத்தைக்கூட என் நண்பர்களே வசூலித்துக் கட்டிவிட்டார்கள். தேர்தல் செலவுகளுக்கும் அவர்களே நன்கொடைகள் சேகரித்தார்கள். தேர்தலுக்காக உழைத்த மாணவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்துக்கு மேலே போயிற்று.

''பச்சையப்பன் கல்லூரிக்குப் பிறகு நான் சட்டக் கல்லூரியில் சேர்ந்து படித்தபோது தான் ஹிந்திப் போராட்டம். இதில் ஈடுபட்ட எனது நட்பு மாணவர்களின் வட்டம் வெகுவாக விரிவடைந்தது. தேர்தலுக்கு உழைக்க அவர்கள் எங்கிருந்தெல்லாமோ உற்றார் உறவினர் திருமண வைபவங்களுக்கு வருவது போல் வந்து சேர்ந்தார்கள். எந்தக் கணத்திலும் நான் மனம் தளராமல் இருக்கும்படி அவர்கள் பார்த்துக் கொண்டார்கள்.''

''அகில இந்திய செல்வாக்குப் பெற்றவரை எதிர்த்து நிற்கிறோமே என்று உங்களுக்குக் கொஞ்சம்கூடக் கலக்கம் உண்டாகவில்லையா?''


''இல்லை! எனக்கு மக்களிடம் நம்பிக்கை இருந்தது. சமீபத்தில் நம் நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண விலைவாசி உயர்வு கிராம மக்களின் பொருளாதாரத்தை மிகவும் பாதித்திருக்கிறது. சர்க்கார் இதுபற்றி ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லையே என்ற ஆத்திரம் அவர்கள் உள்ளத்தில் நிலவியிருக்கிறது. சர்க்காரை மாற்றினால்தான் அவர்கள் துன்பம் குறைய வழி உண்டு என்று அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அது தங்கள் கையிலேயேதான் இருக்கிறது என்பது மாத்திரம் இத்தனை நாட்களாக மக்களுக்குத் தெரியாமல் இருந்தது. உணவுப் பிரச்னையும் மொழிப் பிரச்னையும் சேர்ந்து வந்தபோது, அவர்கள் தங்கள் சக்தியைப் புரிந்து கொண்டார்கள்! சரியானபடி உபயோகித்தார்கள்.''

''இப்போது நீங்கள் ஒரு சட்டசபை அங்கத்தினர். உங்கள் தொகுதியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''

''என் தொகுதிக்குப் பல அபிவிருத்திகள் தேவை; உடனடியாகத் தேவை. நல்ல ரஸ்தாக்கள், ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள் எல்லாமே அந்த வட்டாரத்தின் உட்பகுதியில் அபூர்வச் சரக்குகளாக இருக்கின்றன! அந்த வசதிகளெல்லாம் மக்களுக்குக் கிட்ட நான் முழுமூச்சுடன் பாடுபடுவேன்!

''தலைவர் சொல்படி நடக்க வேண்டிய திராவிட முன்னேற்றக் கட்சியில் நான் ஒரு சாதாரணத் தொண்டன். இதை நான் எந்நாளும் மனத்தில் உறுதியாக வைத்துக் கொண்டிருப்பேன்.''

— நமது நிருபர்



கொழும்பு செட்டியார் வர்த்தக சங்கத்தின் தலைவர் திரு ஆர். எம். பழனியப்ப செட்டியார் இலங்கையில் இந்திய ஹைகமிஷனராக இருந்து தாயகம் திரும்பிய டாக்டர் பீம்ஸென் சச்சாருக்கு ரத்மலானை விமான நிலையத்தில் மாலையணிவித்து வழியனுப்பினார். அருகிலிருப்பவர் இந்திய — இலங்கை நட்புறவுச் சங்கக் கூட்டுக் காரியதரிசி டாக்டர் திரு எஸ். சிவசுப்பிரமணியம்.

பயிர் செழிக்க நெருப்பு!

உண்மைதான், பயிர் செழிக்க நெருப்பு பயனாகிறது! பயிர்களுக்கிடையில் களை பிடுங்க வேண்டியது மிக அவசியமல்லவா? அதற்கு பிரிட்டனில் ஓர் இயந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது நெருப்பைக் கக்குகிறது. வரிசை வரிசையாக உள்ள பயிர்களுக்கு இடையில் இந்த இயந்திரம் நகரும்போது இதிலுள்ள மண்ணெண்ணெய் பற்றி எரிந்து அனல் கக்குகிறது. அனல் புல் பூண்டுகளை எரித்துச் சாம்பராக்கி விடுகிறது. ஒரு மணி நேரத்தில் இந்த இயந்திரத்தின் துணை கொண்டு ஏழு ஏக்கர் நிலத்தில் களை எடுத்து விடலாம்! தேவையான அளவுக்குத் தீயின் உக்கிரத்தைக் கூட்டவோ குறைக்கவோ வசதி உள்ளது. இருபத்தோர் அடி நீளமுள்ள இந்த இயந்திரத்தில் இருபது அனல் கக்கும் வாய்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் இரண்டு பயிர் வரிசைகளுக்கு இடையில் புகுந்து புல்பூண்டுகளை அழித்துக் கொண்டு முன்னேறும்!

ஃ ஃ ஃ

சென்னை மவுண்ட் ரோட்டில் போக்குவரத்து சிக்னல் விளக்குகளை இன்னும் முழுமையாக வைத்து முடிக்கவில்லை. என்னென்னவோ ஆராய்ச்சிகள் நடக்கின்றன; இடையூறுகள் கிளம்புகின்றன. ஜெமினி ரவுண்ட் டானாவில் சிக்னல் விளக்குகளை வைத்துவிட்டுப் பிறகு சரிப்பட்டு வரவில்லை என்று எடுத்து விட்டார்கள்.

லண்டனில் நிலைமையைப் பாருங்கள். மேற்கு லண்டன் பகுதியில் ஆறு சதுர மைல் பரப்பளவுக்கு உள்ள சாலைகளில் போக்குவரத்து முழுவதும் இனி தானியங்கு முறையில் கம்ப்யூட்டர் துணை கொண்டு கட்டுப்படுத்தப்படும்! இந்தப் பகுதியில் எழுபது இடங்களில் சிக்னல் விளக்குகள் உள்ளன.

பச்சை சிவப்பு விளக்குகளை அணைத்து ஏற்றுவது மட்டுமல்ல; சில சமயங்களில், போக்குவரத்து மிக அதிகமாகிச் சிக்கல் ஏற்படும்போலிருந்தால் இடதுபுறமோ வலது புறமோ திரும்பக் கூடாது என்று தடை விதிக்கும் சிக்னல் விளக்குகளையும் இந்தக் கம்ப்யூட்டர் சமயத்துக்கு ஏற்றபடி பொருத்தும். இதைவிடப் பெரிய அதிசயம் ஒன்றையும் இந்தக் கம்ப்யூட்டர் இயந்திரம் சாதிக்கிறது. மவுண்ட் ரோடில் ஆறு பகுதிச் சாலை அமைந்துள்ளது அல்லவா? போகும் கார்களுக்கு மூன்று பகுதிகளும் வரும் கார்களுக்கு மூன்று பகுதிகளுமாகப் பிரிந்துள்ளது. ஆனால் காலையில் டவுனை நோக்கிப் போகும் கார்கள் மிகுதியாகவும் மாலையில் டவுனிலிருந்து வரும் கார்கள் மிகுதியாகவும்தான் இருக்கும் அல்லவா? வரும் கார்களை விடப் போகும் கார்கள் மிகுதியாக இருந்தால் போகும் கார்களுக்கு நான்கு பகுதிகளும் வரும் கார்களுக்கு இரண்டு பகுதிகளுமாக மாற்றி அமைக்கலாம் அல்லவா? அப்படி மேலே குறிப்பிட்ட கம்ப்யூட்டர் லண்டனில் செய்கிறது. தானாகவே – தானியங்கு முறையில்! போக்குவரத்துத் தேவைகளுக்கு ஏற்பச் சாலைப் பகுதிகளை மாற்றியமைத்துத் தருகிறது! நெரிசல் மிகுதியாக உள்ள திசைக்கு அதிகச் சாலைப் பகுதிகளையும் நெரிசல் குறைவாக உள்ள திசைக்குக் குறைவான சாலைப் பகுதிகளையும் பிரித்துத் தருகிறது.

எல்லா முக்கிய நாற்சந்திகளிலும் டெலிவிஷன் காமிராக்களைப் பொருத்தி அவை எடுக்கும் படங்களைப் பார்த்து, இந்தக் கம்ப்யூட்டர் முறை சரியாக இயங்குகிறதா என்று போக்குவரத்துப் போலீஸாரின் தலைமைக் காரியாலயம் சதா கண்காணித்து வருகிறது!

ஃ ஃ ஃ

இதயத் துடிப்பைக் கேட்க டாக்டர் பயன்படுத்தும் ஸ்டெத்தாஸ்கோப்பு நம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். அது கண்டு பிடிக்கப்பட்டது எப்படி? லேய்ன்னீ என்ற விஞ்ஞானி சில குழந்தைகள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர்கள் ஒரு மரக்கட்டையை வைத்துக் கொண்டிருந்தனர். ஒரு குழந்தை அதன் ஒரு புறத்தில் குண்டூசியால் கீற, அந்த ஒலியை மறுபுறத்தில் மற்றொரு குழந்தை தெளிவாகக் கேட்டு மகிழ்ந்தது. இதைக் கண்ட விஞ்ஞானி துள்ளிக் குதித்தார். அதற்கு முன்னால் இதயத் துடிப்பை அறிய டாக்டர்கள் நோயாளிகளின் நெஞ்சில் தங்கள் காதைப்



பொருத்தித்தான் கேட்பார்கள். லேய்ன்னீ ஒரு பேப்பரைக் குழாய் போல் சுருட்டி இதயம் உள்ள பகுதிக்கு மேலாக வைத்துக் கேட்டார். துடிப்பைத் தெளிவாக உணர முடிந்தது. அப்புறம் இவர் மரத்தாலான— ஒரு பக்கம் 'ஃபனல்' போன்ற முக்கோண அமைப்புக் கொண்ட – குழலைப் பயன்படுத்தினார். இதன் பிறகுதான் சிறிது சிறிதாக இதன் அமைப்பு முன்னேறி இன்றைய ஸ்டெத்தாஸ்கோப்பாக விளங்குகிறது. 'ஸ்டெத்' என்பதற்கு 'நெஞ்சு' என்றும், 'ஓ' என்பதற்கு 'நான் பார்க்கிறேன்' என்றும் பொருள். 'ஸ்கோப்' என்றால் 'பரிசோதித்தல்' என அர்த்தம். கிரேக்க மொழி.



மிஸ் இந்தியா, மிஸ் உலகம் என்ற பட்டத்தையும் பெற்றபோது ''அழகை மட்டுமல்ல புத்திசாலித் தனத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டோம்'' என்றார்கள் லண்டனிலே அழகுப் போட்டி நிர்வாகிகள். நாய் அழ(கி)கன் போட்டிக்குப் பின்னர் அவற்றுக்கு அறிவுப் பரீட்சையும் உண்டு.

''ஊய்... உர்...உர்... ம்ம்ம்...லொள்! லொள்...... ஃபா... ஃபா....!'' ஏதும் திரைப்பட இசை அமைப்பாளர்களின் இசைக் குறிப்பாக இருக்கும் என்று சந்தேகப் படுகிறீர்களா? நம் இசை அமைப்பாளர்கள் செவிகளில் இந்த ஒலிக் கதம்பம் விழுந்திருந்தால் அதை உபயோகிக்காமல் விட்டு விடுவார்களா? ஆனால் அன்று கார்ப்பொரேஷன் ஸ்டேடியத்தில் எந்த இசை அமைப்பாளரையும் பார்த்ததாக எனக்கு நினைவில்லை.

சென்னை 'கென்னல் கிளப்'பின் பதினேழாவது' நாய்கள் கண்காட்சியைத்தான் குறிப்பிடுகிறேன்.

அந்த வேளையில் அந்தப் பக்கமாக நடந்து சென்ற போது கேட்ட ஒலிக் கதம்பத்தைத் தான் மேலே குறிப்பிட்டேன்! அதிலும் ஒருவித இன்பம் இருக்கத்தான் செய்கிறது.

இருள் கவ்விக் கொண்டே வருகிறது. பார்த்துக் கொண்டே நடக்கிறேன். ''இது என்ன? இன்றைக்கு 'நாய்க் கண்காட்சி' என்றுதானே கேள்விப்பட்டோம். குதிரைக்



நாய் அழகன்-'67



குட்டி, கன்றுகுட்டிகளுக்குக் கூட ஏதும் காட்சியா?'' என்று திடுக்கிடுகிறேன். சற்று அருகிலே போன பிறகு அதுவும் ஒரு நாய் தான் என்று தெரிய வருகிறது! அத்தனை பெரிது !

'கிரேட் டன்' (Great Dane) என்ற பிரிவைச் சேர்ந்த அந்த ஆஜானுபாகுவான நாயை அதன் சொந்தக்காரர் திரு ராமகிருஷ்ணன் அன்புடன் தடவிக் கொடுத்துக் கொண்டிருக்கிருர்.

''இதற்குப் பெயர் 'ஜிப்ரால்டர்' ஆனுல் நாங்கள் இதை







வீட்டில் 'மணி' என்றுதான் அழைக்கிறோம். இரண்டரை வயது தான் ஆகிறது.''

'மணி' என்ருல் தெருக்காரர்களுக்கே கொஞ்சம் பீதி உண்டாம். அதன் குரல் அப்படி. ஆடு, மாடு முதலியவற்றைக் கண்டால் பாய்ந்து விடும். ஆனுல் தெரு நாய்களைக் கண்டால் காலால் அலட்சியமாக, உதைத்துத் தள்ளும். தினம் மூன்று பவுண்டு இறைச்சி அரைப் பவுண்டு அரிசி, அரைப் பவுண்டு எலும்புத்தூள் மூன்றையும் சேர்த்து ஒரு கை பார்க்கும் மணிக்குச் சில சமயங்களில் இரவில் பசி எடுத்துவிடும். அப்போது அது எழுப்பும் சப்தம் வேறு மாதிரியாக அடக்கமாக இருக்கும். அது மாத்திரமல்ல ! யஜமானி அம்மாவின் புடவைத் தலைப்பை இழுத்துச் சமிக்ஞை செய்யும். அவர் அதைப் புரிந்து கொள்வார்.

ஓய்வுபெற்ற கால் நடை வைத்தியர் திரு கல்யாண சுந்தரம் பக்கத்திலேயே இருப்பதால் 'மணி'க்கு ஒரு தும்மல் ஜலதோஷம்கூட வராமல் பார்த்துக் கொள்கிருர். இதுவரையில் இந்த மணியிஞல் அக்கம் பக்கத்தவருடன் எந்தவிதமான சண்டையும் ஏற்பட்டதில்லை.

'மணி'க்கு டாட்டா சொல்லிவிட்டு மேலும் நடக்கிறேன். பக்கத்தில் விசும்பல் ஒலி கேட்கிறது. அதுவும் நாகரிகமாக உடை அணிந்த ஒரு பெண்மணியின் பக்கத்திலிருந்து வருகிறது. ஏதாவது நகை நட்டுக்களைக் காணுமல் போக்கிவிட்டு வருத்தப்படுகிருளோ என்ற பிரமை தோன்றுகிறது. ஆனுல் சற்று அருகே சென்று பார்த்தபோது அந்த அம்மணியின் கையிலிருந்த சிறிய வெள்ளை நாயின் கொஞ்சல் உறுமல்தான் விசும்பல் ஒலியாகப் பரவியிருக்கிறது என்று தெரிந்து கொள்கிறேன்.

அந்த நாயை அறிமுகப்படுத்தி வைக்க அதன் உரிமையாளர் திரு ஜனர்த்தனம், விரைந்து வருகிருர். ''இந்த ஜாதிக்குப் பெயர் 'பக்' (Pug)'' என்று சொல்கிருர். ''இதன் மூதாதையர்கள் சீனுவைச் சேர்ந்தவர்கள். அப்புறம் அங்கிருந்து இங்கிலாந்துக்குக் குடியேறிஞர்கள். இங்கிலாந்தில் அவர்களுக்கு மௌசு ஜாஸ்தி. டியூக் ஆப் வின்சர், இந்த ஜாதி நாய்களில்



ஐம்பதுக்கு மேல் வைத்திருந்தார். இதற்கு இப்போது கிட்டத்தட்ட ஒரு வயது ஆகிறது. இதன் இன்றைய விலை ரூபாய் இரண்டாயிரத்துக்கு வரும். நல்ல சாப்பாட்டு ராமன் ரகம். மாமிசம்,—பால், சாதம் மூன்றையும் ஒன்றாகக் கலந்து கொடுக்க வேண்டும்.

''இந்த ஜாதிக்கு மூன்றே நிறங்கள். ஸில்வர், ஆப்ரிகாட், கறுப்பு. இதன் வால் கறுப்பாகத்தான் இருக்க வேண்டும் என்பது ஒரு சம்பிரதாயம்! இதன் வாலைப் பார்த்தீர்களா? அது இரட்டைச் சுருளாகப் பிரிமனை மாதிரி இருக்கிறதல்லவா? வாலில் இரட்டைச் சுருள் விழுந்த நாய்க்கு ஒற்றைச் சுருள் விழுந்த நாயைவிட மதிப்பு ஜாஸ்தி. முகத்தில் அதிகச் சுருக்கங்கள் இருந்தால் அதிக மதிப்பு!'' திரு ஜனார்த்தனம் தொடர்ந்து ஏதோ சொல்லிக் கொண்டே போகிறார்.

கண்காட்சி ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. முதலில் அழைக்கப்பட்டதால் ஒரு யுவதி தன்னுடைய லாப்ரடார் நாயை இழுத்துக் கொண்டு வேகமாகப் பரிசோதனை மைதானத்தை நோக்கி நடக்கிறாள். ஆறு மாதக் குழந்தையாக இருக்கும் போதே ஹைதராபாத்திலிருந்து விமானத்தில் பறந்து சென்னையை அடைய அதிருஷ்டம் செய்தது. அதற்கு வீட்டில் எல்லோரையும் விடக் கண்காட்சிக்குத் தன்னை அழைத்து வந்திருக்கும் குமாரி லலிதா மீது அன்பு அதிகம்! வம்பு தும்புக்குப் போகாத ரகம்!

கண்காட்சி ஆரம்பமாகிறது. நீதிபதியாகப் பணியாற்ற முன்வந்த திரு ரங்கராஜன் நாய் வளர்ப்பு சாஸ்திரத்தில் ஒரு நிபுணர். ஏராளப் பணச் செலவில் பல நாய்களை வளர்த்து அனுபவப்பட்டவர்.

நம்பர் பிரகாரம் தன் முன் வந்து நிற்கும் நாய்களைப் பழங்கால மாமியார்கள், தங்கள் வருங்கால மருமகள்களுக்குச் சோதனை நடத்துவது போல் சோதனைக்கு உள்ளாக்குகிறார். உயரம், பற்கள், நடை, கால்கள் அமைப்பு, போஷாக்கு இவைகளையெல்லாம் ஆராய்கிறார். ஃபாக்ஸ் டெரியர் ரகத்தைச் சேர்ந்த ஒரு நாய்க் குட்டியை ஒரு சிறுவன் இழுத்து வருகிறான். நீதிபதி அதன் அருகில் போய்ப் பார்க்கிறார். முகத்தைச் சுளிக்கிறார். ''முதலில் இதை ஒரு சலூனுக்கு அனுப்பு! பிறகு போட்டிக்குக் கொண்டு வா!'' என்கிறார். சிறுவன் ஏமாற்றத்துடன் போகிறான்.

ஒரு தினுசாக, வந்திருந்த நாற்பது நாற்பத்து ஐந்து நாய்களும் வந்து போகின்றன.

இந்தக் காட்சியிலேயே சிறந்த நாய் என்ற பட்டம் 'ஜவான்' என்ற அல்சேஷியன் நாய்க்குக் கிடைக்கிறது. அதன் சொந்தக்காரர் திரு கே. எல். ராமநாதன் முகத்தில் பெருமிதம் படர்கிறது!

ஊட்டியில் பிறந்து வளர்ந்த இந்த 'ஜவான்' 'நாயழகன்' பட்டத்தையே தட்டிக் கொண்டு போய்விட்டது. திரு ஓல்ட்ரினி உதகமண்டலத்திலிருந்து 'கிளாமர் பாய்' என்ற அல்சேஷியன் நாயை இந்தக் காட்சிக்காக அழைத்து வந்திருந்தார். ஆனால் 'கிளாமர் பாயை' விட 'ஜவான்' சிறந்தது என்று அறிவிக்கப்பட்டபோது விஷய மறிந்தவர்கள் பரவசமடைந்தார்கள். காரணம் 'ஜவானி'ன் தந்தைதான் 'கிளாமர் பாய்!'

திரு ராமநாதனின் மனைவி 'ஜவானு'க்கு அன்றாடம் என்னென்ன தேவை என்பதை உற்சாகமாக விவரித்தபோது நாம் பிரமிப்படைகிறோம். வழக்கமான ஆகாரங்களோடு, கால்சியம் மாத்திரை ஒன்று, ஈஸ்ட் மாத்திரை ஒன்று, மீன் எண்ணெய் ஒரு டேஸ்பூன், அடேக்ஸோலின் ட்ராப்ஸ் (வைட்டமின்கள்) எல்லாம் தினசரி ஜவானின் உடலில் சேருகின்றன!

சென்னை 'கென்னல் கிளப்பின்' கௌரவக் காரியதரிசி திரு என். கணேசன் உற்சாகத்துடன் வளைய வந்து கொண்டிருக்கிறார்.

உயர்ந்த ஜாதி நாய்களை எப்படிப் போஷித்து, வளர்த்து, பராமரிப்பது என்பதைத் தெளிவுபடுத்துவது இந்தக் கென்னல் கிளப்பின் நோக்கம்.

சென்னை கென்னல் கிளப் இரண்டு திட்டங்களைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஒன்று நாய்களைப் பழக்குவதற்கான ஒரு மத்திய போதனைக் கூடம். இரண்டு, நாய்களுக்கான ஹாஸ்டல் — வெளியூர் போக வேண்டிய நாயன்பர்கள் கவலையில்லாமல் திரும்பி வரும்வரை தங்கள் நாயை விட்டு வைக்கக் கூடிய இடம்.

நல்ல ஜாதி நாய்க் குட்டிகள் வேண்டுபவர்கள் இந்தக் கிளப்பின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்!

நாயழகன் 67 பரிசு ஜவானுக்குப் போகிறது! அழகன் என்று ஒருவன் தோன்றினால் அழகி ஒருத்தி வேண்டாமா? அந்தப் பெருமை ஸ்ரீமதி மாத்யூவின் 'இனெஸ்' என்ற நாய்க்குப் போகிறது. வேறு பல பரிசுகளைப் பல நாய்கள் பெறுகின்றன!

மறுநாட் காலையில் 'சொன்னபடி கேட்கும் சோதனை'. இந்த நிகழ்ச்சியில் சொன்னபடி கேட்காமல் முரண்டு பிடித்த ஒன்றிரண்டு நாய்கள்தான் சுவாரசியமளித்தன.

போலீஸ் கமிஷனரின் காரியாலயத்தைச் சேர்ந்த 'அப்ஸ்வான் — ஹீ — மார்க்' வீசி எறியப்பட்ட மரக்கட்டையைக் கவ்வி எடுத்துக் கொண்டு ஜோராகத் தன் வளர்ப்பாளரிடம் திரும்பாமல், நீதிபதியாகப் பணியாற்றிய தாமஸ் மாத்யூ அவர்களிடமே கொண்டு வந்தது! போலீஸ் நாயல்லவா? போடு சக்கைன்னானாம்!

—மேனு





தமிழ்ப் படம் எங்கே?

வெளிநாட்டிலிருந்து உல்லாசப் பயணம் வந்த சிலர் நம் தமிழ் நாட்டுக்கும் வந்தார்கள். நமது பண்பாட்டினை அறிந்துகொள்ள ஆசைப்பட்டது போலவே, நமது தமிழ்ப் படம் ஒன்றையும் கண்டு மகிழ எண்ணம் கொண்டார்கள்.

எனவே, சென்னையில் பல தியேட்டர்களுக்கும் சென்றார்கள், தமிழ்ப் படம் எங்கே ஓடுகிறது என்று பார்க்க. தியேட்டர் வாசலிலும், மூலை முடுக்குகளிலும் கண்ணைக் கவரும் பானர்களையும் போஸ்டர்களையும் கண்டவர்கள், அந்தந்தத் தியேட்டர்களுக்குள் நுழையாமல் திரும்பி விட்டார்கள்.

இருந்தாலும் ஒரு தமிழ்ப் படத்தையாவது பார்க்காமல் சென்னையை விட்டுப் போகக்கூடாது என்று எண்ணியவர்கள், வழியில் சென்ற ஒருவரைப் பார்த்துக் கேட்டார்கள், ''எந்த எந்தத் தியேட்டர்களில் தமிழ்ப் படம் ஓடுகிறது?'' என்று.

பல தமிழ்ப் படங்களின் பெயர்களையும் தியேட்டர்களின் பெயரையும் படபடவென்று அவர்கள் அடுக்கிக்கொண்டே போவதைக் காண வெளி நாட்டவர்களுக்கு வியப்பாய்ப் போய் விட்டது.

''அதெல்லாம் தமிழ்ப் படங்களா? பழம் பெரும் நாடான உங்கள் நாட்டுக்கென்று சிறந்த பல பண்புகள் இருக்கிறதாக நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோமே! உங்கள் நாட்டு நடை, உடை, பாவனைகளில் தனித்தன்மை இருப்பதாக அல்லவா எண்ணி வந்தோம்? எங்களுக்குத் தெரிந்த வரையில், இந்தப் போஸ்டர்களைப் பார்க்கும் பொழுது, உங்கள் நாட்டுப் பழக்க வழக்கங்கள் ஏதுவும் விசேஷமாக இருப்பதாகத் தெரியவில்லையே! எங்கள் நாட்டு நாகரிகத்தை யல்லவா காண்கிறோம்! மேல்நாட்டுப் பாணிகளை நாங்கள் இங்கு வந்துமா காண வேண்டும்?''

இப்படிக் கேட்கும் வெளி நாட்டவர்களுக்கு நாம் என்ன பதில் சொல்வது? கவரொட்டிகளே எழுப்பும் இந்தக் கேள்விக்கு நாம் என்ன பதில் சொல்வது?

லெப்டினன்ட் ஜெனரல் பி.எம். கவுல் அவர்களை ஒருவரும் மறந்திருக்க முடியாது. மறக்கக் கூடாது என்பதற்காகவே (The Untold Story) புத்தகமொன்றை அவர் எழுதியுள்ளார்.

1962ஆம் ஆண்டு சீனர்கள் நேஃபாவில் புகுந்து ஆக்கிரமித்துக் கொண்டனர். அப்பொழுது நமது படையினரின் தலைவராக இருந்த கவுல் அவர்கள் தோல்விக்குக் காரணம் தாமென்று பத்திரிகைகள் கட்டிக் காட்டுவதாகக் கூறி ராஜிநாமாச் செய்தார். அவர் எழுதிய இந்நூலைப் படித்து முடித்த பிறகு நமக்கு ஏற்படும் உணர்ச்சி-வேதனை.

கவுல் அவர்களின் லெப்டினன்ட் ஜெனரல் பதவிக்குக் காரணம் அரசியல்தான் என்று அக்காலத்தில் கூறப்பட்டது. ஜெனரல் திம்மய்யாவின் ராஜிநாமாப் பற்றியும் நாம் அறிவோம். ஆசிரியர் கவுல் தகுதியின் காரணமாகத் தமக்குப் பதவி உயர்வு தரப்பட்டதென்று கூறுகிறார். ஆனால் மற்றோரிடத்தில் ஜெனரல் சௌத்திரி, 'சொல்ல வேண்டிய இடத்தில்' தம்மைப் பற்றிச் சொல்லி வைக்குமாறு வேண்டியதாகக் கூறுகிறார். ஜெனரல் சௌத்திரி பதவியில் இவரைக் காட்டிலும் உயர்ந்தவர். அப்படி

பிறகு இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு விஸ்தரிக்கப்பட்டு மொரார்ஜியால் ஏற்கப்பட்டதென்று இவ்வாசிரியர் கூறுகின்றார்.

மேலும் சீனர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் தாக்கலாமென்ற நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நேஃபாவில் இராணுவத் தலைவராக இருந்த இவ்வாசிரியர் இரண்டு மாதங்கள் விடுமுறை கோரினாராம். அதற்கு இவர் கூறும் சமாதானம்: 'இந்த நெருக்கடியான சமயத்தில் நேரு, மேனன், மொரார்ஜி ஆகியவர்கள் எந்த விதக் கவலையும் இல்லாமல் வெளி நாடுகளுக்குப் போகத் திட்டமிட்டது சரியா?' ஆக, 1962ல் தெய்வம்தான் நம்மைப் பாதுகாத்ததென்று சொல்ல வேண்டும்.

அக்டோபர் மாதம் நேரடியான போர் தொடங்கியது பாரதத்துக்கும் சீனாவுக்கும். நவீனப் போர் ஆயுதங்களுடன் முழு மூச்சாகத் தாக்கினர் சீனர்கள். நமது படையினருக்குப் 'பூட்ஸ்'கள் கூட இல்லையாம். இதற்குக் காரணம் தனியார் துறையில் பூட்ஸ்கள் வாங்கக் கூடாதென்பது மேனன் கட்டளை என்று இவ்வாசிரியர் கூறுகிறார். அக்டோபர் மாதம் விடுமுறைக்குப் பிறகு இராணுவத் தலைமை ஏற்ற இவர், புது



இருந்தாலும், இவர் சிபாரிசை வேண்டி நின்றாரென்றால், 'சொல்ல வேண்டிய இடங்களில்' கவுல் அவர்களின் செல்வாக்கைப் பற்றி நாம் அறியலாம்.

1962ல் சீனர்களின் படையெடுப்பு எந்த நிமிஷத்திலும் ஏற்படலாமென்று இராணுவத் தலைவர்கள் எதிர்பார்த்த சமயம். புது டில்லியில் அபாயம் உணரப்பட்டதாகத் தெரியவில்லை. மேனனுக்கும் மொரார்ஜிக்கும் மோதல். கொள்கை பற்றியல்ல; 'நேருவுக்குப் பிறகு யார்?' என்பது பற்றி. இராணுவத் தேவைக்காக ஒரு கோடி ரூபாய்த் திட்டம் உடனுக்குடன் செயலாக்கப்பட வேண்டும் என்று இராணுவத் தலைவர்கள் கூறினார்கள். மேனன் இராணுவ மந்திரி என்ற காரணத்துக்காக நிதி மந்திரி மொரார்ஜி அதை நிராகரித்து விட்டார். இதே திட்டம் சவான் ராணுவ மந்திரியான

டில்லித் தலைவர்களுக்கு நம்மால் இப்படையெடுப்பைத் தாக்குப் பிடிக்க முடியாதென்பதை விளக்கினார். ஆகவே புதிய படைபலம் வரும் வரை, சீனர்கள் ஆக்கிரமித்துக் கொண்ட இடங்களிலிருந்தும் அவர்களை அப்புறப்படுத்த முயற்சி செய்வதில்லை என்றும், இருக்கும் இடங்களிலேயே ஸ்திரமாக இருக்க முயல்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. அவ்வாறே நேருவும், மந்திரி சபை ஆலோசனைக்குப் பிறகு கட்டளை பிறப்பித்தார். ஆனால் அடுத்த நாள், அக்டோபர் மாதம் 13ம் தேதி, நேரு இலங்கைக்குப் புறப்படுவதற்கு முன்னால், "சீனர்கள் வெளியேற்றப்பட வேண்டும்" என்று இராணுவத்துக்கு உத்தரவு வழங்கியுள்ளதாகக் கூறினார். இவ்வாசிரியர் இந்த முரண்பாட்டைச் சுட்டிக் காட்டியபோது, நேருவின் அறிக்கை 'அரசியல் ஜீரணத்துக்காக' என்று அவரிடம்



லெப்டினன்ட் ஜெனரல் பி. எம். கவுல் 1962ஆம் ஆண்டில் சீனர்கள் தாக்கியபோது நேஃபா பகுதியில் இன்னும் திறம்பட நிலைமையைச் சமாளித்திருக்க முடியுமா என்பது ராணுவ நிபுணர்கள் கூறவேண்டிய விஷயம். மிகுந்த கோபத்துடன் அவர் இந்நூலை எழுதியிருந்தாலும் காங்கிரஸ் பெருந் தலைவர்களின் [illegible] குழப்பலை 'மக்களின் கவனத்துக்குரியவையே.

புகைப்படங்கள் : கௌலும், திம்மையாவ



இதுவரை சொல்லாத கதை!

இந்திரா பார்த்தசாரதி



விளக்கம் கூறப்பட்டதாம். அதா வது நாட்டு மக்களிடமிருந்து உண்மையை மறைப்பது 'அரசியல் ஜீரணம்'.

மேனனைப் பற்றிப் பல சுவை மிக்க தகவல்களை இவ்வாசிரியர் தெரிவிக்கிறார். எப்பேர்ப்பட்ட இராணுவத் தலைவர்களாக இருந் தாலும் சரி, அவர்கள் மீது கோபம் வந்தால், கிளைக்களை விட்டெறிவது மேனனின் வழக்கமாம். இராணுவத் தலைவர்களை அவசரம் அவசரமாக நள்ளிரவில் ஒரு முக்கிய பிரச்னை பற்றி ஆராய வேண்டும் என்று கூப்பிட்டு, அவர்களை அவமானப்படுத்துவது மேனனின் முக்கியமான பொழுதுபோக்கு என்று இவ்வாசிரியர் குறிப்பிட் டுள்ளார். ஜெனரல் திம்மையாவின் ராஜிநாமாவும் இதையொட்டித்தான் எழுந்தது என்பது இவர் தரும் தகவல். ஆனால் மேனன் பதவியிலிருந்த வரை ஒருவரும் இதை ஏன் எதிர்க்கவில்லை என்று தெரியவில்லை. ஸ்டா லின் உயிருடன் இருந்தபோது ஒரு பொது வைப வத்தில், குருசேவை அவர் நடனமாடச் சொன்னா ரென்று குருசேவே ஸ்டாலின் இறந்த பிறகு குறிப் பிட்டார். இதுதான் நம் நினைவுக்கு வருகிறது.

ஊர் வம்பு



அறிவுக் கொள்ளை : மலிவுப் பதிப்பு !




சமூகத்தில் நாலு பேர்களுடன் சரளமாகப் பேசிப் பழக வேண்டுமென்றால் அதிலும் முக்கியஸ்தர்களிடம் நம்மைப் பற்றி ஓரளவு நல்ல அபிப்பிராயம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமானால் நிறையப் படிப்பது பயன் தரும்.

''அதற்கு எங்கே ஸார், நேரம் கிடைக்கிறது. போது விடிஞ்சால் ஆபீஸுக்கு ஓடவும், அலுத்துத் திரும்பி வந்தால் அயர்ந்து தூங்கவும்தான் நேரம் சரியாக இருக்கிறது'' என்பார்கள் பலர். ஆனால் புத்திசாலிகள் இந்தப் பதிலை ஒப்புக் கொள்ளக் கூடாது. படிக்கவென்று அவகாசத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.




நண்பர் ஒருவர் ஒரு நாளைக்கு ஒரு புத்தகம் படித்து முடித்து விடுவார். எப்படிச் சாத்தியமாகிறது என்று ஒரு சமயம் விளக்கினார். ''எப்படியும் படுத்தவுடன் ஒருவர் உறங்கி விடுவதில்லை; குறைந்தது பத்துப் பதினைந்து நிமிஷமாவது ஆகும். அப்புறம் காலையில் 'வாஷ்பேஸின்' முன்னே பல்தேய்க்கப் பத்து நிமிஷங்கள். அப்போது புத்தகத்தை முகத்தின் எதிரே பொருத்திக்கொள்ள ஓர் ஆணியிலிருந்து 'கிளிப்' ஒன்று தொங்கிக் கொண்டிருக்கும் என் வீட்டில். சாப்பிடும்போது படிப்பது நல்லதில்லை என்கிறார்கள். ஆனால் எனக்குப் புத்தகம் கையில் இருந்தால்தான் சாப்பாடு இறங்கும். பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸுக்காகப் பதினைந்து முதல் அரை மணி நேரம் காத்திருக்க நேருகிறது. அப்போது அரட்டை அடித்துப் பொழுதைக் கழிப்பானேன்? பஸ்ஸில் உட்கார்ந்தாலும் நின்றாலும் படிக்காமல் பயணம் செய்வதில்லை. அதில் ஓர் இருபது நிமிஷங்கள். இப்படியே மாலை வீடு திரும்பும் போதும். ஆக ஒரு நாளைக்கு இரண்டரை மணி நேரத்துக்குக் குறைவில்லாமல் படிக்க எனக்கு அவகாசம் இருக்கிறது!''



இந்த விளக்கத்தைக் கேட்டு நான் அயர்ந்து போனேன். சராசரியில் ஒரு நிமிஷத்துக்கு ஒரு பக்கம் வீதம் நூற்றைம்பது பக்கங்கள் படித்து விடுகிறார் மனுஷர் ஒரு நாளில். மாதத்துக்கு 4,500 பக்கங்கள் வருஷத்தில் 54,000 பக்கங்கள். நாவல்களைப் பொறுத்தவரை இந்த வேகம் இன்னும்கூட அதிகரிக்கலாம். நடை முக்கியமல்ல. கதைப் போக்குத்தான் தெரிய வேண்டுமென்றால் சில சாமர்த்தியசாலிகள் இடையிடையே இரண்டு நாலு என்று வரிகளை விட்டு விட்டுப் படிக்கப் பழகி விடுவார்கள் !







''அத்தனை படித்தும் அறிவு விருத்தியாகவில்லையானால் தவறு நீங்கள் தேர்ந்தெடுத்த புத்தகங்களில் உள்ளது'' என்கிறார் நண்பர்.

படிக்க ஆகும் நேரத்தில் ஒரு சிறு பகுதியைச் சரியான புத்தகத்தைத் தேர்ந்தெடுக்கவும் செலவழிப்பது அவசியம். ஒவ்வொருவரும் கடையிலோ நூலகத்திலோ வாங்கிக் கொள்ளும் புத்தகம் பிடித்தமானதாகவும் அதே சமயம் அவருக்குப் பயனுள்ளதாகவும் அமையவேண்டும். பிடிக்காத புத்தகத்தை அறிவு விருத்திக்கு என்று படித்தால் பலன் ஒன்றுமே கிட்டாது என்பதையும் கவனிக்க வேண்டும்.

நாவல்களைத் தேர்ந்தெடுக்கும் போது சற்று அதிகக் கவனம் செலுத்த வேண்டும். முக்கால்வாசி நாவல்கள் ஆங்கிலமாயினும் மற்ற மொழிகளாயினும் வெறும் அபத்தம் தான். தரமான நாவல்கள் என்று கேள்விப்பட்டவற்றை வாங்கிப் படிப்பது நலம். பிரசித்திபெற்ற எழுத்தாளராய் இருந்தால் தைரியமாய் வாங்கிக் கொள்ளலாம். முக்கிய விஷயம் அட்டைப் படத்தைப் பார்த்து ஏமாறக் கூடாது!

ரூபாயின் மதிப்புக் குறைந்த பிறகு அயல் நாட்டு மலிவுப்பதிப்புக்கள்கூட விலை உயர்ந்து விட்டன, மத்தியதர வகுப்பார் எட்டிப் பிடிக்க முடியாத அளவுக்கு. இது துரதிர்ஷ்டமே. அவர்கள் நூலகங்களை இன்னும் அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அண்மையில் சென்னையில் உள்ள அமெரிக்க செய்தித் துறை ஸ்தாபனத்தினரும் சென்னை புத்தக விற்பனையாளர் சங்கமும் சேர்ந்து அமெரிக்க மலிவுப் பதிப்பு நூல்களின் கண்காட்சி ஒன்றை நடத்தினார்கள்.

இதிலிருந்து மலிவுப் பதிப்புக்கள் எல்லாம் தரத்தில் மலிவானவை என்ற எண்ணம் மாறிவிட்டது. அதோடு மலிவுப் பதிப்பெல்லாம் இரண்டு மூன்று ரூபாய்க்குள் அடங்க வேண்டுமென்பதில்லை என்றும் விளங்கியது. ஐம்பது ரூபாய்ப் புத்தகம் மலிவுப் பதிப்பில் பத்து ரூபாய்க்கு விற்றால் கொள்ளை மலிவு தானே? அத்துடன் இம்மலிவுப் பதிப்புகள் நாவல்களாக மட்டுமின்றி, விஞ்ஞானம், அரசியல், மருத்துவம், கலைகள் போன்ற பல துறைகளையும் அரவணைப்பதாக உள்ளது புரிந்தது.

இந்தியாவில் கடந்த பதினைந்து ஆண்டுகளில் 25,000 தலைப்புக்களில் மலிவுப் பதிப்பு நூல்கள் பிரதேச மொழிகளிலும் 3,000 தலைப்புக்களில் ஆங்கிலத்திலும் பிரசுரமாகியுள்ளன. அமெரிக்காவிலோ ஒரு நாளைக்கு அறுநூறு புதிய நூல்கள் மலிவுப் பதிப்புக்களாக வெளிவருகின்றன! ஒரு நாளைக்குப் பத்து லட்சம் பிரதிகள் விற்பனையாகின்றன அங்கே!

கண்காட்சியில் ஒரு மலிவுப் பதிப்புப் புத்தகம் என் கவனத்தைக் கவர்ந்தது. அது 516 பக்கங்களைக்கொண்ட அரசியல் அகராதி. அரசியல் பரிபாஷையில் வழக்கில் உள்ள ஆயிரமாயிரம் சொற்களுக்கு அதில் அர்த்தம் கூறப்பட்டுள்ளது.

'அரசியல்வாதி' என்றால் அமெரிக்காவில் மட்டுமல்ல, உலகில் எந்த நாட்டிலுமே உயர்வான எண்ணம் உண்டாவதில்லை; மட்டமாகத்தான் நினைக்கிறார்கள் என்கிறது இந்த அகராதி. நம் தேசத்தில் சுதந்திரத்துக்கு முன் இருந்த நிலை இதற்கு மாறானதுதானே? வேறு சில சொற்களும் அவற்றின் பொருளும் : மாட்டு (குதிரை) வண்டி சகாப்தம்: உளுத்துப்போன பழைய கொள்கைகள்; வெள்ளையடித்தல்: உண்மையை மூடி மறைத்தல்; குட்டி உருளைக்கிழங்கு: முக்கியத்துவம் ஏதுமில்லாத ஓர் அரசியல்வாதி; எலும்பு பொறுக்கி: விட்டெறியப்படும் பணத்தைப் பொறுக்கிக் கொள்ளக் கூடியவன், அதனால் திருப்தியுற்று அடிபணிபவன் (நாய்க்கு எலும்புத்துண்டு வீசுவதுபோல); ஆமாம் சாமிகள்: எல்லாவற்றுக்கும் சரி என்று தலையாட்டுவோர், சுய அறிவு இல்லாதோர்; பிளம் பழம்: அரசியல் ரீதியில் ஒருவரது செல்வாக்கைப் பயன்படுத்திப் பெறும் பதவி அல்லது உத்தியோகம்...... இத்தியாதி! — கு. வி.

இறைவனும் கடலும்

சீக்கிய குரு நானக்கின் அருள் வாக்கொன்றின் தமிழாக்கம் :

அந்த மீனுக்குத் தெரியாது
அக் கடலின் தன்மையும் ஆழமும்.
ஓயாக் கடலின் அகலமும் பரப்பும்
ஒரு நாளும் அது அறியாது — நானும்
அந்த மீனை ஒத்தவன்.
உன்னை நான் அறியேன் — ஆயின்
உன்னை நான் உணர்கிறேன்
உன்னில் நான் வாழ்கிறேன்!
என்றாவது ஒருநாள் —
நான் உன்னின்று நீங்கினால் —
உறுதி — நான் மடிதல் உறுதி!

— மாயூரம் ராஜஸ்ரீ







வள்ளென்று விழுவோருக்கு





அண்மையில் சென்னை நேரு ஸ்டேடியத்தில் நாய்கள் கண்காட்சி நடைபெற்றது. நாய்களுக்கு உண்டான பெருமிதமும் சிறப்பும் நன்கு புரிந்தன. ஏன், பொதுவாகப் பேச்சு வாக்கில் நாம் ஒரு நாளேனும் நாயைப் பற்றியோ அல்லது அதன் ஏதாவது ஒரு குணத்தைப் பற்றியோ ஒப்பிட்டுச் சொல்லாமல் இருப்பதில்லை.

இங்கு உள்ள படங்களில் ஒவ்வொன்றிலும் மனிதன் நாயுடைய ஓர் அம்சத்தைச் சுவீகரித்துக் கொண்டிருக்கிறான். உதாரணமாக முதல் படத்துக்கு "ஏன் இப்படி வள்ளுன்னு விழறேன்?" என்று அந்த அம்மாள் கேட்பதாக நாம் விளக்கம் சொல்லலாம். அதேபோல் மற்ற நபர்களையும் பற்றிக் கூறுங்கள் பார்க்கலாம்.

விடை 34-ஆம் பக்கம் காண்க.













பாராமலே பேச்சு!

“ஹலோ! கணேசன் கம்பெனி ஹியர்!”

“டெலிபோன் ஆப்பரேட்டர் உமாதானே பேசுகிறது? இங்கே கல்கி காரியாலயத்திலிருந்து பேசுகிறோம்......”

“யார் வேணும் உங்களுக்கு?”

“உங்களோடுதான் சற்றுப் பேசணும்?”

“ஸார்! தயவுசெய்து போனை வைத்து விடுங்கள். நான் சிறிது நேரத்தில் உங்களைத் திரும்பவும் அழைக்கிறேன்.”

ஃ ஃ ஃ

“டிரிங்...”

“ஹலோ ! யார் வேண்டும்?”

“நீங்கதான் சார், உமான்னு ஒரு பொண்ணு உங்களோடு பேசணுமாம்!” — குரல் எங்கள் அலுவலகத்து ஆப்பரேட்டருடையது.

“உமா ஹியர்; சற்று முன்னாடி நீங்கதானே எனக்குப் போன் பண்ணினீங்க ?”

“ஆமாம்! ஆனால் வந்து.....”

“....என்னை மன்னித்து விடுங்கள் சார்! உங்களைப் போனை வைத்துவிடச் சொன்னதற்குக் காரணம் இருக்கு; உண்மையிலேயே நீங்கதான் என்னோடு பேச விரும்பறீங்களான்னு உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பினேன். உங்க ஆபீஸ் பேரைச் சொல்லிக்கிட்டு வேறு யாராவது பேசினா அப்புறம் என் நிலைமை தர்மசங்கடமாக இருக்கும், பாருங்க !”

“அப்படியும் நடப்பதுண்டா ?”

“தப்பா நினைச்சுக்காதீங்க சார்! டெலிபோன் ஆப்பரேட்டராயிருக்கும் பெண்களுக்கு இப்படி ஒரு தொல்லை உண்டு!”

“தப்பா நினைக்கிறதுக்கு ஒண்ணுமில்லே. டெலிபோனிலே தந்தி கொடுத்தால்கூட நம்ம நம்பரைக் கொடுத்ததும் அவங்கதான் நம்மைத் திருப்பிக் கூப்பிடுவாங்க, தந்தி வாசகத்தை எடுத்துக் கொள்ள.”

“பொழுது போகாத காளைங்க சிலர் போனில் தகாத முறையில் பேசித் தொந்தரவு கொடுப்பாங்க. அதனால் நாங்க எச்சரிக்கையா இருக்க வேண்டியிருக்கிறது.”

“உன் சிரமம் புரிகிறது. உலகத்திலே பெண்களுக்கு எத்தனையோ நல்ல தொழில்கள் இருக்க, நீ இந்த டெலிபோன் ஆப்பரேட்டர் வேலையை ஏன் தேர்ந்தெடுத்தாய்?”

“அப்படிக் கேளுங்க! எனக்குத் தெரிஞ்ச வரையிலே இந்தத் தொழிலில் இருக்கிற சுதந்திரம் வேறு தொழிலில் கிடையாது. என் எதிரே இருக்கும் இந்தப் போர்டுக்கு நானேதான் ராஜா, இல்லை சார், ராணி. எங்கள் காரியாலயத்தை ஒரு குட்டி அரசாங்கமாகக் கற்பனை செய்து பாருங்கள். எந்தத் தகவலும் என் மூலமாகத்தான் போக வேண்டும். முதலாளிகள் முதற் கொண்டு கடைநிலைச் சிப்பந்திகள் வரை என்





“ஹலோ, நான்தான் டெலிபோன் ஆப்பரேட்டர் உமா...”

தயவைத்தான் நாடியாக வேண்டும் - அதாவது டெலிபோன் செய்வதற்கு. அதோடு அலுவலகத்து ரகசியத்தைப் பாதுகாப்பதோ பறக்க விடுவதோகூட எங்கள் கையில்தான் இருக்கிறது. பொறுப்பான வேலை இது. பெண்களுக்கே உரியது.”

“அப்படிச் சொன்னால் எங்கள் அலுவலகத்து ஆப்பரேட்டர் சண்டைக்கு வந்து விடுவாரம்மா !”

“அவர் ராஜ்யத்துக்குள் நாங்கள் அத்துமீறிப் பிரவேசிக்க மாட்டோம், சார் !”

“....ஆமாம், இந்த டெலிபோன் ஆப்பரேட்டர் வேலைக்கு ஏதாவது பயிற்சி பெற வேண்டுமா?”

“மேளதாளத்தோடு. சித்திரமும் கைப் பழக்கம்னு தெரியாமலா சொல்லியிருக்கிறாங்க? டெலிபோன் போர்டில் வேலை செய்வதென்றால் இதற்கு நல்ல பழக்கம் வேண்டும். இங்கே சென்னையிலே ‘ராயல் டெலிகிராப் வயர்லெஸ் இன்ஸ்டிட்யூட்’ என்று ஒரு தனியார் நிறுவனம் இருக்கிறது. தனியார்த் துறையில் அலுவல் புரிபவர்கள் இங்கே பயிற்சி பெறுகிறார்கள். நானும் இங்கேதான் ஆப்பரேட்டர் கோர்ஸுக்குப் படித்தேன்!”

“ஆமாம், எத்தனை வருஷம் உங்களுக்கு இந்தத் தொழில் அநுபவம் ?”

“ஏறக்குறைய ஐந்தாண்டுகள். ஆரம்பத்தில் இரண்டு வருஷங்கள் இந்தியன் எக்ஸ்

பிரவில் பணியாற்றியிருக்கிறேன். அப்புறம் இங்கே 'கணேசன் கம்பெனி'யில்தான்.''

''அது சரி......''

''ஒரு நிமிஷம்.... விழுப்புரம் ஜங்ஷனிலே ஏககாலத்தில் எல்லாத் திசைகளிலிருந்தும் வண்டிகள் வருகிறாற்போன்ற ஒரு நிலை இங்கே. இரண்டு மூன்று 'கால்'கள் வெளியி லிருந்து வந்து விட்டன. இவற்றை ஒழுங்கு படுத்தி, அலை ஓய்ந்ததும் உங்களை மீண்டும் கூப்பிடுகிறேன். நீங்கள் வைத்துவிடுங்கள்.''

தொலை பேசித் தொடர்பு அறுந்து விட்டது.

ஃ ஃ ஃ

ஏறக்குறைய அரை மணிக்குப்பின் டெலி போன் மீண்டும் அழைத்தது.

''சார், நான்தான் உமா பேசுகிறேன்! என்ன தர்மசங்கடம் பாருங்கள்!''

''என்ன, அம்மா?''

''அப்பா குதிருக்குள் இல்லேங்கிற கதையா என்னென்னவோ சொல்லவேண்டி யிருக் கிறது!''

''நீ சொல்ல வேண்டாம், அம்மா! நான் சொல்றேன். எனக்குத் தெரிஞ்ச ஓர் அலுவ லகம். அதன் முதலாளியை போனில் பிடிக்க நான் என்னால் ஆன பாடுபட்டுப் பார்த்து விட்டேன். அங்கே யிருக்கிற டெலி போன் ஆப்பரேட்டர் அபார சாமர்த்திய சாலி, அந்தக் கம்பெனிக்கேற்ற நல்ல நடிகர் என்றும் தோன்றுகிறது. இல்லாத பல கார ணங்கள் சொல்லி முதலாளி இல்லை என்று சாதித்தார். மறுநாளோ தம் குரலையே மாற்றிக் கொண்டு பதில் அளித்துச் சமாளித் தார். மூன்றும் நான் அகப்பட்ட முதலாளி சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சாப்பிட்டு முடிந்ததும் பேசுவதாகத் தொலைபேசி கூறிற்று. ஆனால் அவர் டெலிபோன் மூலம் கைக்கும் எட்டவில்லை; காதுக்கும் எட்ட வில்லை!''

''சற்றேறக் குறைய அதே கதைதான் சார்! ஆனால் முதலாளிக் கதையில்லை; நண்பர் கதை; கைமாற்றுக் கடன் விஷயம். போனில் பேசியவர் பலே விடாக்கண்டர் போலும்! தமக்குத் தேவையானவரைப் பிடித்துப் பேசிவிட்டுத்தான் ஓய்ந்தார்!''

''அந்த மனிதருக்குள்ள சாமர்த்தியம் எனக்கு இல்லை. போகட்டும், இம்மாதிரித் தருணங்களில் உங்களைப் போன்ற டெலி போன் ஆப்பரேட்டர்கள்பாடு தர்மசங்கட மாயிற்றே, அலுப்பும் சலிப்புமாயிராதா?''

''கொஞ்சமா, நஞ்சமா? போர்டில் உட் கார்ந்திருந்து பார்த்தவர்களுக்குத்தான் அத னுடைய சிரமம் புரியும். எத்தனை பேர்களுக்கு ஈடுகொடுத்துப் பதில் சொல்லவேண்டி வரும், தெரியுமா?''

''அது போகட்டும். உனது அலுவல் நேரத்தில் நிகழ்ந்த விநோத சம்பவங்கள் ஏதாவது....''

''எதையென்று சொல்வது....? சிருங் காரம் முதல் சாந்தம் வரையில் நவரசங்களும் நிகழ்கின்றன. இரவு எட்டுமணியிருக்கும். என் அலுவலகத்தைச் சேர்ந்த ஒருவர் தமது நண்பருக்குப் போனை இணைக்கச் சொன்னார். போனை எடுத்தவர் நண்பரின் தந்தை. பெண் குரலை — அதாவது என் குரலைக் கேட்டவருக்குத் தமது மகனிடம் சந்தேகம் வந்து விட்டது. 'எலே! எத்தனை நாளாக இந்தக் காதல் நாடகம்?' என்று சிருங்காரக் காட்சியைக் கற்பனை செய்து கொண்டவர் ரௌத்திரகாரமாகி விட்டார்.''

''பேஷ், பேஷ்! சிருங்காரத்தையும், ரௌத்திரத்தையும் இணைத்து விட்டாயே!''

''இன்னொரு வேடிக்கையைக் கேளுங்கள்! என் முதலாளி தமது நண்பர் ஒருவருக்குக் 'கனெக்ஷன்' தரச் சொன்னார். நான் ஞாபக மறதியில் இன்னொருவரை இணைத்துவிட்டு, முதல் நண்பரைக் கூப்பிடச் சொன்னேன்! 'இங்கிருந்து அவரைக் கூப்பிட முடியாதே, அம்மா! அவர் வேண்டுமென்றால் வேறு நம்பரை அல்லவா கூப்பிட வேண்டும்!' என்று நாசூக்காகச் சொல்லிச் சிரித்தவர், 'உனது முதலாளியைப் பேசச் சொல் லம்மா!' என்றார்.''

''எனக்கு வெல வெலத்துப் போய் விட்டது. இந்த விஷயத்தை முதலாளியிடம் வேறு சொல்லி விடுவாரோ என்று! ஆனால் நல்ல வேளை! 'டேய், பழி! உன் டெலி போன் ஆப்பரேட்டர் என் காசை மிச்சப் படுத்தி விட்டாளடா! உன்னோடு நான் பேச வேண்டும் என்று இருந்தேன். தவறாக இணைப்புக் கொடுத்தாலும் என்னைத் தேடிக் கொடுத்தாள், பார்!' என்று பழி சுமத் தாமல் பாராட்டாகவே சொல்லிவிட்டார்!— ஏன் சார், நீங்கள் சிரிக்கவில்லை?''

''நான் சிரிக்கவில்லையா? யார் சொன்னது? கலகலவென்று சிரித்தால்தான் சிரிப்பா? என் வாயெல்லாம் பல்லாக இருப்பது உனக் குத் தொலை பேசியில் எங்கே தெரியப் போகிறது?''


''மற்றொரு சமயம் என்ன ஆயிற்று, தெரியுமா? முதலாளி ஒரு நபருக்குப் போன் போடச் சொன்னார். நான் போட்டேன். வேறு நம்பருக்கு இணைப்புக் கிடைத்தது. ராங் நம்பர் என்று கூறிக் கத்திரித்துவிட் டேன். இரண்டாவது முறை, மூன்றாவது முறை என்று பல முறைகள் போட்டாலும் அதே நம்பர் வந்தது. அந்தப் பக்கத்திலிருந்து வார்த்தைகள் வெடித்தன. 'இப்படித் தொந் தரவு செய்தால் புகார் செய்வேன்!' என்று சீறினார். 'உங்களுக்குப் புண்ணியமாகப் போகும். அப்படியே செய்யுங்கள். உங்கள் லயனைச் சரிப்படுத்த ஆட்கள் வருவார்கள்' என்றேன். கோபம் நகைச்சுவையாகிச் சாந்தமாகியது.''

''பேஷ், சாந்த ரசம் வரைக்கும் வந்துவிட் டாய்!''

''அது போகட்டும். இத்தனை நேரமும் விஷயத்தை மறந்து பேசிக்கொண்டே இருந்து விட்டோமே! என்னைப் பார்க்க வருவ தாகச் சொன்னீர்களே, எப்பொழுது வரு கிறீர்கள்?''

''அதுதான் பாராமலே பேட்டி கொடுத்து விட்டாயே! இனியும் வர வேண்டுமா? வாழ்க தொலைபேசி!'' —ரா.வீ.

செய்திப படங்கள்







1, 2, ஆவடி டியூப் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா தொழிற்சாலையில் பணி செய்யும் தொழிலாளர்களின் உணவு வசதிக்காகச் சுமார் பத்து லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நவீன உணவு விடுதியை பிப்ரவரி 13-ந் தேதி பிரபல தொழில் நிறுவனமான டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் கம்பெனியின் தலைவர் பிளவுடன் பிரபு திறந்துவைத்தார்.

3. திருவான்மியூர், கலாக்ஷேத்திரத்தில் காலஞ்சென்ற டாக்டர். ஸி. பி. அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார் ஸ்ரீ ஏ. எல். முதலியார்.

4. பம்பாய் பாரதிய மியூஸிக் அண்ட் ஆர்ட்ஸ் சொஸைட்டியினர் ஸ்ரீ தியாகராஜர் தினத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடினர். அவ்வமயம் மிருதங்க வித்வான் பாலக்காடு ஸ்ரீ மணி அய்யர் அவர்களையும் பாராட்டிக் கௌரவித்தனர்.




அரியக்குடியின் வாழ்விலே...

என். ஆர். பூவராகன்

சங்கீத சரித்திரத்திலே தன்னிகரில்லாது தனிப் பெரும் புகழோடு சக்கரவர்த்தியாகச் சுமார் ஐம்பத்தைந்து வருஷங்களுக்கு மேலாகத் தொடர்ந்து கச்சேரி செய்ததுடன் வழிகாட்டியாகவும் விளங்கிய மகா வித்வான் சங்கீத ரத்னாகர அரியக்குடி ஸ்ரீ ராமானுஜ ஐயங்கார்.

வெகு சுகமான சாரீரம், குறைந்த சுருதியில் பாடினாலும் கம்பீரமான நாதம், உயரிய பாணி, அபார ஞானம், ஸம்பிரதாய சுத்தம், முதிர்ந்த அனுபவம், இவை கொண்டு மங்காப் புகழுடன் வாழ்ந்தார், ஐயங்கார் அவர்கள். கச்சேரிகளை அவ்வப்போது சாரீர வசதிக்குத் தக்கபடி அமைத்துக் கொள்வதில் மகா நிபுணர். அருணாசலக் கவிராயர் கிருதிகள், திருப்பாவை, குலசேகர ஆழ்வார் பாசுரங்கள், ராமானுஜ நூற்றந்தாதி – இப்பாடல்களுக்கு அழகிய வர்ண மெட்டுக்கள் போட்டு, பழக்கத்துக்குக் கொண்டு வந்தும், கச்சேரிகளில் பாடியும், அநேகரை மகிழ்வித்தார். கர்நாடக சங்கீத வாய்ப்பாட்டுக்கு ஜனாதிபதியால் கௌரவிக்கப்பட்ட முதல் வித்வான். ''சங்கீத ரத்னாகர'', ''காயக சிகாமணி'', ''சங்கீத கலாநிதி'' ''சங்கீத சாஸ்திர அலங்கார'' முதலிய சிறப்புப் பட்டங்களைப் பெற்றார்.



ஏராளமான பாடாந்தரம்

அரியக்குடிக்குச் சுமார் ஓராயிரம் உருப்படிகளுக்கு மேல் பாடமுண்டு. தியாகராஜர், தீக்ஷிதர், சாமா சாஸ்திரி, ஸ்வாதித்திருநாள், பட்டணம் சுப்பிரமணிய அய்யர், பல்லவி கோபால ஐயர், பூச்சி ஸ்ரீனிவாஸ ஐயங்கார், வாசுதேவாச்சார், வானமாமலை ஜீயர், சதாசிவராவ் முதலியோர் இயற்றிய வடமொழி, தெலுங்குக் கீர்த்தனைகளும் கனம் கிருஷ்ண ஐயர், அருணாசலக் கவி, முத்துத் தாண்டவர், உமாதாஸர், பாபநாச முதலியார், ராமசாமி சிவன், நீலகண்ட சிவன், பாபநாசம் சிவன், கோடீசுவர ஐயர் இயற்றிய தமிழ்க் கீர்த்தனங்களும், சுப்பராம ஐயர், க்ஷேத்ரக்ஞர், பட்டாபிராமையா முதலியவர்களின் பதங்களும், கிருஷ்ணலீலா தரங்கிணி, திருப்



புகழ், தில்லானா, ஜாவளி, ஹிந்துஸ்தானி உருப்படிகளும் பாட வல்லவர்.

பாணியின் சிறப்புக்கள்

ராகம் பாடும்போது உயர்ந்த சம்பிரதாய முறையில் ரூபத்தை விளக்கக் கூடிய சில பிரயோகங்களையே திரும்பத் திரும்பப் பாடுவார். ஜீவஸ்வரங்களில் நின்று படிப்படியாய் ஆலாபனம் செய்வார். இம்முறையை ''கான்ஸெண்டிரிக் முறை'' என்று சொல்வதுண்டு. ஒவ்வோர் ஆவர்த்தமும் தனிக் கட்டம் போல் அழகாகவும், லகுவில் ரஸிக்கக் கூடியதாகவும் இருக்கும். அவரது பல்லவிகள் பிராசீனமானவையோடு சிறியவைகளாகவும், அர்த்த புஷ்டி நிறைந்ததாகவும் விளங்கும். தானம் பாடுவதிலும் சிறப்பான பிராசீன முறையைக் கையாண்டார்.

ஐயங்கார் மத்யம காலத்துக்கென்றே பிரத்தியேகமான சாரீர இயல்பு பெற்றவரோ எனத் தோன்றினாலும் விளம்ப காலத்திலும், த்ருத காலத்திலும் நிறைந்த அழகு கொடுத்துப் பாடும் ஆற்றல் படைத்திருந்தார். சுருங்கச் சொன்னால் தம்முடைய கடைசிக் காலம் வரை, கர்னாடக சங்கீதத்தை நித்ய யௌவனமாகத் தளர்வின்றிப் பரிபாலித்து வந்த சங்கீத மஹானீயர் அவர்.

கடிதம் எழுதும் முறை

ஐயங்காருடன் சுமார் முப்பத்தைந்து வருஷங்களுக்கு மேல் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்குக் கிட்டியது பூர்வ ஜன்ம புண்ணியமெனக் கருதுகிறேன். ஒவ்வொரு கடிதத்திலும் ''வேணும் ராகவன் ஸஹாயம்'' என முடிப்பார். கச்சேரிகளுக்கு வருவதை ''பகவத் கிருபையால்'' அல்லது ''ஸங்கல்பத்தால் நான் குறிப்பிட்ட தேதியில் வந்து சேருகிறேன்'' என்றும், தொடக்கத்தில்,— ''அனேக மங்களாசாஸனம்'' என்றும் எழுதுவார்.

வீணைப் பயிற்சி

பதினைந்து வருஷங்கள் முன்பு ஐயங்காரைப் பார்க்கப் போனபோது அவர் என்னிடம் சொன்னார்: ''காரைக்குடியிலிருந்து ஒரு வீணை கொண்டு வந்திருக்கிறேன். என் குருவுக்கு வாத்தியங்கள் செய்து கொடுத்த தஞ்சாவூர் ஒத்தப்ப ஆசாரியின் பிள்ளை நாராயண ஆசாரி செய்தது. எனக்கு இருபது வயதில் காரைக்குடி வீணை சகோதரர்களில் மூத்தவரான சுப்பராம ஐயர் கொடுத்தது. எனக்கு இரண்டு வருஷங்கள் வீணையில் ஸ்வர ஸ்தானங்களைப் பிடித்து, பாட்டு அப்பியாஸம் செய்யும் வழியை அவர் போதித்தார். 'நீ அமோகமாய்க் கச்சேரி செய்வாய்' என்று ஆசீர்வாதம் செய்தார். ''அந்த வீணையை நீ வைத்துக் கொள். உன் குடும்பத்துக்கு என் ஆசீர்வாதங்கள்.'' உடனே தம் சிஷ்யர் ஸ்ரீ கே. வி. நாராயணஸ்வாமியை நோக்கி, ''நாராயணா, அந்த வீணையை எடுத்து வண்டியில் வை'' என்றார்.

ஐயங்கார் காயகர் மாத்திரமல்ல; வைணிகரும்கூட. தவிர, வீணை தனம்மாளிடம் முறையாகப் பாடம் கேட்டு, அந்தச் சங்கீதத்தில் உள்ள தனிப்பட்ட அம்சங்களை ரஸித்துப் பயன் அடைந்தார்.

நகைச்சுவை

ஒரு சமயம் திருவல்லிக்கேணி சங்கீத சபாவில் நடந்த கச்சேரியில் சுமார் நாலரை மணிக்கு மேல் பாடி முடிக்கும் தறுவாயில், முன் இருந்த ரஸிகர் ஒருவர், 'மாங்காய்ப்







''சார்! நீங்க பிளேனிலே போனது உண்டா?''
''இல்லை. வந்திருக்கிறேன்!''

பால்' என்ற பாட்டை விரும்பிக் கேட்டார். இன்னொருவர் அதை ஆமோதித்தார். அரியக்குடி பிளாஸ்கில் இருந்த பாலைக் கப்பில் ஊற்றி, ''பசும் பால்தான்'' என்று சொல்லி அருந்தி, ''பவமான'' என்று மங்களம் பாடி முடித்தார்.

ஒரு சமயம் அரியக்குடியின் கச்சேரி நடந்து கொண்டிருந்த சமயம். கூட்டத்தி லிருந்து ஒரு ரஸிகர் வித்வானுக்கு ஒரு சீட்டுக் கொடுத்து அனுப்பினார். அதில், அப்பொழுது மிகப் பிரபலமாகவிருந்த ''ஆசை முகம் மறந்து போச்சே'' என்ற பாட்டைப் பாடும்படி எழுதப்பட்டிருந்தது. பாடகர் என்ன செய்தார் தெரியுமா? வாயை விட்டு ''ஆசை முகம் மறந்து போச்சே'' என்று சொல்லிய வண்ணம் தம் கையை உயர்த்தி 'மறந்து போச்சு' என்பதற்கு அடையாளமாக ஆட்டினார். சபையில் எல்லோரும் கலகலவென்று சிரித்தார்கள்.

ராமானுஜ அய்யங்கார் ஒரு சமயம் தம்முடைய நண்பர் வீட்டில் தங்கியிருந்த போது, அவரை இரவில் சாப்பிடுமாறு வற்புறுத்தினார் நண்பர். இரவில் ஐயங்கார் பலகாரம்தான் செய்வது; சாதம் சாப்பிடுவதில்லை. ஐயங்கார் கண்டிப்பாய் மறுத்து விட்டார். அதன் பேரில் நண்பர் 'பழம் கிழ.....ம்' என்று ஆரம்பித்தார். உடனே ஐயங்காருக்குக் கோபம் வந்து விட்டது. இதைக் கண்ட நண்பர் பயந்து, ''ஏதாவது நான் தவறுதலாகப் பேசிவிட்டேனோ, அப்படி இருந்தால் மன்னித்து விடவேண்டும்'' என்று பகர்ந்தார். அதற்கு ஐயங்கார் சொன்னதாவது: ''ஏனையா நீர் என்னைப் பழம் கிழம் என்று கூறுகிறீர்? நான் பழம் கிழம் இல்லை ஐயா, புதிய கிழம் ஐயா, புதிய கிழம்'' என்று சிரித்துக் கொண்டே பதிலளித்தார்.

ஜீயர் சந்திப்பு

திருவல்லிக்கேணியில் வானமாமலை ஜீயர் ஸ்வாமிகள் தங்கியிருந்தபோது ஐயங்காரைப் பார்க்க விரும்பினர். பத்தாறு பட்டைப் பஞ்சகச்சமாய் உடுத்தி, திருமண் காப்புச் சாத்திக்கொண்டு ஐயங்கார் புறப்பட்டார். ஜீயர் ஐயங்காரைப் பார்த்து, ஒரு பாட்டுப் பாட வேண்டும் என்றார். ''அடடா, நான் தம்பூரா கொண்டு வரவில்லை. இருந்தாலும் தாங்கள் கேட்டதற்காகப் பாடுகிறேன்'' என்று ஐயங்கார் பகர்ந்தார். ஹிந்துஸ்தான் காபி ராகத்தில் இரண்டு நிமிஷங்கள் ஆலாபனை செய்துவிட்டு ''ஜானகீ ரமண தசரத நந்தன'' என்ற கிருதியைப் பாடினார்.

ஜீயர் சொக்கிப் போனார். ''இது யார் ஸாஹித்தியம்?'' என்று கேட்டார்.

''இது தங்களுடைய பீடத்தில் முன் இருந்த வானமாமலை ஜீயரின் ஸாஹித்யம்'' என்றார் ஐயங்கார். ஜீயருக்கு வியப்புத் தட்டியது. ''முந்திய ஜீயர் ஸ்வாமிகள் ஸாகித்யங்கள் செய்திருக்கிறார் என்று எனக்குத் தெரியாது. அதிலும் கவர்ச்சியான ராகத்தில் செய்திருக்கிறார் என்பது இப்பொழுதுதான் தெரிந்தது'' என்றார்.

இன்னொரு பாட்டுக் கேட்கவும் ஐயங்கார் ''தசரத ஸுத'' என்ற ஜோன்புரி கிருதியை வழங்கினார். ஜீயர் ''இது யாருடையது'' என வினவ, ''இதுவும் அவருடையதுதான்'' என்றார் ஐயங்கார். உடனே ஓர் உயர்ந்த பச்சைக் கம்பளிப் போர்வையை எடுத்து ஐயங்காருக்குப் போர்த்தி, ஆசீர்வதித்தார், ஜீயரவர்கள். ''இப்பாடல்களைத் தாங்கள் பிரசாரம் செய்ய வேண்டும்'' என்றும் கூறினார். ஐயங்காருக்கு அளவிலா மகிழ்ச்சி. ''நான் இதையெல்லாம் எதிர்பார்க்கவே இல்லை'' என்று சொல்லி வீடு திரும்பினர்.

சமயோசிதம்

ஐயங்கார் ஒரு சமயம் ஒரு கோவிலில் கச்சேரி செய்தார். திரளான ஜனங்கள். சுமார் ஐந்து மணிக்கு மேல் கச்சேரி நடந்தது. அன்று பாடிய சங்கராபரண ராகமும் அதில் ''பக்தி பிக்ஷமிய்யவே'' கிருதியும், அதில் நிரவல், ஸ்வரமும் சிகரம் போல் அமைந்தன. இதைக் கேட்டு மகிழ்ந்த ஜமீந்தார் ஒருவர் தம் வீட்டுக் கல்யாணத்தில் ஐயங்கார் கச்சேரிக்கு ஏற்பாடு செய்து, இந்தக் கீர்த்தனையும் பாடவேண்டும் என்று சொல்லிவிட்டார். கச்சேரி தொடங்கி இரண்டு மணி ஆனவுடன் சங்கராபரண ராகம் விஸ்தாரமாய் ஆலாபனை நடந்தது. ஜமீந்தார் உடனே முன் வரிசையில் வந்து அமர்ந்து தலையை அபாரமாய் ஆட்டத் தொடங்கினார். ஐயங்கார் ''அக்ஷயலிங்க விபோ'' என்று எடுத்ததும் ஜமீந்தார் தலை குனிந்து விட்டார். அவருக்கு ஏமாற்றம். சிறிது நேரத்தில் எழுந்து மற்ற அலுவல்களைக் கவனிக்கச் சென்றார். ஐயங்கார் கச்சேரி முடிந்ததும் ஜமீந்தார் சன்மானம் வழங்க வந்தார். ''ஏன் நீங்கள் வேறு கீர்த்தனையைப் பாடிவிட்டீர்கள்?'' என்றார். அதற்கு ஐயங்கார் பவ்வியமாய் ''மன்னிக்க வேண்டும். அந்தக் கீர்த்தனையின் சரணத்தில் 'பிராணமுலேனி வானிகி பங்காரு பாககட்டி' என்று வருகிறது. (பிணத்துக்கு அலங்காரம் செய்தாற்போல் என்று தாத்பர்யம்) கல்யாணத்தில் பாடத் தகுந்தது அல்ல'' என்றார். ஜமீந்தார் மிக சந்தோஷமடைந்து, இம்மாதிரி வித்வத்துடன் சமயோசிதமாகவும் பாடக்கூடியவர் மிகச் சிலரே என்று ஐயங்காரைப் புகழ்ந்து பாராட்டினார்.

மயிலாப்பூரில் ராதா ஸில்க் எம்போரியம் ராதாகிருஷ்ண செட்டியார் மகன் கோதண்டராமன் கல்யாணத்தில் ஐயங்கார் கச்சேரி ஏற்பாடாகி யிருந்தது. அன்று காலையில்

ஐயங்கார் என்னை அழைத்து, செட்டியார் வீட்டுக்குப் போய், 'அவர்கள் குலதெய்வம் என்ன என்று தெரிந்து வா' என்றார். 'திருப்பதி வேங்கடாசலபதி' என்று அறிந்து வந்து சொன்னேன்.

கச்சேரி மாலை தொடங்கியது. பட்டணம் சுப்பிரமணிய ஐயரின் தோடியில் அமைந்த "ஏரா நாபை" வர்ணம், "வெங்கடேசா" என்ற முத்திரையுடன் பிருகருவாய் எடுத்தவுடன் பாடப்பட்ட பிறகு வேங்கடாசலபதியின் மீது தியாகையர் இயற்றிய "தொதிய ராதா", "ஸ்ரீ வெங்கடேசம்" (தோடி) "வெங்கடேசா நின்னு" (மத்யமாவதி) கிருதிகளை அடுக்கடுக்காக வழங்கவும், செட்டியார் பரவசமடைந்தார். ஐயங்கார் பேகட ராகத்தை விஸ்தாரமாய் ஆலாபனை செய்து தானம் பாடி, "வெங்கடரமணா, வெங்கடஜுரணா" என்ற பல்லவியைப் பாடவும், எல்லோரும் மெய்மறந்து கேட்டுக்கொண்டிருந்தனர். செட்டியாருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. காரியஸ்தரைக் கூப்பிட்டு, 'கடையிலிருந்து ஒரு நல்ல சாதரா கொண்டு வா' என்று சொல்லியனுப்பினார். தனி ஆவர்த்தம் முடிவதற்குள் மேடைக்குச் சென்று "அடடா எங்கள் குடும்பத்தின் குலதெய்வத்தைப் பற்றி எவ்வளவு பாட்டுப் பாடிவிட்டீர்கள்!" என்று போற்றி சாதராவைப் போர்த்தி, "எங்களுக்கு இதைவிட என்ன ஆசீர்வாதம் வேண்டும்?" என்று புகழ்ந்தார்.

சென்னையில், 1956, மார்ச்சு 1ந் தேதி "ரேடியோ வாரம்" நடந்தது. ஐயங்காரை ரேடியோவில் பாட அழைப்பதற்காக நிலைய டைரக்டர் மூர்த்தி சென்றார். "ரேடியோ வீக்". நீங்கள் பாட வேண்டும்" என்றார். உடனே ஐயங்கார் "ரேடியோ 'வீக்'காய் (பலவீனமாய்) இருந்தால் நான் எப்படிப் பாடுவது?" என்றார். பிறகு பாடுவதற்கு இசைந்தார்.

ஐயங்காரின் ஐம்பது வருஷ சங்கீத சேவையைப் பாராட்டும் விழாவையொட்டி ஸ்ரீ பி.வி. ராஜமன்னார் என்னை ஒரு மலர் தயார் செய்யச் சொன்னார். அப்போது என்னிடமிருந்த பல பழைய புகைப்படங்களையும் சில கட்டுரைகளையும் அவரிடம் காண்பித்தேன். சிஷ்யர்களில் சிலர் ஐயங்கார் பொடி போடும் புகைப்படம் வேண்டாம் என்றனர். ஆனால் ஐயங்காரே அதை மலரில் போடச் சொல்லி என்னிடம் இச் சம்பவத்தைத் தெரிவித்தார்:

திருச்சி மலைக் கோட்டையில் ஐயங்கார் கச்சேரி ஒரு சமயம் ஏற்பாடாகி யிருந்ததாம். எம். கோவிந்தசாமி பிள்ளை வயலின், அழகநம்பி பிள்ளை மிருதங்கம், தக்ஷிணாமூர்த்தி பிள்ளை கஞ்சிரா பக்கவாத்தியங்கள். சபையின் முன் வரிசையில் இருந்த இருவர், ஐயங்கார் பொடி போடுவதைக் கணக்கு எண்ணிக் கொண்டே போனார்கள். 'இப்போது ஏழாவது தடவை' என்று பேசிக்கொண்டது அரியக்குடியின் காதில் விழுந்தது. கொஞ்ச நேரம் கழித்து மறுமுறை பொடி போட ஒரு சிமிட்டா கையில் எடுத்துக் கொண்டு அவர்களை நோக்கி, "நீங்கள் பெரிய விஷயத்தை விட்டு இந்தப் பொடி விஷயத்தில் கவனத்தைச் செலுத்துகிறீர்களே!" என்றார் ஐயங்கார்.

அழகாட்டம்!

"அமலவன்"



கல்லாடும் மலர்ச் சாந்தைக்
கருங்குழ லணைத்துப் புறம்
தள்ளாடிச் சரிந்து வீழும்
தன்மை யொரு அழகாட்டம்!

வில்லோடும் புருவம்! நீர்
விளையாடும் மீன் விழியின்
கொல்லாத வேல் வீச்சின்
குறுநகை யொரு அழகாட்டம்!

சொல்லாடும் அதர மெனும்
சுந்தரப் பவள இதழ்,
விள்ளாமல் முறுவல் ஊறும்
விந்தை யொரு அழகாட்டம்!

தோளாடும் முன்றானைத்
துகில் சரிய, எழில் தெரிய,
நாணத்தக் கர மேவித்
தடுப்பது மோர் அழகாட்டம்!

பூந்தேராம் அசையு மினம்
பிடியிடையின் ஒசிவில் நடம்
தேர்ந்தாடும் தேர்வை அவள்
திருவுருவம்! எழிற் தோட்டம்!



சபாஷ் தம்பி!

சபாஷ் தம்பியின் கதை இதுதான்: குடிகாரன் ரமேஷ் ஒரு நாள் மண்டையைப் போட்டு, கதைக்கு சஸ்பென்ஸ் தருகிறான். கதாநாயகன் சேகரும், பூட் பாலிஷ் பாபுவும் கொன்றவனைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்குகிறார்கள். கடைசியில் ரமேஷைக் கொன்றவன் கார் டிரைவர் என்பது அவிழ்க்கப்படும் சஸ்பென்ஸ். கதை கொஞ்சம். ஆனால் பார் காட்சிகள், விகாரமான நடனங்கள், அடி, உதை, குத்துச் சண்டைகள் படத்தின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டு விடுகின்றன. மலைகளில் கொலைக் கும்பலோடு கதாநாயகன் போடும் சண்டைக் காட்சிகள் படம் பார்ப்போரை ரொம்பச் சோதிக்கின்றன. 'ரமேஷை யார் கொன்றால் என்ன? நம்மை இப்படிக் கொன்று தொலைக்கிறார்களே!' என்று ரசிகர்கள் அலுத்துக் கொள்ளும்படி அவை செய்து விடுகின்றன. ஆங்கிலத் திரைப் படங்களில் ஜேம்ஸ் பாண்ட் துப்பறியும் வேலையில் மிகுந்த சாகசங்களைச் செய்து கொண்டிருப்பார். ஆனால் சபாஷ் தம்பியில் வரும் 'டூப்ளிகேட் ஜேம்ஸ் பாண்ட்' நாகேஷ் கோமாளிக் கூத்தடிக்கிறார்! ஆபாச நடனத்துக்கு விஜயலக்ஷ்மி வேறு!

அடி குத்து உதைக்காக ஜெய்சங்கர் இருக்கிறார். கதாநாயகனின் குணசித்திரத்தை வெளிப்படுத்தும் காட்சிகளுக்கு இடமில்லை. 'பூட் பாலிஷ்' பாபுவாக வரும் ராஜகுமார் நடிப்பு நன்றாக இருக்கிறது.

'சபாஷ் தம்பி' மெச்சும்படியாக இல்லை. வழக்கமான படத்தையே நினைவூட்டுகிறது. 'இதை ஏற்கனவே பார்த்த ஞாபகம் இல்லையோ?' என்று பல காட்சிகள் பல்லவி பாடினாலும் ஆச்சரியமில்லை!

சத்ய மேவ ஜயதே!


சக்கரங்கள் படைத்த நகரும நாற்காலியில் அமர்ந்து வலைய வரும் அங்கஹீனமுள்ள பணக்காரச் சித்தப்பா சோமநாதன் கையில் பிரம்பை வைத்துக் கொண்டு 'ஆட்சி' செலுத்துகிறார்! அவரது வேலைக்காரன் ஏழுமலை அவரிடம் படாத பாடுபடுகிறான்! அவருக்கு மனச் சஞ்சலம் ஏற்படுத்த ஓர் அழகான நர்ஸை அழைத்து வருகிறான், அவரது சொத்தைக் கவர நினைக்கும் சுந்தர்! நர்ஸ் பணக்காரரின் மனைவியாகி, உடனே அவரை இழந்து கொலைக் குற்றப் பழியையும் சுமந்து கொள்கிறாள்! கடைசியில் சத்தியம் வென்றே தீருகிறது. வில்லன் அகப்பட்டுக் கொள்கிறான்.




நாடகத்திலே முரட்டுச் சித்தப்பாவாக ஒய். ஜி. பி. வருகிறார். சக்கரங்கள் படைத்த நகரும் நாற்காலியில் அமர்ந்து தம் முரட்டுத் தனத்தைக் காட்டுகிறார். இறந்த பிறகும் அதே நாற்காலியில் ஆடாமல் அசையாமல் ரொம்ப நேரம் அமர்ந்து உயிரற்றவராக நடிக்கிறாரே, அது பிரமாதம்!

மலையாப்பன் வீட்டிலே தேங்காய் உரித்த நார் எல்லாக் காட்சிகளிலும் இடம் பெற்று, 'எப்படிச் சோமநாதன் வீட்டுக்கும் தேங்காய் நார் வந்தது?' என்ற கேள்விக் குறியை எழுப்பியது. சிறு தவறும் நாடகத்தைப் பாதிக்கும் என்பதற்கு இது எடுத்துக்காட்டு. நர்ஸாக நடித்த சாந்தினி உணர்ச்சி ததும்ப நடித்து நாடகத்துக்கு உயிரூட்டினார். 'சங்கீதத்தினால் செடி வளரும்' என்று கருதிப் பாடிய எஸ்டேட் ஏஜண்ட் ஹாஸ்ய பாகத்தை வழங்குகிறார்.

'சத்ய மேவ ஜயதே' 'உமன் ஆப் ஸ்ட்ரா' என்ற ஆங்கிலத் திரைப்படத்தின் அப்பட்ட காப்பி. (ஹாஸ்யப் பகுதிகள் தவிர) இருப்பினும் சினிமாவைப் பார்த்தவர்களும் ரசிக்கும்படியாக நாடகம் அமைந்திருந்தது சிறப்புத்தான். நாடக அமைப்பும் நடிப்புத் திறனும் இந்த வகையில் பாராட்டுக்குரியதே.


ஜிம்மி
வால்ட் டிஸ்னி
மனசு துருதுருங்
கறது. ஏதா
வது உருப்படி
யாச் செய்
யணும்.
முதலில் உடம்
பில் இருந்த
நீக்கலாம்
வர்ர்
வர்ர்
அடுத்து ஒரு
வாசனையைக்
கண்டுபிடிக்கணும்
இஸ்
இஸ்
இஸ்
டேய், சொட்டை!
என்னடா மோப்
பம் பிடிக்கறே?
இஸ்
இஸ்
©1986
Walt Disney Productions
World Rights Reserved
துப்பறிகிற நாய் ஆக
றதுக்குப்
பயிற்சிப்பா!
நல்ல
ஐடியா! அது
சரி, என் தோட்
டத்திலே ஏதாவது
எலும்பு புதைஞ்சு
இருக்கா பாரேன்!
ஹ, இவனாவது துப்பறியறதா
வது! சும்மாத் தட்டிக் கொ
டுத்து வைப்போம். பாவம்
பொழைப்பா!
இஸ்
இஸ்
Distributed by King Features Syndicate
இதோ
ஒண்ணு
இதோ இன்னொண்ணு!
இன்னு மொண்ணு!
இஸ்
இஸ்
9-4
பலே! எங்க பாத்
தாலும் எலும்பா இருக்கே!
என் பயிற்சிக்கு உன்
தோட்டத்தைப் பயன்
படுத்திக்க அனுமதி
தந்ததுக்கு
தாங்ஸ்!


சக்திக்கும், வலிமைக்கும்!
பால்
கோகோ
சர்க்கரை
மால்ட்
Cadbury's
Bournvita
THE IDEAL FOOD DRINK FOR STRENGTH AND VIGOUR
காட்பரீஸ்
போர்ன்விடா
ஊட்டப்பொருள்கள் அனைத்தும் ஒருங்கே தேவையா? ஒரு கப் போர்ன் விடா அருந்துங்கள். தசைகள் வளர புரதங்களும், சக்திக்கும் வலிமைக்கும் புஷ்டியான மாவுச்சத்தும், எலும்புகளை வலுவாக்க தாது உப்புக்களும், பூரண ஆரோக்கியத்திற்கு மிக்க அவசியமான வைட்டமின்களும் இதிலே உள்ளன. மிகச் சுலபமாக தயாரிக்கலாம். காலையில் உற்சாகத்துடன் எழுந்திருக்க வேண்டுமா? இரவில் அமைதியாக உறங்க வேண்டுமா? போர்ன்விடா அருந்துங்கள்.
Bensons /CF-579 TAM



எட்டாம் அத்தியாயம்

பயங்கர இயக்கம் !

சுயேச்சை அச்சகத்திலுள்ள அந்தப் பெரிய அறையினுள்ளே ஒரு பெரிய மேஜையும் அதைச் சுற்றிப் பத்துப் பேர்வரை உட்கார வசதியான நாற்காலிகளும் இருந்தன!

''ரங்கமணி! இனிமேல் இதுதான் உன்னுடைய இருப்பிடம். மேல் பக்கத்து அறையில் நீ தங்கலாம். இனி என்னிடம் நீ ஒளிவு மறைவின்றிப் பேச வேண்டும்'' என்றார் சொக்கலிங்கம் பிள்ளை. ரங்கமணி அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். இருவரும் நாற்காலியில் அமர்ந்தனர்.

''என்னை நீ நம்புகிறாயா?'' என்று கேட்டார், சர்தார். ரங்கமணி திகைத்தான்.

''இதென்ன கேள்வி?'' என்றான் ரங்கமணி குழப்பத்துடன்.

''என்மீது உனக்குப் பூரண நம்பிக்கைதானே?''

''எதில்?''

''எந்த விஷயத்திலும்?''

"நம்பிக்கைதான்" என்று உறுதியுடன் கூறினான் ரங்கமணி.

"கவனமாகக் கேள். இந்தக் கணத்திலிருந்து உன் வாழ்க்கையில் புதுப் பாதை ஆரம்பமாகிறது. உன்னுடைய செயல், எண்ணம் எல்லாமே இனி, இந்தக் கட்டிடத்துக்குள் உருவாகும் திட்டங்களுக்காகத்தான். நாம் இருப்பது ஒரு போர்க் களம். துணிவும் தந்திரமும், தியாகமும்தான் நம்முடைய ஆயுதங்கள். இந்த அச்சாபீஸ்தான் பாசறை. இதில் வேலை செய்யும் இவர்கள் அனைவரும் விடுதலை வீரர்கள். இவர்கள் சாதித்திருக்கும் செயல்களோ அநேகம். இந்த ஜில்லா போலீஸ் இலாகாவே இவர்களுடைய துணிவையும் இரகசியமாகச் செயலாற்றும் திறமையையும் கண்டு அலறியது. இந்தக் கூட்டத்தில் சேர்ந்து உன்னையே தந்துவிடத் தயாரா?"

"எதற்கும் தயார்" என்றான் ரங்கமணி.

"நன்றாகக் கவனி. இந்த அச்சாபீசும், இதில் வெளியாகும் 'சுயேச்சை' என்ற வாரப் பத்திரிகையும் வெளி வேஷத்துக்குத்தான். நம்மீது சந்தேகம் வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் 'சுயேச்சை' அரசியல் சார்பற்ற பத்திரிகையாக வெளி வருகிறது. இன்றிலிருந்து நீ சுயேச்சைப் பத்திரிகையின் உதவி ஆசிரியர், விசேஷ நிருபர் என்ற போர்வையில் திரிய வேண்டும். ஒன்று மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள். போர்க் களத்தில் ஒரு சிப்பாய் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவு பொறுப்புடன் நீ இருக்க வேண்டும். இங்கிருந்து கொடுக்கப்படும் கட்டளைகளைப் பிசகாமல் செய்து முடிக்க வேண்டியதுதான் உன்னுடைய கடமை, புரிந்ததா?"

ரங்கமணி தலையை அசைத்தான். சர்தார் சொல்லுவதைக் கவனமாகக் கேட்டான்.

"நீயாக எந்தக் காரியத்திலும் இறங்கக் கூடாது. எதைச் செய்தாலும், இந்தக் கூட்டத்தின் கூட்டுறவுடன்தான் நீ செயல்படலாம். இன்றிலிருந்து நீ தனி மனிதன் அல்ல. இந்தக் கூட்டத்தின் ஓர் அங்கம். இதை எந்தச் சமயத்திலும் எக்காரணத்தாலும் மறந்து விடக் கூடாது" என்றார் சர்தார். அவர் கூறுவதையே உன்னிப்பாகக் கவனித்துக் கேட்டான் ரங்கமணி.

"இதுவரை நீ தனியாகச் செயல்பட்டதால் இந்த முறை முதலில் உனக்குத் திகைப்பாக இருக்கும். உன்னுடைய சுய உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, கூட்டுறவுடன் செயலாற்ற ஆரம்பத்தில் சிரமமாகத்தான் இருக்கும். கூட்டாகச் செயல்பட்டாலன்றி வெள்ளையனை இந்த மண்ணிலிருந்து விரட்ட முடியாது. முப்பது வருடங்களுக்கு முன் இந்த ஜில்லாவிலிருந்த ஓர் ஆங்கிலேய கலெக்டரைச் சுட்டுக் கொன்றார்கள் தெரியுமா?"

"தெரியுமே. வாஞ்சி என்பவர் சுட்டார்!"

"ஒருவன்தான் சுட்டான். ஆனால் அது தனிப்பட்டவனின் செயல் அல்ல. ஒரு கூட்டமே அதற்குப் பின்னால் இருந்து இயங்கியது. ஒரு சிறு விஷயத்துக்கே அவ்வளவு திட்டத்தோடு பலருடைய முயற்சியும் தேவைப்பட்டது. நம்முடைய பணி அதைவிடப் பயங்கரமானது. அதனால்தான் உன்னிடம் இவ்வளவு தூரம் அழுத்திச்சொல்லுகிறேன்."

"என்னை நீங்கள் நம்பலாம்" என்றான் ரங்கமணி. உணர்ச்சிப் பெருக்கால் அவன் குரல் தழுதழுத்தது.



"சரி வா, எல்லாரையும் அறிமுகப்படுத்தி வைக்கிறேன்" என்று கூறி எழுந்தார் சர்தார் சொக்கலிங்கம்.

பக்கத்து அறைக்குள் சென்றதும் அங்கிருந்த இரண்டு இளைஞர்களும் எழுந்து நின்றார்கள்.

"நம் படையில் புது வீரன் சேர்ந்திருக்கிறான் — பெயர் ரங்கமணி" என்றார் சர்தார். இரு இளைஞர்களும் ரங்கமணியை நோக்கித் தங்கள் வலக்கையை உயர்த்தி "வந்தே மாதரம்" என்றார்கள். ரங்கமணி மெய்

சிலிர்த்து நின்ருன். பதிலுக்கு அவனும் தன் கையை உயர்த்தி, ''வந்தே மாதரம்'' என்ருன்.

''இவர்கள் இருவரும் உதவி ஆசிரியர்கள். இவன் பெயர் சோமு'' என்ருர் சர்தார், ஒருவனைச் சுட்டிக் காட்டி. ரங்கமணி அவனைக் கூர்ந்து கவனித்தான்.

சோமுவுக்கு வயது இருபது இருக்கும். வட்ட முகம், கூர்மையான பார்வை, நீண்ட மூக்கு. அவனுடைய அழகில் பெண்மையின் சாயல் இருந்தது.

''பெண் வேடம் போட லாயக்கு என்று நினைக்கிருயா?'' என்று சர்தார் சொக்கலிங்கம் பிள்ளை கேட்டதும் ரங்கமணி திடுக்கிட்டான்.

'நான் நினைப்பதையே சொல்லி விட்டாரே' என்று அவன் மனம் முணகியது.

''குரல்கூடப் பெண் போல்தான் இருக்கும். ஆண்தான் இப்படி இருக்கிருனே தவிர, நிட்டம் வகுப்பதில் நிபுணன். பயங்கரச் செயலையும் ஒரு கலையாக எண்ணி ரசிப்பான். எத்தனையோ தடவை பெண் வேஷம் போட்டுக்





சப்ளையர் : நம் கடை இட்டிலி, தோசையெல்லாம் காற்றில் பறக்கிறது என்று குறை சொல்விர்களே சார், இனிமேல் அம்மாதிரி பறக்காது. அவற்றுடன் 'பேப்பர் வெயிட்'டையும் தருகிறோம்.

கொண்டு போலீஸ் இலாகாவையே ஏமாற்றி இருக்கிறான். இதோ இருக்கிறானே மந்திரம், இவனும் உதவி ஆசிரியன்தான். கையில் துப்பாக்கி எடுத்தால் குறி தவறாது. ரேடியோ, மின்சார இயந்திரங்களைப் பழுது பார்ப்பதில் கெட்டிக்காரன். என்ஜினியரிங் கல்லூரியில் மூன்று ஆண்டுகள் படித்துவிட்டுப் பாதியில் வந்து விட்டான்'' என்றார் சர்தார். அவர் சுட்டிக் காட்டிய இளைஞனைப் பார்வையில் எடை போட்டான் ரங்கமணி.

மந்திரம் சிரித்துக் கொண்டே நின்றான். அவனுடைய அரும்பு மீசையும், குறும்புப் பார்வையும் ரங்கமணியைக் கவர்ந்தன.

அடுத்த விசாலமான அறைக்குள் நுழைந்ததும் அங்கு இயங்கிக் கொண்டிருந்த அச்சு இயந்திரம் நின்றது. அதை இயக்கிக் கொண்டிருந்த ஒரு முரட்டு இளைஞன் புருவத்தை உயர்த்திச் சந்தேகப் பார்வையுடன் ரங்கமணியை நோக்கினான்.

''நம்முடைய பாரத மாதா சங்கத்துக்கு இன்னொரு வீரன் கிடைத்திருக்கிறான். இவன் பெயர் ரங்கமணி'' என்றார் சர்தார். அந்த இளைஞன் கையை உயர்த்தி, ''வந்தே மாதரம்'' என்றான். பதிலுக்கு ரங்கமணியும் வீர வணக்கம் செலுத்தினான். அந்த அறையை விட்டு வெளியே வந்தபோது சர்தார் சொக்கலிங்கம் சொன்னார்:

''இவன் பெயர் மீனாட்சி நாதன். கொஞ்சம் முன்கோபக்காரன். முரட்டு ஆசாமி. பாளையங்கோட்டை ஜெயிலுக்குப் பக்கத்தில், கொஞ்ச நாட்களுக்கு முன்பு ஒரு குண்டு வெடித்தது தெரியுமா? அது இவனுடைய வேலைதான்.''

ரங்கமணி திரும்பி மீனாட்சி நாதனை வியப்போடு பார்த்தான். வடபக்கத்து அறைக்குள் நுழைந்தபோது அங்கு மூன்று இளைஞர்கள் அச்சுக் கோத்துக் கொண்டிருந்தார்கள். சர்தாரைக் கண்டதும் தங்கள் வேலையை நிறுத்தி விட்டுத் திரும்பினார்கள்.

''உங்களுக்குப் புது நண்பன் கிடைத்திருக்கிறான்'' என்றார் சொக்கலிங்கம். உடனே ரங்கமணி அம்மூன்று இளைஞர்களையும் நோக்கித் தன் வலக் கையை உயர்த்தி ''வந்தே மாதரம்'' என்றான்.

''இவன் மாணிக்கம்; இவன் நாகலிங்கம்; இவன் முத்து'' என்று அறிமுகம் செய்து வைத்தார் சொக்கலிங்கம்.

மூவருமே நல்ல வாட்ட சாட்டமானவர்கள். மாணிக்கம் மீசையை முறுக்கி விட்டிருந்தான். ஆண்மையே மீசையில் தான் இருக்கிறது என்று பறைசாற்றிக் கொண்டிருந்தது அவன் மீசை. பரந்த முகத்துக்கு அந்த முறுக்கு மீசை அழகாயிருந்தது.

முத்து, பார்ப்பதற்குச் சாதுவாகக் காட்சியளித்தான். தலை முடியை ஒட்ட வெட்டியிருந்தான். அது பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது.

நாகலிங்கம் நல்ல சிவப்பு நிறம். மீசையை இரு ஓரங்களிலும் வெட்டி மூக்குக்குக் கீழே ஹிட்லர் மீசை வைத்திருந்தான்.

அவர்களைத் தாண்டி அடுத்த அறைக்குள் சென்றபோது இரண்டு இளைஞர்கள் அச்சுப் பிழை திருத்திக் கொண்டிருந்தார்கள். நாற்காலிகளில் சாய்ந்தவாறு கால்களை மேஜை மீது போட்டுக் கொண்டிருந்தார்கள். சர்தார் சொக்கலிங்கத்தைக் கண்டதும் இருவரும் எழுந்து நின்றார்கள். ரங்கமணியை வெறிக்கப் பார்த்தார்கள்.

''நம்முடைய புதுக் கூட்டாளி. பெயர் ரங்கமணி'' — அறிமுகம் செய்து வைத்தார் சர்தார். உடனே அந்த இளைஞர்கள் ரங்கமணிக்கு வரவேற்புக் கூறத் தங்கள் கையை உயர்த்தினார்கள். அதற்குள் ரங்கமணி ''வந்தே மாதரம்'' என்று முந்திக்கொண்டான். அந்த இளைஞர்களிடம் புன்முறுவல் தோன்றியது.

''இவன் காசிலிங்கம்; இவன் நீலகண்டன். இருவரும் இந்துக் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் படிக்கிறார்கள். இரவில் இந்த வேலை'' என்றார் சொக்கலிங்கம் பிள்ளை. அவர்களை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் ரங்கமணி.

''ரங்கமணியும் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தவன்தான். இப்போது படிப்பை நிறுத்தி விட்டு இந்த வேலைக்கு வந்து விட்டான்'' என்றார் சர்தார் சொக்கலிங்கம்.

''எந்த வேலைக்கு?'' என்று கேட்டான் காசிலிங்கம்.

''வந்தே மாதரம் வேலைக்கு'' என்றான் ரங்கமணி. எல்லோரும் சிரித்தார்கள்.

அந்த அறையை விட்டு வெளியே வந்தபோது சர்தார் சொக்கலிங்கம் சொன்னார்:

''இங்கு வேலை செய்யும் மற்றத் தொழிலாளிகள் இரவிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் இங்கு இருக்க மாட்டார்கள். இப்போது பார்த்தாயே, இவர்கள்தாம் நம் பாரத மாதா சங்கத்தைச் சேர்ந்த தொண்டர்கள். இங்கு நடப்பவை மற்றத் தொழிலாளர்களுக்

குத் தெரியாது. இரகசியக் கூட்டமெல்லாம் இரவில்தான் இங்கு நடக்கும். இங்கு வேலை செய்யும் மற்றத் தொழிலாளர்களுடன் பழகும்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவர்களுக்கு எவ்வித சந்தேகமும் தோன்றவிடக்கூடாது. நம் நம்பிக்கைக்குத் தகுந்தவர்கள் இப்போது இங்கே இருக்கிறார்களே, இந்த எட்டுப் பேர் மட்டும்தான்.''

சர்தார் சொல்லுவதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டே அவரைத் தொடர்ந்து நடந்தான் ரங்கமணி. சர்தாரின் அறைக்குள் வந்ததும் அறைக் கதவைச் சாத்திவிட்டு ஒரு சோபாவில் அமர்ந்தார் சர்தார். உள்ளே யிருந்த மேஜையைச் சற்றுத் தள்ளி வைக்கும்படி கூறினார். ரங்கமணி மேஜையை இழுத்து வடபுறத்துச் சுவர் ஓரமாகத் தள்ளினான். சர்தார் எழுந்து மேஜைக்கு அடியில் தரையில் விரிக்கப்பட்டிருந்த விரிப்பை நீக்கினார். ரங்கமணி வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். விரிப்பு விலகியதும் தரையில் முதலில் ஒன்றும் தோன்றவில்லை. சர்தார் டார்ச் லைட்டை ஏற்றியபோதுதான் அந்தத் தரைப் பகுதி மரத்தினால் ஆனது என்பது தெரிந்தது. சர்தார் அந்தப் பகுதியைப் பிடித்து நகர்த்தினார். அது இருந்த இடத்தில் ஒரு பெரிய பள்ளம் தோன்றியது. டார்ச் லைட்டின் ஒளியை உள்ளே காட்டினார். ரங்கமணி குனிந்து பார்த்தான். உள்ளே இரண்டு பேர் உட்கார வசதியாக ஒரு பெரிய அறையே இருந்தது. வெடி மருந்துகளுக்கு வேண்டிய சாமான்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. கொஞ்சம் கைக்குண்டுகளும் ஒரு மூலையில் கிடந்தன. எல்லாவற்றையும் பார்த்து மலைத்து நின்றான் ரங்கமணி. பிறகு அந்தப் பாதாள அறையை மூடிவிட்டு விரிப்பை அதன் மீது விரித்தார். மேஜையைப் பழையபடி அந்த இடத்துக்குத் தள்ளினான் ரங்கமணி.

''இதுதான் நம்முடைய ஆயுதக் கிடங்கு'' என்றார் சொக்கலிங்கம் பிள்ளை. எல்லாவற்றையும் பார்த்த பிரமிப்பில் தன்னை மறந்து நின்றான் ரங்கமணி.

ரங்கமணிக்கு எல்லாமே பிரமிப்பாயிருந்தது. அந்தச் சூழ்நிலையில் நிலைகொள்ளாமல் தவித்தான். அந்த அச்சு நிலையமும், பத்திரிகைத் தொழிலும், இரவில் அங்கு வேலை பார்க்கும் இளைஞர்களும், அவர்களுடைய இரகசியமான செயல் திறனும் அவனுடைய சிந்தனையில் நிறைந்து திணறடித்துக் கொண்டிருந்தன. அந்த மர்மமான பயங்கர இயக்கத்தில் தானும் ஓர் அங்கம் என்பதை எண்ணியபோது அவன் உடல் சிலிர்த்தது. பெருமையால் பூரித்துப் போனான்.

ரங்கமணிக்கு அந்தச் சூழ்நிலை முதலில் திகைப்பாக இருந்தது. ஆனால் அதில் செயலாற்றிய மற்றச் சகாக்களுடைய சுறுசுறுப்பும், தீவிரமும் அவனைக் கவர்ந்தன. ஓரிரு தினங்களில் அவனும் அந்தக் கூட்டத்தில் ஒன்றியவனாகிவிட்டான். மற்றத் தோழர்களுடைய தொடர்பு அவனுக்குத் தெம்பூட்டியது.

சர்தார் சொக்கலிங்கம் பிள்ளை சொன்னது அவன் நினைவில் ஆழப் பதிந்து விட்டது. ''இது ஒரு குடும்பம். அத்தனை பேருமே கண்ணும் கருத்துமாகக் காப்பாற்ற வேண்டிய குடும்பம் இது'' என்று அவர் சொன்னது எவ்வளவு உண்மை!

அது ஒரு குடும்பந்தான். ஒரு லட்சியத்தை நோக்கி ஒரே திசையில் சென்று கொண்டிருக்கும் ஒரு படையைப்போல் செயலாற்றியது. அதை அத்தனை பேரும் மிகுந்த கவனத்துடனும் உற்சாகத்துடனும் செலுத்தினார்கள்.

திருநெல்வேலி மாவட்டம் முழுவதும், ஏன், அடுத்த மாவட்டங்களில் கூட நடத்தப்பட்ட பெரிய வெடிகுண்டு வீச்சுகளிலும், பயங்கரச் செயல்களிலும் இந்தக் கூட்டத்தார்தான் பெரும் பங்கு வகித்தனர். அதற்கான திட்டங்கள் அனைத்தும் அந்த அச்சகத்துக்குள் உருவானதுதாம். திட்டங்கள் தீட்டுவதிலும் அவற்றை நிறைவேற்ற வழி வகுப்பதிலும் சர்தார் சொக்கலிங்கத்துக்கு இருந்த திறமையில் அனைவருக்குமே அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

இவரைத் தெரிகிறதா?



கிரிக்கெட் ஆடத் தயாராக அமர்ந்திருக்கும் இந்த மாணவர் யார் என்று தெரிகிறதா? அவரது முக ஜாடை யாரை நினைவூட்டுகிறது? சொல்லுங்கள், பார்க்கலாம்! கண்டு பிடிக்க முடியாவிட்டால் 35-ஆம் பக்கம் புரட்டிப் பாருங்கள்! யாரென்று தெற்றெனத் தெரிந்து விடும்!



1. ''ஏனிப்படி வள்ளுன்னு விழறேள்; என்ன நடந்து போச்சு இப்போ?''

2. ''வாலைக் சுருட்டிக்கிட்டு ஓடறான் பார்!''

3. ''நாயாக அலைகிறேன், பாவம் ஒரு வாரனுவது குதிர மாட்டேங்கறது.''

4. ''அச்சீ நாயே!''

5. ''நம்மகிட்ட வாலாட்டாதே பிரதர்! ஒட்ட நறுக்கிடுவேன்!''

6. ''சம்பள உயர்வு வேணும்னு அதுக்காக இப்படியா நாயாட்டமா வாலைக் குழைச்சுகிட்டுக் கெஞ்சணும்?''

7. ''அது நன்றிகெட்ட ஜன்மங்கறேன்; விட்டுத் தள்ளு.''

8. ''இப்படி இந்த வீட்டிலே அவஸ்தைப்படறதை விட நாயாப் பொறந்திருக்கலாம்!''

9. ''ஏண்டா நாயாட்டம் மேலே விழுந்து பிடுங்கறே!''

10. ''குஞ்சாலாடு பிடிக்கப் போறேன்னு சொல்லிட்டேன். அப்போலேருந்து நாக்கைத் தொங்கப் போட்டுண்டு ஜலம் சொட்டக் காத்துண்டிருக்கான்!''

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

விசித்திரமான அந்தக் குடும்பத்துக்குத் தலைவராக விளங்கினார், சர்தார் சொக்கலிங்கம் பிள்ளை. அவரிடம்தான் மற்றவர்களுக்கு எவ்வளவு மரியாதை, எவ்வளவு பாசம்! அவரை அங்குள்ளவர்கள் ''ஐயா!'' என்று கூப்பிடும் பாணியிலேயே தெரியும்; அவர் மீது மற்றவர்கள் வைத்திருக்கும் மதிப்பும், அபிமானமும். அதற்காக அவர், எதேச்சாதிகாரியாகி விடவில்லை. அங்குள்ள கட்டுப்பாடும், விதி முறைகளும் ஓர் அரசாங்கம் நடப்பது போலவே இருந்தன.

அந்தச் சூழ்நிலை முதலில் ரங்கமணிக்குத் திகைப்பூட்டியதில் வியப்பில்லை. வெகு சீக்கிரத்தில் மற்றவர்களோடு ஒட்டிப் பழகி விட்டான். ரங்கமணியைத் தவிர மற்றவர்களும் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்கள். எல்லோருக்கும் சொந்த வீடுகள் இருந்தன. ரங்கமணி மட்டும் அச்சு நிலையத்தைத் தன் இருப்பிடம் ஆக்கிக் கொண்டான். ஹோட்டலிலேயே சாப்பிட்டுக்கொள்ளத்தான் முடிவு செய்தான்.

அன்று இரவு சொக்கலிங்கம் பிள்ளையின் வீட்டில் ரங்கமணியும் திரிவேணியும் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது அது பற்றிய பேச்சு நடந்தது. அப்போது சொக்கலிங்கம் பிள்ளையும் உடனிருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

''நாளை முதல் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொள்ளுகிறேன். அதற்கான ஏற்பாடு செய்து விட்டேன்'' என்றான் ரங்கமணி.

''சரி, உன் இஷ்டம்'' என்றார் சர்தார் சொக்கலிங்கம்.

''ஏன்? இந்தச் சாப்பாடு பிடிக்கவில்லையா?'' என்று கேட்டாள் திரிவேணி.

''அதற்காக இல்லை. உங்களுக்கு ஏன் சிரமம்?''

''இதில் என்ன சிரமம்? அப்பா, இங்கேயே அவர் சாப்பிடட்டுமே?'' என்றாள் திரிவேணி, சர்தாரைப் பார்த்து.

''நான் வேண்டாமென்று சொல்லவில்லையே. அவன் இஷ்டம் எப்படியோ அப்படி'' என்றார் சர்தார்.

''சாப்பாட்டுக்கென்று இங்கு வரவேண்டும். அச்சாபீஸ் பக்கத்திலுள்ள ஹோட்டலிலேயே சாப்பிட்டுவிடுவது சுலபம்.''

''சாப்பாட்டு நினைவிலாவது இங்கு வரக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஒரேயடியாக அச்சாபீசுக்குள் புரட்சிப் புயலில் சிக்கிக் கிடந்தால் மூச்சுத் திணறிவிடும். கொஞ்சம் புத்தி தெளியவாவது இந்தப் பக்கம் வாருங்களேன்!'' என்றாள் திரிவேணி, சிரித்துக் கொண்டே.

''அந்தப் புயலில் மூச்சடக்கும் சாதகத்தில் ஈடுபட்டிருக்கிறேன். அதுவே எனக்குத் திருப்தியாக இருக்கிறது.''

இதைக் கேட்டுச் சொக்கலிங்கம் பிள்ளை இலேசாகச் சிரித்துக் கொண்டார்.

''என்னப்பா நீங்களும் சிரிக்கிறீர்கள்? இங்கேயே சாப்பிடச் சொல்லுங்கள்'' என்றாள் திரிவேணி.

''அவனுடைய இஷ்டப்படி நடக்கட்டுமே. நான் எப்படி அவனை வற்புறுத்த முடியும்?'' என்றார் சர்தார்.

''நீங்கள் சொல்லவில்லையே என்ற நினைப்போ என்னவோ?''

''அப்படியா ரங்கமணி? இது உன் வீடு மாதிரி'' என்றார் சர்தார்.

''அதற்கில்லை. வெளியில் சாப்பிடுவதுதான் எனக்கு வசதி. அதனால்தான்....''

''தீவிரவாதிகளாயிருந்தால் பிடிவாதமும் இருக்க வேண்டுமென்பது நியதியா?'' என்றாள் திரிவேணி, வெடுக்கென்று.

''பிடிவாதமெல்லாம் வார்தாவாசிகளுக்குத்தான்'' என்ற ரங்கமணி சிரித்தான்.

இந்தப் பேச்சுக்களை அவ்வளவு நேரமும் பரிமாறிக் கொண்டே கேட்டுக் கொண்டிருந்த அத்தை குறுக்கிட்டுப் பேசினாள்: ''தம்பி, இங்கேயே சாப்பிடேன். உனக்கு என்ன வேணுமோ சொல், நான் செய்து தருகிறேன்!'' ரங்கமணியின் இதயம் சிலிர்த்தது.

இனி தட்ட முடியுமா? அது ஒரு தாயின் அழைப்பாக அல்லவா அமைந்து விட்டது.

''என்ன! அத்தை சொல்லுகிறார்கள். சரி தானே?'' — திரிவேணி கேட்டாள். ரங்க மணி அத்தையைக் கனிவோடு பார்த்தான்.

''அதற்கில்லையம்மா உங்களுக்கு என்னால்...'' என்று இழுத்தான்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை தம்பி. எனக்கென்ன சிரமம்? ஹோட்டலில் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. இங்கேயே சாப்பிட வந்துவிடு'' என்றாள் அத்தை. ரங்கமணி பதில் கூற முடியாமல் உட்கார்ந்திருந்தான்.

''என்ன சரிதானே?'' — குறுக்கிட்டுக் கேட்டாள், திரிவேணி.

''சும்மா சும்மா துளைத்துக் கேட்காதே, திரிவேணி. இங்கேதான் வருவான்'' என்றாள் அத்தை. ரங்கமணி அவளை ஏறிட்டுப் பார்த்தான். பசியெடுத்த கன்று பசுவைப் பார்ப்பது போல் இருந்தது அந்தப் பார்வை. அது அத்தையை நெகிழ வைத்திருக்க வேண்டும். அவளும் குழந்தையைப் பெற்று வளர்க்கும் வாய்ப்பு இல்லாதவள்தான். தன்னுடைய துக்கத்தை யெல்லாம் திரிவேணியின் முகத்தில் மறந்திருந்தாள். இப்போது கொஞ்ச நஞ்சம் இருந்த ஏக்கமும் ரங்கமணியின் முகத்தைக் கண்டதும் மறைந்து விட்டது.

அத்தை காட்டிய பரிவு, ரங்கமணியின் கண்களைக் கலங்க வைத்து விட்டது. தன்னை அறியாமலேயே அந்த வீட்டுக் குழந்தையாகி விட்டான் ரங்கமணி.

''சரி, எப்படியோ அவனைச் சம்மதிக்க வைத்து விட்டீர்கள்'' என்றார் சர்தார் சொக்கலிங்கம் பிள்ளை.

''அத்தைக்குத்தான் வெற்றி. அவள் சொன்னதும் மறு பேச்சில்லையே'' என்றாள் திரிவேணி வியப்புடன்.

''ரங்கமணி! இவர்களிடம் ஜாக்கிரதையாக நடந்துகொள். கொஞ்சம் ஏமாந்தால் போதும், அப்படியே உன்னைப் பொட்டலம் கட்டி வார்தாவுக்குப் பார்ஸலிலே அனுப்பி விடுவார்கள்'' என்றார் சொக்கலிங்கம் பிள்ளை சிரித்துக் கொண்டே.

சாப்பிட்டுவிட்டு ரங்கமணி அச்சாபீஸுக்குப் போய்ச் சேர்ந்தபோது, இரவு பத்தரை மணிக்கு மேலாகி விட்டது. உள்ளே சோமு படுத்திருந்தான். அவனுடைய வீடு கைலாசபுரத்தில் இருந்தது. அவனுக்கு இன்னும் கலியாணமாகவில்லை. அவன் மட்டும் என்ன; அந்தக் கூட்டமே பிரம்மச்சாரிக் கூட்டம் தான்! பாரதத் தாயின் விலங்குகள் அறு பட்ட பிறகுதான் திருமணம் என்ற விரதம் எடுத்தவர்கள். சோமுவுக்கு வயதான தாய் ஒருத்திதான் துணையிருந்தாள். ஆகவே அநேகமாக அவன் பொழுதெல்லாம் அச்சாபீசுக் குள்ளேயே கழிந்து கொண்டிருந்தது. இப்போது அவனுக்குத் துணையாக ரங்கமணியும் கிடைத்து விட்டான்.

ரங்கமணி படுக்கையில் கண்களை மூடிக் கிடந்தான். தூக்கம் வரவில்லை. தொப்புளில் பின்னைப் பூச்சியைக் கட்டிக் கொண்டவனைப் போல் தவிறிக் கொண்டிருந்தான்.

''என்ன தூக்கம் வரவில்லையா?'' என்று சோமு கேட்டான்.

''உன்னுடைய கதையும் அப்படித்தான் போலிருக்கிறது'' என்று கூறிக்கொண்டே படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான் ரங்கமணி. சோமுவும் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து தலையணையை எடுத்து மடியில் போட்டுக் கொண்டு கைகளை அதன் மீது ஊன்றிக் கொண்டான்.


''உன்னிடம் ஒரு விஷயம் கேட்பேன், சொல்லுவாயா?'' — ரங்கமணி கேட்டான்.

''என்ன?''

''சர்தார் சொக்கலிங்கம் பிள்ளை பூர்விகத்தில் யார்? இந்தப் பயங்கர இயக்கத்தை ஆரம்பிக்கு முன்பு என்ன செய்துகொண்டிருந்தார்?''


''யாருக்குத் தெரியும்?... ஒன்று மட்டும் நிச்சயம். சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய பாரதியார் எல்லோரும் இருந்த காலத்திலேயே நம்முடைய ஐயா பயங்கரவாதியாக இருந்திருக்கிறார்கள். இவ்வளவுதான் தெரியுமே தவிர, மற்ற விஷயங்கள் எல்லாம் மர்மம்தான்'' என்றான் சோமு.


ரங்கமணிக்கு ஏமாற்றமாக இருந்தது. அதே சமயம் சர்தாரைப் பற்றிய மர்மங்களை அறியும் ஆவலும் அதிகரித்தது. (தொடரும்)




கிரிக்கெட் கணேசன்!

கிரிக்கெட் ஆட்ட உடைகளோடு ஆடத் தயாராக அமர்ந்திருக்கும் அந்த மாணவர் இன்றைய ஜெமினி கணேசன் தான். பட்டதாரியான ஜெமினி கணேசன் புதுக்கோட்டையில் பிறந்தவர். கல்லூரி நாட்களில் கிரிக்கெட் ஆட்டத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். பல உத்தியோகங்களை ஏற்ற கணேசன் ஜெமினியில் திரு கே. ராம்நாத் வாயிலாகச் சேர்ந்து படத்துறையில் புகுந்தார். 'காதல் மன்னன்' என்று ரசிகர்களால் பாராட்டப் பெறும் ஜெமினி கணேசன் சமீபத்தில் தம் நடிப்பில் 'செஞ்சுரி' எடுத்திருக்கிறார். ஜாகர்தாவில் நடந்த படவிழாவில் அவர் கலந்து கொண்டுள்ளார். ஒரு கிரிக்கெட் டெஸ்ட் விடாமல் எல்லாப் பந்தயங்களிலும் தம்பதி சமேதராக விஜயம் செய்து பார்வையிடுவார் கணேசன். நட்சத்திர கிரிக்கெட் பந்தயங்களில் நிஜமாகவே கிரிக்கெட் ஆடும் கணேசன் 'கிரிக்கெட் நக்ஷத்திரம்' என்ற புகழும் பெற்றவர்.






Leyland


வெண்ணிலவுப்
பெண்ணரசி
சோமு



அத்தியாயம் 8

மாதவப் பள்ளி

இருள் மயமான அந்தக் கானகத்திலே இப்போது வானத்து ஒளி புகுந்து பரவத் தொடங்கியது. சூரியனுடைய உதயக் கதிர்கள் நடுகல்லின் மீது படர்ந்தன! பொன்மணி எழுந்தாள்.

இரவின் துயர இருளிலே அந்த நடுகல்லுக்கு முன்னால் விழுந்து கதறியழுத பொன்மணி, இப்போது ஆறுதலும் நம்பிக்கையும் அடைந்தவளாக அந்த இடத்திலிருந்து புறப்பட்டாள். கணவனைப் பற்றித் தனது உள்ளத்திலே பொங்கிக் கொண்டிருந்த துன்பத்தை யெல்லாம் நடுகல் வீரனுடைய திருவடிகளிலே கொட்டிவிட்டு, தனது அருமைத் தந்தையின் நினைவிலே இதயம் சுழன்றவளாக அந்த இடத்திலிருந்து விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தாள் பொன்மணி.

ஆனால் என்ன வியப்பு! எத்தகைய பெரிய அதிர்ச்சி அவளுக்காகக் காத்திருந்தது முல்லை மூதூரிலே!

ஓட்டமும் நடையுமாக முல்லை மூதூரை நோக்கி விரைந்து கொண்டிருந்த பொன்மணியின் கண்களுக்கு முன்னால், அதோ தொலை தூரத்தில் எத்தகைய கொடிய காட்சி தெரிகிறது! எத்தனை பெரிய புகை கிளம்பி வானத்தையே போர்த்துகிறது!

'அது என்ன புகை! முல்லைமூதூரில் இருந்தா வருகிறது அது!' என்று ஒரு விநாடி தயங்கினாள் பொன்மணி.


ஆம்; புகையும் நெருப்புமாக ஒரே ஊழித் தீ தெரிகிறது முல்லைமூதூரிலே!

பொன்மணி பதற்றத்தோடு மேலே நடந்தாள். திகைப்பும் வேதனையும் அந்த நெருப்பைப் போல் இதயத்திலே பிடித்து எரிந்தன! ஓட்டமாக ஓடி முல்லைமூதூரை வந்தடைந்தாள்.

ஆகா! எத்தகைய கொடிய காட்சி அது! வளமும் எழிலும் மலர்ந்து நின்ற அந்த மூதூர் இப்போது கருகித் தீய்ந்து புகைந்து கொண்டிருந்தது. ஊர் முழுவதுமே சுடுகாடாகிக் கிடந்தது, பொன்மணியின் கண் முன்னே!

ஊர் மக்கள் எல்லாரும் என்ன ஆனார்கள்? அங்கிருந்து பதறி ஓடி விட்டார்களா? அதோ நாலைந்துபேர் அங்கு வாய்ப்போடு புலம்பிக் கொண்டு வருகிறார்களே!

பொன்மணி அங்கே போவதற்குள் இதோ அவர்களே பதறியடித்துக் கொண்டு அவளை நோக்கி வேகமாக ஓடி வருகிறார்கள்.


நாளுக்கு நாள்...
உங்கள் மேனியெழிலே
ஓங்கச் செய்வது
ரெக்ஸோனா
அழகுசாதனத் தைலங்கள் இணைந்த விசேஷக் கலவை
யாகிய 'கேடில்' அடங்கியது ரெக்ஸோனா ஒன்றுதான்
பூரிக்கும் இன்ப நறுமணம் நேரமெல்லாம் உங்கள்மீது
நின்றுநிலவச் செய்வது ரெக்ஸோனா ஒன்றுதான்.
அன்றாடம் உபயோகியுங்கள் ரெக்ஸோனா.
'கேடில்' அடங்கிய
ரெக்ஸோனா
உங்கள் மேனியெழிலுக்கு
உகந்தது
லின்டாஸ்-RX. 26
Rexona
GOOD FOR YOUR SKIN
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

''கோசர் குலக் கொழுந்தே! நடக்கக் கூடாதது நடந்து விட்டது!''

இவ்வாறு புலம்பினான் ஒரு முதியவன்.

''பொன்மணி! உன் தந்தையைத் துளுநாட்டுத் தானைத் தலைவன் மிஞிலி சிறைப்பிடித்துக் கொண்டு சென்று விட்டான். உன் கணவன் துளு நாட்டு இளவரசியை இரவுக்கு இரவே அரண்மனையிலிருந்து கடத்திச் சென்று விட்டான் என்று வெகுண்டு, இந்த ஊரையே கொளுத்தி விட்டது துளு நாட்டுப் படை!'' என்று பதறினான் அந்த முல்லைமூதூர்க் கிழவன்.

''பெரியவரே! என்ன சொல்லுகிறீர்கள்? துளு நாட்டுப் படை இங்கே எப்போது வந்தது? இந்த விபரீதம் எல்லாம் எப்படி நேர்ந்தது? என் தந்தையை எதற்காகச் சிறைப் பிடிக்க வேண்டும்?''

பொன்மணிக்கு உடம்பெல்லாம் சீற்றமும் துயரமும் படபடத்தன.

''பொன்மணி! உன் கணவன் அழலாடி இப்படியும் ஒரு செயல் செய்வான் என்று யார்தான் எதிர்பார்க்க முடியும்? என்றாலும் அதற்காக இத்தகைய ஒரு தண்டனையா நமக்கும் இந்த ஊருக்கும்! ஐயோ, அந்தப் படுபாவி மிஞிலியேயல்லவா இங்கே படையெடுத்து வந்தான்! உன்னை எங்கெல்லாம் புகுந்து தேடினான்! உன் தந்தைதான் எத்தனை பொறுமையோடு வாதாடிப் பார்த்தார்! அந்த வெறியர்கள் பொருட்படுத்தவில்லையே! துளு நாட்டுப் படை செய்த வெறித்தனமான செயல்களையெல்லாம் எப்படிச் சொல்லுவேன்!''

இந்தச் சொற்களைக் கேட்டதும் தலை சுற்றியது பொன்மணிக்கு. நூறாயிரம் மின்னல்கள் பாய்ந்து சுழன்றன. என்ன நடந்திருக்கிறது என்பதை அவளால் உணர முடிந்தது. கண்கள் நெருப்பைக் கொட்டின. கையும் காலும் வெறி கொண்டு துளங்கின. அவளால் அந்த இடத்திலேயே நிற்க முடியவில்லை.

''முல்லை மூதூர்ப் பெருமக்களே! போதும். ஒன்றும் சொல்லாதீர்கள். இந்தப் பாவச் செவிகளிலே இதற்கு மேல் ஒன்றும் பேசாதீர்கள். நெருப்பிலே வெந்து சாம்பலாகி விட்ட இந்த முல்லைமூதூரிலே என் இதயமும் எரிந்து சாம்பலாகி விட்டது. என்னிடம் இதற்கு மேல் ஒன்றுமே சொல்லாதீர்கள். நான் இந்த விநாடியே இங்கிருந்து அகல்கிறேன். கோசர் குலத்தின் மறு வாழ்வுக்காக உள்ளம் துடித்தேன். ஆனால் என்னுடைய தீவினை இந்த ஊரையே எரித்துக் கருக்கிவிட்டது. இனி மறுவாழ்வு பெறவேண்டியது எங்கள் கோசர் குலம் மட்டுமில்லை. இந்த முல்லைமூதூரும், இந்தப் பழம்பெரும் மூதூரின் அத்தனை மக்களுமே மறுவாழ்வு பெற வேண்டும்! பெரியோர்களே! இனி என்றைக்கு இந்த மூதூர் மறுவாழ்வு பெறுகிறதோ இனி என்றைக்கு இந்தச் சாம்பற் புகையிலிருந்து முல்லைமூதூர் மறுபடியும் பூத்து மலர்கிறதோ, அன்றைக்குத்தான் இந்தப் பொன்மணி மீண்டும் இந்த மண்ணிலே அடியெடுத்து வைப்பாள்! அதுவரை, அதுவரை, உயிர்ச் சுமையை இந்த உடலிலே தூக்கிக் கொண்டு வாழ்வாள் இந்தப் பொன்மணி! இனி அவள் உயிர் வாழ்வது, இனி இந்தத் தீவினைக் கூட்டிலே மூச்சு இழைவது முல்லை மூதூரின் மறு வாழ்வுக்காகத்தான். இந்தப் பேரூரின் மீது படர்ந்த நெருப்பிலே உள்ளம் கொதித்து எரிகிறது. இந்தச் சீற்றத் தீ, இந்தக் கோபக் கொடுங் கனல், முல்லைமூதூருக்கு மறு வாழ்வு தந்துவிட்டுத்தான் அவியும்! இது நான் பேசுகிற பேச்சு இல்லை. இது என் ஆன்மாவின் குரல்! என் உயிர்த் துடிப்பின் பேச்சு இது! பெருமக்களே! இதோ என் முன் புகைகிற இந்த நெருப்பின் மீது ஆணையிடுகிறேன். கோசர் குலம் தனக்கு நேர்ந்த பழியைக் கட்டாயம் துடைக்கும். இந்த முல்லைமூதூரின் மறுவாழ்வை உறுதியாக நிலைநாட்டும். எந்தக் கொடியவர்கள் நம்மை இந்த நிலைக்குக் கொண்டு வந்தார்களோ அவர்களுடைய முடிவிலே முல்லைமூதூர் மறுவாழ்வு பெறும்! இது உறுதி! இது ஆணை!''

பொன்மணியின் குரல் படபடத்தது. உடம்பு ஆடியது. கண்களிலே ஒரு வெறி, தீயாகப் பிடித்து எரிந்தது.

ஆம், அடுத்த விநாடி அவள் அங்கே நிற்கவில்லை. ஓடினாள். வெறி கொண்ட பத்தினிக் கடவுள் முல்லை மூதூரின் சூழலிலே 'விறுவிறு' என்று ஓடிச் சாடுவது போல, அங்கிருந்து ஓடினாள் பொன்மணி. யாரும் அவளைத் தடுத்து நிறுத்தவோ, அவளிடம் மறுமொழி பேசவோ முடியாதவாறு பொன்மணி ஒரு வேக வெறியிலே, கடுஞ் சீற்றத்திலே அங்கிருந்து ஓடினாள், ஓடினாள், ஓடிக் கொண்டேயிருந்தாள்!

சிற்றூர்கள், சாவடிகள், ஊர்ப் பொது மன்றங்கள், அங்காடிகள், சதுக்கங்கள் — எல்லாவற்றையும் கடந்து ஓடினாள் பொன்மணி. மக்கள் திகைத்தார்கள். பெண்களும் பிள்ளைகளும் அந்தக் காட்சியைப் பார்த்து மருண்

டார்கள். முதியவரும், காவலர்களும் தங்கள் கண் முன் ஒரு பெண் வெறி பிடித்து ஓடுவதைக் கண்டு திகைப்புற்றுத் துணுக்குற்று அதிர்ந்து போய் நின் ருர்கள்.

கானகங்களையும், நெடுஞ் சாலைகளை யும், பெரு மன்றங்களையும் தாண்டிக் கடந்து ஓடிப் படர்ந்து, எங்கு செல் கிறோம் என்ற நினைவே இல்லாத ஒரு மயக்க நிலையிலே, அந்தப் பெண்மைச் சீற்றம் சிற்றூர்களையும் பேரூர்களையும் தாண்டிப் படர்ந்தது, பாய்ந்து படரும் நெருப்பைப் போல!

பொன்மணி! அமைதியும், பண்பும், வஞ்சையும், கோசர் குலத்து வீரமும் பெண்மையின் குண நலன்களும் எல் லாம் ஒன்ருய் இணைந்த அந்த மாதரசி, சீற்றமும், வெறியும் உந்திய நிலையிலே பல காதங்கள் கடந்து பகலும் வெயி லும் தாண்டி ஏதோ ஒரு நகரத்தின் வாயிலிலே நுழைந்தாள்.

அது என்ன நகரம்? பொன்மணிக்குத் தெரியாது! அது எந்த ஊர்? பொன் மணி அறியாள்!

முல்லைமூதூரின் கோசர் மனை தவிர, வேறு எந்தச் சூழலிலும் புகுந்து அறி யாத அந்தப் பெண் பேதை ஏதோ ஒரு பெரு நகரத்தின் வாசலிலே புகுந்து சதுக்கத்தின் திருப்பத்திலேநின்ருள். ஒரு விநாடி அந்தவெருளி நின்றுதயங்கியது.

'எங்கே செல்கிறோம், யாரைச் சந் திக்கச் செல்கிறோம், என்ன காரியத் தைச் சாதிப்பதற்காக இப்படி நாம் அடர்கிறோம்!'

பொன்மணி ஒரு விநாடி சிந்தனை செய்தாள். பாசமும் நேசமும் அவளு டைய நெஞ்சத்தில் இனி யாருக்காக இயங்க வேண்டும்? கைப்பிடித்த கண வன், அவன் தனக்குத் துரோகம் செய்து விட்டான்! தன்னை வளர்த்து, தன்னைப் பாதுகாத்துத் தனக்கு ஒரு கணவனைக் கண்டெடுத்து மணமாலை சூட்டிய தகப்பன், அவன் சிறை புகுந் தான்! இனி யாருக்காக இந்த உடம் பிலே உயிர் இழைகிறது? இனி எதற் காக இந்த உடற் கூண்டிலே மூச்சு சிறையிருக்கிறது?

பொன்மணி சிந்தனை செய்தாள். கோசர் குலத்தின் மறுவாழ்வு, முல்லை மூதூரின் மறுமலர்ச்சி — இவற்றுக் காக இனி நான் உயிர் வாழ வேண்டும்! ஆனல் இந்த மாபெரும் செயலைச் செய்து முடிப்பதற்கு வேண்டிய ஆற் றல், இந்த மாபெரும் சாதனையைப் புரிவதற்கு வேண்டிய வாய்ப்பு தனக்கு உண்டா? — சதுக்கத்தில் நின்று தயங் கினுள் அவள்.

ஆம்; பொன்மணி சிந்தனை செய் தாள். கோசர் குலத்துக்காக, முல்லை மூதூரின் மறு பிறப்புக்காக அந்தப் பெரு நகரத்தின் தலைவாசலிலே நின்று ஒரு விநாடி சிந்தனை செய்தாள் பொன்மணி.

'என்ன தயக்கம் இது! என்ன கலக்கம் இது! குலப் பழியைத் துடைப் பதற்காகச் சென்ற ஓர் ஆண்மகன் தனது கடமையிலிருந்து தவறிஞன்! இனி அந்தப் பொறுப்பு என்னிடமா சார்கிறது? ஏ மனித குலமே, ஏ ஊழ் வினையே! இது என்ன சூழ்ச்சி? இது என்ன விபரீதம்? கொடுங்கோலர்க ளுடைய வெறிகளையும், தீய நச்சு மனி தர்களின் அட்டூழியங்களையும் ஒழிக்க வேண்டிய அறக் கடமையை இந்த மெல்லிய உடம்பிலா சுமத்துகிறாய் விதியே! இது என்ன நாடகம்?'

உள்ளத்துக்குள்ளே குமைந்தாள், பொன்மணி! உடனே கால்கள் மேலே நடக்க ஆரம்பித்தன.

நின்று சிந்தனை செய்த பொன் மணி இப்போது மீண்டும் நடக்க ஆரம் பித்தாள். நடையில் இருந்த வேகம் குறைந்து சிந்தனையின் வேகம் அதிகரித் தது. கால்களின் ஓட்டம் குறைந்து மனத்தின் ஓட்டம் விரைந்தது! உடம் பின் இயக்கம் தளர்ந்து உள்ளத்தின் இயக்கம் வன்மை அடைந்தது. பொன் மணி சிந்தனை செய்து கொண்டே அந்தப் பெரு நகரத்தின் வீதிகளிலே நடந்து சென்ருள்.

பகல் அகன்று இரவு கனியத் தொடங்கிய நேரம் அது. நகரத்து விளக்குகள் எரிய ஆரம்பித்தன. நகரத்து வீதிகளிலே 'அல்லங்காடி'கள் என்று அழைக்கப்படும் இரவுக் கடை களிலே வாணிப ஓசை எழுந்து ஒலிக் கத் தொடங்கியது. மக்கள் கூட்டத் தின் நடமாட்டமும் அதிகரித்தது.

பொன்மணி நடந்து கொண்டிருந் தாள், சிந்தனை வேகத்திலே! நாலைந்து வீதிகள், ஐந்தாறு சதுக்கங்கள், பத்துப் பதினைந்து வாணிபக் கூடங்கள் இவற்றையெல்லாம் கடந்து பொன் மணி மேலே நடந்து செல்லும்போது, அவளுக்கு அந்த நகரத்தின் சிறப்பு துலங்கியது.

அரச நகரமில்லை அது. ஆனல் வேருெரு சிறப்புத் துலங்கியது! இரவு அங்காடிகளிலே பூக்களும், வழிபாட்டுக்குரிய புனிதப் பொருள் களும் ஏராளமாகக் குவிந்து கிடப் பதைப் பார்த்ததும் இது ஒரு புண் ணிய நகரம் என்பதை உணர்ந்தாள் பொன்மணி. மேலே நடந்தாள்.







உங்கள் குடும்பத்திற்கு
அந்த வளமான
வனப்பைத் தாருங்கள்—

மார்கோ சோப் மூலம்



நறுமணமிக்க மார்கோ சோப் உங்கள் குடும்பத்தவர் அனைவரின் உடலையும் மென்மையாகப் பாதுகாக்கிறது. மார்கோவில் வாசமேறு மற்ற நீம் எண்ணெய் கலந்துள்ளது ... உங்கள் தோலின் இயற்கையான எண்ணெய்களைப் பாதுகாப்பதன் மூலம் தோலைக் காயாது காப்பாற்றுகிறது. மார்கோவின் அபரிமிதமான சுகாதார மிக்க நுரை தொற்று நோய்களை அணுகவிடுவதில்லை.

கல்கத்தா கெமிகலின் ஒரு தயாரிப்பு

JWT CCM 2960 A

புனிதமான அந்த நகரத்தின் மைய மான சதுக்கத்திலே வந்து நின்றான். அப்போது அவள் கண்முன் சற்றுத் தொலைவிலே இந்திரன் கோவில் போன்று அழகும் மேம்பாடும் அமைந்த ஒரு மாதவப் பள்ளி தெரிந்தது!

இரவு நேரம் ஆகி விட்டது என்ற உணர்வு கவிந்தது அவளுடைய உள்ளத்திலே! ஏதோ ஒரு வெறியினால் தள்ளப்பட்டு, இதுவரை இன்ன செய்கிறோம் என்ற நினைவு அற்ற நிலையில் இத்தனை காதங்கள் நடந்து வந்தாயிற்று. இனி இந்த இரவுப் பொழுதைக் கழிக்க வேண்டுமே! அதோடு இனிமேல் தான் என்ன செய்வது என்பதையும் வரையறை செய்ய வேண்டும்!

பொன்மணி எண்ணினாள், இந்த இரவுப் போதை இந்தப் பள்ளியிலேயே கழித்தால் என்ன என்று!

இந்த எண்ணம் ஏற்பட்ட பிறகு தான் பொன்மணியின் உள்ளத்தில் ஒரு நிதானம் உண்டாயிற்று.

''என்ன பதற்றமான செயலிலே புகுந்து விட்டேன். ஏதோ ஒரு வெறியிலே இரவுக்கு இரவே தந்தையைத் தனியே விட்டு விட்டுக் கானகத்துக்குள்ளே புகுந்தேன். இது முதலாவது தவறு. பிறகு அதே போக்கு இன்னொரு வெறியிலே இப்போது ஊரையும், மக்களையும் பிரிந்து எங்கோ வந்து நிற்கிறேன். இது எத்தனை பெரிய தவறு! இதெல்லாம் என்ன வேகங்கள்! நான்தான் இத்தனையும் செய்கிறேனா அல்லது, ஊழ்வினை இப்படியெல்லாம் வெறிக்குள்ளே என்னை எறிந்து விளையாடுகிறதா? அல்லது கோசர் குலத்து நேரிமையின் தந்தை, நடுகல்லிலே கண் துயில்கின்ற அந்த முதுமகனின் ஆவியானது என் உடலிலே புகுந்து என்னை இப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறதா?''

ஒரு கணம் இவ்வாறு எண்ணிப் பார்த்தாள் பொன்மணி.

''இருக்கலாம். நடுகல்லிலே துயில்கிற உயிர், தனது இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காகச் சில குறிப்பிட்ட மனிதர்களைத் தேர்ந்தெடுக்கிறது என்று பெரியவர்கள் சொல்லுவார்களே, அப்படித்தான் நடக்கிறது போலும்! கோசர் குலத்துக்குப் பழி ஏற்பட்டதே ஒரு பெண்ணினால்தானே? அந்தப் பெண் பழியைத் துடைத்து, பெண் பழிக்குப் பழி வாங்க வேண்டிய கடமையும் ஒரு பெண்ணைச் சார்ந்ததுதானோ? இருக்கலாம். அப்படித்தான் தோன்றுகிறது. இல்லையென்றால் நான் ஏன் என்னையும் மீறிய ஒரு வெறியிலே தன்னை மறந்து இப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்கிறேன்!''

இவ்வாறு எண்ணித் தனக்குள்ளேயே விந்தை நகை செய்துகொண்டாள் பொன்மணி.

''என்ன விந்தையான எண்ணம் இது! பழிக்குப் பழி வாங்குவதிலே பெண்ணாவது ஆணாவது! துளு நாட்டு நன்னர்களுடைய கொடுமைக்கு முன்னால் இத்தகைய சிந்தனைகளுக்கெல்லாம் இடமேது! இதுவரை செய்த பழி போதாது என்று என் தந்தையையும் சிறை செய்து அவரையும் துளுநாட்டுக்குக் கொண்டு சென்றுவிட்டானே அந்தக் கொடும்பாவி!''

தந்தை என்ற நினைவு வந்ததோ, இல்லையோ, அப்படியே தலை சுற்றியது பொன்மணிக்கு. பாசமும் ஆர்வமும் பொங்கி எழுந்தன. அந்த முதிய தந்தையின் முகமும், மட்டற்ற ஆசையோடு 'மகளே' என்று கொஞ்சுகிற அந்த வாஞ்சை ததும்பும் கண்களும், பொன்மணியின் எதிரிலே வந்து நின்றன! அவள் அப்படியே விம்மிவிட்டாள்!

''அப்பா, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?''

அவளையும் அறியாமல் இந்த வார்த்தைகள் உள்ளத்திலிருந்து கிளம்பின.

வட்டார நகைச்சுவை

தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்தினருக்கும் தனிப்பட்ட குண இயல்புகள் சில உண்டு. அந்த இயல்புகள் வெளியாகும் விதத்தில் ஹாஸ்யத் துணுக்குகள் எழுதி அனுப்புங்கள். சிறந்த துணுக்கு ரூபாய் இருபத்தைந்து பரிசு பெறும். பிரசுரமாகும் மற்ற துணுக்குகளுக்கு வழக்கம்போல் சன்மானம் உண்டு. வட்டார நகைச்சுவைத் தொடரில் இரண்டாவது பகுதி:

சென்னை மாவட்டம்

முடிவுத் தேதி: 18–3–67

உறையின் மேல் ''வட்டார நகைச்சுவை: சென்னை'' என்று குறிப்பிட வேண்டும். பிரசுரமாகாத துணுக்குகளைத் திருப்பி அனுப்புவதற்கில்லை. இவ் விஷயத்தில் கடிதப் போக்குவரத்து கிடையாது. ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

"அப்பா! நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்! அந்தப் படுபாவிகள் உங்களை என்ன செய்கிறார்கள் அப்பா!"

இப்படிச் சொல்லிக் கொண்டே, இவ்வாறு தனக்குத் தானே கேட்டுக் கொண்டே, அந்த மாதவப் பள்ளியின் சுற்றுப்புறத் திண்ணையிலே வந்து உட்கார்ந்தாள் பொன்மணி. அதற்கு மேல் அவளால் இனி நடக்க முடியாது. அங்கங்கள் எல்லாம் குழலாடின.

தந்தையின் நினைவு, அதோடு சேர்ந்து கணவன் செய்த வஞ்சம், இரண்டும் மாறி மாறி எழுந்து பின்னிப் புரண்டன பொன்மணியின் உள்ளத்திலே! தந்தையின் எண்ணம் வந்ததும் உடம்பு தள்ளாடியது. கணவனுடைய வஞ்சத்தை எண்ணியபோதோ, தள்ளாடிய உடம்பிலே ஒரு சீற்றமும் வேகமும் எழுந்தன. நெருப்பிலே எரிவதும், உடனே தண்ணீரில் முங்குவதுமாக அந்தப் பேதை — உள்ளம் தவித்துக் கொண்டிருந்தது.

பொன்மணி எத்தனை நேரம் இவ்வாறு மாதவப் பள்ளியின் திண்ணையிலே இருந்தாள் என்று அவளுக்கே தெரியாது. உள்ளேயிருந்து மணி ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து நூறுநூறு குரல்கள் ஒருமித்து ஒலிக்கிற வழிபாட்டுக் குரல் வந்தது. பள்ளியின் சூழலிலே எங்கிருந்தோ அகிற் புகையின் நறுமணம் 'கம்' என்று காற்றிலே கமழ்ந்து வந்தது. ஆகா! அந்த வழிபாட்டுக் குரலுக்கும், அற்புதமான அந்த அகில் மணத்துக்கும் எத்தகைய தெய்விக ஆற்றல்! எத்தனை குழம்பிய உள்ளத்திலும் எத்தகைய நிம்மதியை வழங்குகின்றன அவை!

குழம்பி வெந்து கொண்டிருந்த பொன்மணியின் உள்ளத்திலே மாதவப் பள்ளியின் அகிற் புகை புகுந்து ஒரு தெளிவை உண்டாக்கின. ஆனால், அந்தத் தருணத்திலே, துளுநாட்டில் என்ன நடந்து கொண்டிருந்தது?

மகளை எங்கோ மறைத்து வைத்து வஞ்சம் புரிந்து விட்டதாகக் குற்றம் சாட்டி, பொன்மணியின் தந்தையைச் சித்திரவதை செய்து கொண்டிருந்தான் மிஞிலி.

"என்னையும் கூட ஏமாற்றிவிடலாம் என்று நினைத்தீரோ கிழவரே! பாரும் என்ன நடக்கிறது என்று!"

இவ்வாறு வஞ்சினம் கூறிக்கொண்டு சூலபாணி கிழவரைச் சொல்லொணாத சித்திரவதைக்கு உள்ளாக்கினான் மிஞிலி. துளுநாட்டு வீரர்கள் அந்தக் கிழவரைத் தூணிலே சேர்த்துக் கயிற்றினால் கட்டினார்கள். தோன்றியபடியெல்லாம் கேள்விகள் கேட்டார்கள். மகளுடைய பிரிவினால் வேதனைத் தீயிலே வெந்து கொண்டிருந்த அந்த முதிய உள்ளத்தை முறையற்ற வகையிலே மேலும், மேலும் வாதனை செய்தார்கள் அந்தக் கொடிய வீரர்கள்.

அதே நேரத்தில் இத்தனை விளைவுகளுக்கும் காரணத் தலைவனான அழலாடியின் நிலை எவ்வாறு இருந்தது?

சேரப் பேரரசர்களுடைய கிளை மன்னர்கள் அரசாட்சி செய்துவந்த கொங்கு வஞ்சி நகரத்திலே, பாதுகாவலும் சுற்றங்களும் நிரம்பிய அரண்மனையின் நிலவறையிலே ஆதனுரின் மேற்பார்வையிலே அரச வைத்தியர்கள் பலர் கூடி இளவரசி நன்னிக்குச் சிகிச்சை செய்து கொண்டிருந்தார்கள். அவள் மயக்கமுற்றுக் கிடந்த கட்டிலின் அருகிலே, ஆதனுருக்குப் பக்கத்திலே நின்று அழலாடி இளவரசியின் முகத்தில் நினைவு பிறக்கிறதா என்று, ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

குழி அம்மியிலே பச்சிலைகளை அரைத்து நெற்றியிலே பூசுவதும், மயக்கம் தெளிவதற்கான மருந்துப் புகைகளைக் குடுக்கைகளில் இருந்து திறந்து நாசியிலே செலுத்துவதும், கிடுகி நின்ற பற்களை விலக்கிச் சித்தர்களின் மருந்துகளை உட்செலுத்துவதுமாக, வைத்தியம் நடந்து கொண்டிருந்தது இளவரசிக்கு.

ஆம்; இரவு நேரத்தில் சிவிகையிலே புறப்பட்ட ஆதனுரும் அழலாடியும் தங்கள் வீரர்களின் பாதுகாவலில் இளவரசி நன்னியைக் கொங்கு நாட்டின் வஞ்சி நகரத்துக்கே அழைத்து வந்தார்கள். ஆதனுரிடம் அளவற்ற அன்பும் மதிப்பும் கொண்டவனும், சேரனுக்கும் துளுநாட்டு நன்னருக்கும் நடைபெறுகிற போரிலே, எதிர்காலத்தில் பெரும் பங்கு கொள்ள வேண்டியவனுமான கிளைச் சேர மன்னனின் ஆணையிலே ஆற்றல் மிக்க அரச வைத்தியர்கள் சேர்ந்து இளவரசி நன்னிக்கு மயக்கம் தெளிய வைக்கும் பணியிலே ஆர்வத்தோடு முனைந்து நின்றார்கள்! எந்த வினாடியும் இளவரசி எழுந்து விடுவாள் என்ற முழு நம்பிக்கையிலே ஆதனுரும் அழலாடியும் இளவரசியின் கட்டிலுக்கு அருகிலே நின்று, நன்னியின் முகத்தையே இமை கொட்டாமல் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இதோ! மயக்கம் தெளிகிறது. முழுமையான நினைவு முகத்திலே தவழக் கண் விழித்து எழுகிறாள் இளவரசி நன்னி!

(தொடரும்)

விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு
வலியை அதி வேகமாக வெளியேற்ற
புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'

இப்பொழுது முதன்முதலாக இந்தியாவில் வழங்கப்படுகிறது

வலிதான் எங்கள் பிரச்னை: 'ஆஸ்ப்ரோ' ஆராய்ச்சிக் கூடத்தில் வலியைப் பற்றிய ஆராய்ச்சிகளை செய்துவரும் விஞ்ஞானிகள் வலியை வேகமாக வெளியேற்றுவதற்கான புதிய வழியைக் கண்டுபிடித்துள்ளனர்—அதுதான் புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'.

மைக்ரோஃபைன்ட் என்றால் என்ன? புதியதொரு விசேஷமான செய்முறையின் மூலம், 'ஆஸ்ப்ரோ'வில் உள்ள வலிநிவாரணப் பொருளை மேலும் 30 மடங்கு நுணுக்கமாக்கியிருப்பதைத்தான் மைக்ரோஃபைன்ட் என்கிறோம். இப்பொழுது ஒவ்வொரு மாத்திரையிலும் இந்த வலிநிவாரணப் பொருளின் சுமார் 15 கோடி நுண்ணிய அணுக் கூறுகள் அடங்கியிருக்கின்றன. இதன் விளைவாக, முன்பைவிட இருமடங்கிற்கும் அதிகமான வலிநிவாரணச் சக்தி, மும்மடங்கு வேகமாக இயங்கி வலியைத் துரிதமாக வெளியேற்றிவிடுகிறது.

வேகமாகச் செயல்புரிகிறது—நீடித்த பயனைத் தருகிறது: புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'வில் உள்ள சுறுசுறுப்பாக இயங்கும் வலிநிவாரணப் பொருள், மிகவும் சுலபமாகவும், துரிதமாகவும் இரண்டறக் கலந்து உங்கள் உடலில் 5 முதல் 7 மணி நேரம் வரை தங்கியிருக்கிறது. இதனால் தான் மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' வலியை அதி வேகமாக வெளியேற்றி, நீண்ட நேரம் பயனளிக்கிறது.


உட்கொள்ளச் சுலபமானது: புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'வை வெறும் மாத்திரையாகவோ, தண்ணீரில் கலந்தோ, ஒரு டம்ளர் தண்ணீருடனோ அல்லது சூடான பானத்துடனோ—எப்படி வேண்டுமானாலும் சாப்பிடலாம்.

கீழ்க்கண்டவைகளுக்கு புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: சோர்வு • தலைவலி • உடல் வலி • பல்வலி • மூட்டுவலி • ஜுரவேகத்துடன் கூடிய ஜலதோஷம் • ஃப்ளு • டெங்கு • தொண்டை அழற்சி.

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள், தேவையானால் மீண்டும் சாப்பிடவும். குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொல்படி.


புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' செயல்புரியும் விதம்





புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதிநவீனமான வலிநிவாரணியாகும்.





புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக வலியை வெளியே இழுத்துவிடுகிறது

நிகோலஸ் தயாரிப்பு

சிவனருட் செல்வர்



திருமுருக கிருபானந்தவாரியார்

ஞானசம்பந்தப் பிள்ளையார் சீகாழியில் திருஅவதாரஞ் செய்தபொழுது அப்பதியில் வாழ்ந்த எத்திறத்தவரும் புளகாங்கிதம் அடைந்தனர். அவர்களையறியாமலே அவர்கள் உள்ளங்களில் பெரிய மகிழ்ச்சி உண்டாயிற்று. மலர்கள் மலர்ந்து, நறுமணம் வீசின; தென்றல் மாருதம் வீசியது; இமையவர் கற்பக மலர் சிந்தி, மண்மிசை வந்து மறையவருடன் வேள்வித் தீ புரிந்தனர். பூதகணங்கள் ஆடின; வேதவொலி எழுந்தது; செடி கொடிகள் பயன் தருவனவாயின; தண்ணீர் தெளிந்து குளிர்ந்திருந்தது; ஆகாயம் களங்கமின்றி விளங்கியது; மாறுபாடில்லாத பறவைகள் இனிது ஒலித்தன; சண்பை நகரில் எங்கும் சங்கம், தாரை முதலிய மங்கல வாத்தியங்கள் முழுங்குவாரின்றியே முழங்கின.

அந்தணர்கள் கூடி முறைப்படி சாதகன்மம் புரிந்தார்கள். பெண்மணிகள் திருமாளிகையில் நிரம்ப நெய் விளக்குகள் ஏற்றினர்; மாக்கோலம் இட்டு நிறைகுடம் வைத்தனர். பூமாலைகளைத் தொங்கவிட்டு, மங்கலப் பாடல்கள் பாடி மகிழ்ந்தார்கள். பத்து நாட்களிலும் செய்யத் தக்க சடங்குகளை இனிது செய்தார்கள்.

உதய சூரியனைப் போல் திகழும் பிள்ளைப் பெருமானைச் சரவணப் பூந் தொட்டிலில் முருகவேள் விளங்கியது போல் தொட்டிலில் இட்டனர். உலகுக்குப் பெரும் பேறு என வந்த பெரியவர்க்கு வேறு பல காப்பு மிகையன்று; நெற்றியில் நிறையத் திருநீற்றையே காப்பாக அணிவித்தனர். தாயாரின் மடித்தலத்திலும், மணித் தவிசிலும் தூய தொட்டிலிலும், மலர்ப் பள்ளியிலும் திருமறையும், செந்தமிழும் சிறக்க வந்த பாலகரைத் தாலாட்டிப் பாராட்டினர்.

புகலியில் வந்த தகவுடைய மைந்தர் அருமறைகள் தலையெடுக்குமாறு, தமது தலையைத் தூக்கிச் சிவபிரானது திருத்தொண்டினையன்றிப் பிறிது இசையோம் என்று கூறுவார் போல் திருமுக மண்டலம் அசைத்துச் செங்கீரை ஆடியருளினர்.

'நாம் சைவ சமயமேயன்றிப் பரசமயங்களை அறிய மாட்டோம். ஆதலின் பரசமயிகளே! இவ்வுலகில் எதிர்க்கும் எண்ணமின்றி அகலுமின், என்று கொட்டுவது போலும், இறைவனிடம் பொற்றாளம் பெறுவதற்காகத் திருக்கரங்களை ஏத்துவது போலும், தாமரைச் செங்கைகளால் சப்பாணி கொட்டியருளினர்.

விதி தவறிய வேற்றுச் சமயங்கள் நிலை குலைந்து தொலையும்படி மதிநதியணிந்த மணிகண்டர், சிவஞானம் அளித்தற்கு உரியவராகிய அப்புதல்வர் திருமாளிகையின் முன்றிலில் மெல்ல மெல்லத் தவழ்ந்தருளினர்.

தாதியரும், ஏனைய மறைக் குல மகளிரும், ''காழியர் தங்கனியே வருக; கவுணியக் கற்பகமே வருக;'' என்று ஏழிசையும், பல கலையும் எவ்வுலகமும் வாழ வந்தவரை அழைப்பாராயினர். அழைத்தவர் முக மலர் மலர அவர் திருநகை புரிந்தும், அவர்களிடம் அணைந்து உடல் குளிர, உள்ளங் குளிர, உணர்வு குளிரத் தழுவியும் இன்பத்தை அளித்தருளினர், இளம்பிள்ளையார்.

பிள்ளையாருக்கு ஓராண்டு முடியும் தருணம். அவரது கேசம் கருமுகில் போல் பின்புறம் அசைந்து அழகு செய்யவும், பசும் பொன் கிண்கிணி ஒலிக்கவும், புன்மை மிக்க புறச் சமயங்கள் தளர் நடையிட்டு அகலவும் அவர் தளர்நடையிட்டருளினர்.

இடையில் மணிவடம் பொலியவும் திருவடியில் மணிச் சதங்கை ஒலி செய்யவும் ஓராண்டில் திருவடி நிலம் பொருந்த நடந்தருளி விளையாடத் தொடங்கினார். சிறிய மணித் தேர் உருட்டியும், திருவீதியில் சிறுமகளிர் புதுக்கிய மணல் வீட்டைத் திருவடியால் சிதைத்தும், திருமேனியில் வியர்வு உண்டாகவும், திருநீற்றின் ஒளி வீதியில் விளங்கவும் வளர்ந்தருளினார். சிவக்கொழுந்தாகிய பிள்ளையார் தவத்தின் அங்குரம் போல் வளர்ந்தார். ஈராண்டு முடிந்து மூவாண்டுப் பருவத்தை அடைந்தார்.

மூவாண்டிலே ஒரு பெரிய நிகழ்ச்சி நிகழ்கின்றதாம். அதை மொழிகின்றேன் என்கிறார் சேக்கிழார்.

நாவாண்ட பலகலையும்
நாமகளும் நலஞ்சிறப்பப்
பூவாண்ட திருமகளும்
புண்ணியமும் பொலிவெய்தச்
சேவாண்ட கொடியவர்தம்
சிரபுரத்துச் சிறுவருக்கு
மூவாண்டில் உலகுய்ய
நிகழ்ந்ததனை மொழிகின்றேன்

ஞானசம்பந்தர் அவதாரம் செய்ததால் கலைமகளுக்குப் பெருமை வந்ததாம். திருமகளும் புண்ணியமும் பொலிவு பெற்றனராம்.

சிவபாத இருதயர் மிக்க தவம் செய்தவர். அவருக்குப் புதல்வராக முன்னை நிலையில் தமது திருவடியை மறவாத ஒரு முத்தான்மாவைத் தந்தருளினார் அந்தி வண்ணர். திருத்தொண்டின் நிலையினை உலகுக்கு அருள வந்த பிள்ளையார், சிவபெருமானைப் பிரிந்து வந்த பிரிவுணர்ச்சியால் சில சமயம் அஞ்சினவரைப் போல் காரணம் வேறு ஒன்றுமின்றி அழுவாராயினார்.

ஒருநாள் சிவபாத இருதயர் வேத விதிப்படி சடங்கு நெறியினை முடிப்பதன் பொருட்டு ஸ்நானத்துக்குப் புறப்பட்டார். சிவனருள் கூடியதனால், பிள்ளையார் அழுது கொண்டே தந்தையாரைப் பின்தொடர்ந்து சென்றார். அதனைக் கண்ட தந்தையார் குழந்தையிடம் கோபித்துக் கொள்வது போல் காட்டிக் கொண்டு, "நீ ஏன் என்னுடன் வருகிறாய்? நில்" என்று கூறித் தடுத்தார். பிள்ளையாரோ ஒளிமிக்க பொற் கிண்கிணிகளை அணிந்த திருவடியைத் தூக்கிப் பூமியை மிதித்துப் பிடிவாதம் செய்து அழுதார்.

"உன் செய்கை இதுவாயின் வருக" என்று மாதவப் பெரியார் தம் புதல்வரை அழைத்துக் கொண்டு பிரம்ம தீர்த்தத்தை அடைந்தார்.

பிள்ளையாரை அக் குளக்கரையில் இருக்கச் செய்து தாம் நீரில் மூழ்குவதற்கு அஞ்சிய சிவபாத இருதயர், உமாதேவியுடன் திருத் தோணியில் வீற்றிருக்கும் வள்ளலாரை வணங்கினார். "சுவாமி! தேவரீரே இக் குழவியைக் காவல் புரிந்து அருள வேண்டும்" என்று துதித்தார். பின்னர் தண்ணீரில் இறங்கினார். குழந்தையை இறைவர் காவல் புரிவார் என்ற துணிவுடன் அச்சமின்றி ஒருமைப்பட்ட மனத்துடன் நீராடினார். தருப்பணம், சந்தியாவந்தனம் முதலியன செய்தார். அக மருடணர் செய்யும் பொருட்டு நீரில் மூழ்கிய வண்ணமாக இருந்தார்.

43. "தோடுடைய செவியன்"

சிவபாத இருதயர் தண்ணீரில் மூழ்கியவுடன் தந்தையைக் காணவில்லையே என்ற போலிக் காரணமாக முன்னைய உணர்வு வந்து எய்த, பிள்ளைப் பெருந்தகையார் அத் திருக்குளக் கரையில் நின்று அழத் தொடங்கினார். முத்துக்களைப் போல் அவரது கண்மலர்களிலிருந்து நீர்த் துளிகள் ததும்பின. கைமலர்களால் கண்களைப் பிசைந்தார். அவரது அழகிய மலர்வாய் மணி அதரம் துடித்தது. எண்ணில்



லாத வேதங்கள் ஒலிக்கவும் உயிர்கள் யாவும் உவகையுறவும் புண்ணியக் கன்று அனைய பெருமானார் பொருமி யழுதருளினார்.

கண்மலர்கள் நீர்ததும்பக்
கைமலர்களால் பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய்
மணிஅதரம் புடைதுடிப்ப
எண்ணில்மறை ஒலிபெருக
எவ்வுயிரும் குதுகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம்
பொருமியழு தருளினார்.

ஆண்டவனை அடைவதற்கு எளிய வழி அழுவது. அழுதால் ஆண்டவனை அடையலாம்.

''யானே பொய்யென் நெஞ்சும்
பொய்யென் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே''

என்பது மாணிக்க வாக்கு.

சுவாமியை நினைத்து அழுதால் உய்வு பெறலாம். நாம் பிறந்தவுடனேயே அழுதோம் அல்லவா? பிறந்தபோதே நாம் அழாதிருந்திருந்தால் எல்லாரும் அழுதிருப்பார்கள். நாம் அழுதால் அவர்கள் மகிழ்ந்திருப்பார்கள். பிறந்த போதே நாம் அழுத அந்த அழுகை தான், வாழ்வை உண்டாக்கியது.

குளக்கரையிலே பிள்ளையார் அழுதார். அவரது கண் மலரிலிருந்து நீர் பெருகியது. அந்த அழுகையால் உலக மெல்லாம் மகிழ்கிறதாம்.

தமது திருமேனியில் கண்ணீர்த் துளிகள் விழ, நாற்றிசையும் நோக்கி யழுத பிள்ளையார், கடைசியாகச் செம்மேனி மீது வெண்ணீறு அணிந்த சிவபெருமானுடைய திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து, ''அம்மே! அப்பா!'' என அழைத்து அழத் தொடங்கினார்.

மெய்ம்மேற்கண் துளிபனிப்ப
வேறெங்கும் பார்த்தழுவார்
தம்மேலைச் சார்புணர்ந்தோ?
சாரும்பிள் ளைமைதானோ?
செம்மேனி வெண்ணீற்றார்
திருத்தோணிச் சிகரம்பார்த்(து)
''அம்மே! அப்பா'' என்றென்
றழைத்தருளி யழுதருள.

'பிள்ளையார் அழுதது முன் ஜன்மத்தின் சார்பு உணர்ந்த தன்மைதானோ? குழந்தைத் தன்மையினாலோ?' என்று அடக்கமாய்ச் சொல்கிறார் சேக்கிழார்.

திருத்தோணியில் வீற்றிருக்கும் அருட் கொண்டலாகிய திருத் தோணி யப்பர், பிள்ளையாருக்கு அருள் புரியும் பொருட்டு அம்மையாரோடு இடப வாகனத்தில் எழுந்தருளிப் பிரமதீர்த்தத் தின் மருங்கு அடைந்தருளினார்.

அழுகிற பிள்ளையாரை நோக்கி அருட் கருணை புரிந்த இறைவர், இடப் பக்கத்தில் இருக்கும் சக்தியைப் பார்த்து, ''தேவி! உனது திருஞானத் தனங்களில் பொழிகின்ற பாலமுதத் தைப் பொற் கிண்ணத்தில் ஏந்தி ஊட்டு வாய்'' என்று கட்டளையிட்டருளினார்.

நான்கு மறைகளையும், ஈரேழு உலகங்களையும் படைத்து, எல்லாவற்றுக் கும் காரணமாகி, கருணையே வடி வாகிய கற்புகாம்பிகை, பிள்ளையார் அருகில் சென்று தமது திருஞானத் தனங்களினின்றும் பாலமுதத்தைக் கறந் தார். அதில் எண்ணரிய சிவஞானத்து இன்னமுதம் குழைத்தருளினார். சம்பந் தரது கண்ணீரைத் துடைத்து அழு கையை மாற்றிக் கையில் பாலமு தத்தைப் பொற்கிண்ணத்தில் தந்தருளி, ''இதனை உண்ணுக'' என்று கூறி யருளினார். அருமறைகளை உருவாகக் கொண்ட ஆளுடைய பெரிய நாயகி யார் பாலமுதப் பொற் கிண்ணத்தை அளித்தருளியதால், பிள்ளையார் ஆளு டைய பிள்ளையாராகி, எல்லாத் தேவர் கட்கும், முனிவர்கட்கும், தெரிவரிய பொருளாகும் ஒப்பற்ற சிவஞான சம் பந்தராயினார்.

யாவருக்கும் தந்தைதாய்
எனும்இவர்இப் படியளித்தார்
ஆவதனால் ஆளுடைய
பிள்ளையா ராய்அகில
தேவருக்கும் முனிவருக்கும்
தெரிவரிய பொருளாகும்
தாவில்தனிச் சிவஞான
சம்பந்த ராயினார்.

சிவனடியே சிந்திக்கும் திருவைப் பெருகச் செய்யும் சிவஞானமாகிய ஒப்பற்ற கலைஞானத்தையும் பிறவிப் பிணியை வேரறுக்கும் ஞானமாகிய உணர்தற்கரிய மெய்ஞ்ஞானத்தையும் அந்நிலையில் உணர்ந்தார் தவ முதல்வ ராகிய சம்பந்தர்.

சிவனடியே சிந்திக்கும்
திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும்
பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம்
உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்
தாமுணர்ந்தார் அந்நிலையில்.

சோமசுந்தர நாயகர் அவர்கள் 'சிந் திக்கும்' என்பதற்கு நிஷ்டை கூடுதல் என்றும், சிவஞானம், ஓங்கிய ஞானம், கலைஞானம், மெய்ஞ்ஞானம் என்று நான்கு வித ஞானங்கள் என்றும் உரை எழுதினார். கலைஞானம் நூல் வடிவாக வருகிற ஞானம். மெய்ஞ்ஞானத்தோடு கலைஞானத்திலும் வல்லவராய் விளங்

கின்றாராம் சம்பந்தப் பிள்ளையார். எல்லாப் பொருள்களையும் இயக்குபவன் ஈசனே என்னும் உணர்வும், அப்பொருள்கள்தான் ஆளுடையார் அடியார்கள் என்னும் அறிவும் உண்டாகிப் புறச் சமயங்கள் தூளாகும்படி எழுந்தார் சம்பந்தர்.

சிறிது நேரத்துக்குப் பின் சிவபாத இருதயர் நீரினுள் செய்யும் நியமங்களை முடித்துக் கொண்டு கரையேறி, பேருணர்வில் பொலிகின்ற சம்பந்தரைக் கண்டார். பிள்ளையாரது கையில் பாலமுதக் கிண்ணம் இருந்தது. கடைவாயில் பால் பெருகியிருந்தது. அதனைக் கண்ட அவர், ''யார் அளித்த பாலை உண்டாய்?'' என்று வெகுண்டார். ''உனக்கு எச்சில் பால் கொடுத்தவர்களைக் காட்டு'' என்று கூறிக் கையில் ஒரு சிறிய கோலை எடுத்து ஓங்கினார்.

அவ்வளவில் பிள்ளையார், உச்சியினில் கரமலரைத் தூக்கி, சுட்டு விரலினால் சுட்டி, மறைகளினாலும் காட்டவொண்ணாத மணிகண்டரைக் கட்டியருளினார். உட்புகுந்த சிவஞானப் பாலமுதம் பொங்கி வழிந்தது போல் தனது தேவாரப் பாடல் இறைவர்பால் செல்லும் வகையைப் பெறும் பொருட்டு, திருச் செவியைச் சிறப்பித்து ''எம்மையிது செய்த பிரான் இவன்'' என்று பாடுவாராயினார்.

தோடுடைய செவியன்விடை யேறியோர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்
தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
பெம்மான் இவனன்றே.

அருநெறியமறை வல்லமுனி யகன்
பொய்கை யலர்மேய
பெருநெறியபிர மாபுரம் மேவிய
பெம்மான் இவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்
ஞானசம்பந்தன் உரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை
தீர்தல் எளிதாமே.


மண்ணுலகத்து மாந்தர்கள் பிழை செய்தாலும் சரணம் என்று வந்தடைந்தால் கண்ணுதற் கடவுள், பெற்ற தாய் போல் ஆட்கொள்வார். கயிலையைத் தூக்கிய இராவணன் அதன் கீழ் உடல் முறிந்து இடர்ப்பட்டு இசை பாடினான். அவனது குற்றத்தைப் பொறுத்து அவனை ஆட்கொண்டார் இறைவர். இதனை எட்டாவது பாடலில் வியந்துரைத்தார் சம்பந்தர். **ஆண்டவன் அன்பு வலையில் அகப்படு**வார். வன்புச் செருக்கருக்கு அகப்பட மாட்டார். தொழுவார்க்கே அருள் புரியும் இயல்புடையர் இறைவர் என உணராது, வழுவா மனத்தாலே ஆராயப் புகுந்தனர் மாலும் அயனும். அவர்கள் இழிதாகிய விலங்கும் பறவையுமாகி அடிமுடி காணாமல் திகைத்தனர். பின்பு ஐந்தெழுத்தை ஓதி உய்வு பெற்றனர். இதனை ஒன்பதாவது பாடலில் விரித்து உரைத்தருளினார் சம்பந்தர்.

வேத காரணராகிய வெண்பிறை சூடியின் திருவருள் நெறியை அறியாத புறச் சமயத்தார்களுக்குள்ளே பௌத்தர்களும் சமணர்களும் கூறும் நெறி ஏதமானதே என்று எம்பிரான் சம்பந்தர் மொழிந்தருளினார். பதிகம் முடிவு பெற்றபின் திருக்கடைக் காப்புச் சாத்திப் பிள்ளையார் நின்றருளினார். அருட்கடலாம் அரனாரது திருவருளைக் கண்ட அமரர்கள் விண்ணிடை ஆர்த்து, தண் மலர் மாரி பொழிந்தார்கள். வான துந்துபி மங்கலமாக முழங்கியது; கந்தருவரும் கின்னரரும் கானம் செய்தார்கள். இந்திராதி இமையவர்கள் இனிது துதித்தார்கள். ''ஹர ஹர'' என்று ஒலி செய்து சிவகணங்கள் மகிழ்ந்தன.

மண்மிசை நின்ற மறைச் சிறுவர் விண்மிசை சென்ற விமலருடன் கண்ணும் கருத்தும் கலந்தேக, திருக்கோயிலினுள் ஆரா அன்புடன் புகுந்தார். முடிவில்லாத தவம் செய்து தந்தையாக வந்த சிவபாத இருதயர் கையிலிருந்த கோல் தானே நழுவி விழக் கைகுவித்து இறைஞ்சினார். உவகையும், அச்சமும், அதிசயமும் ஒருங்கே அடைந்த அவர் அத்திருப் பாடல்களின் வாயிலாக இறைவரது திருவருளைக் குறிப்பினால் அறிந்தார். ஆயினும், இறைவரைக் காணும் பேறு பெற்றாரில்லை. அவர் பிள்ளையாருடன் கோயிலுட் சென்றார். அப்போது அங்கு நிகழ்ந்தவற்றைக் கண்டவர்களும்,—காணாமல் கேட்டவர்களும், ''இப்படி ஓர் அற்புதம் எங்கு எப்பொழுது நிகழ்ந்தது?'' என்று நினைத்து விம்மிதமுற்றுத் திருக்கோயிலை அடைந்து சூழ்ந்தார்கள்.

''இங்கு எனையாளுடையான் உமையோடு இருந்தான்'' என்று திருப்பதிகம் பாடியருளினார் திருஞானசம்பந்தர். ஞானபோனகமுண்ட பாலறுவாயர் கோயிலை விட்டுப் புறப்பட்டார். சீர்காழியில் வாழும் திருத்தொண்டர்கள் அவரை எதிர்கொண்டு துதித்தார்கள். **(தொடரும்)**

வோட்டுப் போடாவிட்டால் தண்டனை!



சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்வரை பிரான்ஸில், அபேட்சகர்களே மக்களுக்கு ஓட்டுச்சாவடி வாசலில் ஓட்டுச் சீட்டை வழங்கி, அதை ஓட்டுப் பெட்டியில் கொண்டு போய்ப் போடும்படி செய்து வந்தனர்.

தற்போதுள்ள 'இரகசிய ஓட்டு' முறை முதன்முதல் 1856ல்தான் 'தென் ஆஸ்திரேலியா'வில் நடத்தப்பட்டது. பிறகு இதுவே நிலைத்துவிட்டது.

மற்றோர் ஆச்சரியமான செய்தி: உலகிலே மிக முன்னேற்ற மடைந்த நாடுகளான பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் பெண்களுக்கு ஓட்டுரிமை கிடையாது!

சுவிட்ஜர்லாந்து, ஸ்பெயின், அர்ஜென்டைனா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, ஹாலந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் யாராவது 'ஓட்டு' போடத் தவறினால் அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்நாடுகளில் கட்டாயமாக ஓட்டுப் போட்டே ஆகவேண்டும்!

ஆதாரம்: ''ஹிந்துஸ்தான் டைம்ஸ்''



ஆங்கில நாகரிகம்

இங்கிலாந்தில் ஹாரோ சர்வகலாசாலைக்குள் படிக்க நுழையும்போது மாணவர்களின் சட்டைகளில் எல்லாப் பொத்தான்களும் இருக்கும். ஒவ்வொரு வருஷமும் ஒரு சட்டைப் பொத்தானைக் கழற்றிவிடுவார்கள். கடைசி ஆண்டின்போது பார்த்தால் அவர்கள் சட்டைகளில் பொத்தான்களே இருக்காது!

ஆதாரம்: 'வீக் எண்ட்'- வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி

குழந்தை பிறக்காது- மூர்க்கக் குதிரை ஆண்டில்!

ஜப்பானிய பஞ்சாங்கப்படி சென்ற ஆண்டு மூர்க்கக் குதிரை ஆண்டு. அந்த ஆண்டில் பிறக்கும் பெண் குழந்தைகள் அடங்காப் பிடாரிகளாக இருப்பார்களாம். ஆகவே அவர்களைக் கல்யாணம் செய்து கொள்ள யாரும் முன்வர மாட்டார்கள். இந்தச் சங்கடத்தைத் தவிர்க்கத் தாம்பத்திய உறவிலிருந்து மிகக் கவனமாக ஒதுங்கியே இருந்து சென்ற ஆண்டு முழுக்கக் குழந்தையே பிறவாமல் இருக்க வழி செய்திருக்கிறார்கள் ஜப்பானிய மக்கள்.



அதன் விளைவாக இந்த ஆண்டு ஜப்பானில் பிள்ளைப் பேறு பன்மடங்கு மிகுதியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அதைச் சமாளிப்பதற்காக அந்நாட்டு சுகாதார நல வசதி அமைச்சக பெரிய அளவில் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு முன்னேற்பாடு செய்து வருகிறது.

ஆதாரம்: ஆசிய மாணவன்
தகவல்: ஏ. கே. கந்தசாமி

வரியே இல்லாத ஊர்— இந்தியாவில்தான்!

''வரியே இல்லாத ஊரா? அதுவும் நம் நாட்டிலா?'' என்று ஆச்சரியப்படுகிறீர்களா? ஆம்— நம் நாட்டில்தான் நம்புங்கள்!

நம் நாட்டைச் சேர்ந்த லட்சத் தீவுகள்தான் இந்த அதிசயப் பகுதி. இங்கு மக்கள் அரசாங்கத்துக்கு எந்தவிதமான வரியும் செலுத்துவதில்லை. 'வரி' என்றாலே என்ன என்று இம்மக்களுக்குத் தெரியாது! அது மட்டுமல்ல, இங்கு வசிக்கும் மக்கள் எல்லோருக்கும் இலவச மருத்துவ வசதியும் வேறு பல சலுகைகளும் உண்டு!

ஆதாரம்: ''ஹிந்துஸ்தான் டைம்ஸ்'



லிண்டன் ஜான்ஸனுக்குக் கட்டில் இல்லை!


அமெரிக்க அதிபர் லிண்டன் ஜான்ஸன் நல்ல உயரம். அவரது அந்த உயரம் மலேசிய அரசாங்கத்துக்குப் பிரச்னையைக் கொடுத்து விட்டது.

சென்ற அக்டோபரில் ஜான்சன் மலேசியாவுக்கு விஜயம் செய்தார் அல்லவா? அப்போது அவருக்குத் தகுந்த நீண்ட கட்டில் கிடைக்கவில்லை. எத்தனையோ கடைகளில் தேடு தேடு என்று எவ்வளவோ தேடியும் கிடைக்கவில்லை. 'சரி, பெரிதாக ஒரு கட்டிலுக்கு அவசர ஆர்டர் கொடுத்துத் தயாரிக்கச் செய்து விடுவோம்' என்று தீர்மானித்துவிட்டார்கள். கடைசி விநாடியில் அவருக்குக் கச்சிதமான நீண்ட கட்டிலைக் கொண்டு வந்து சேர்த்தது வரவேற்புக் கமிட்டி, எங்கிருந்தோ. பிரச்னையையும் தீர்த்து வைத்தது.

துங்கு அப்துல் ரெஹ்மான், கட்டிலுக்காகப் பட்ட கஷ்டத்தைப் பிறகு விளையாட்டாக ஜான்சனிடம் வெளியிட்டார்.

ஆதாரம்: ஆசிய மாணவன். தகவல்: ஏ. கே. கந்தசாமி

கூவத்தில் குளித்த கொடை வள்ளல்



சென்னையில் ஓடும் கூவம் நதி இந்த நாளில் அசுத்தத்துக்கும் துர்நாற்றத்துக்கும் பெயர் பெற்றதாகி விட்டது. மக்கள் இதனிடம் இப்போது அருவருப்புக் காட்டுகிறார்கள். ஆனால் ஒரு காலத்தில் இந்த ஆறு இப்படியில்லை. கொடை வள்ளல் பச்சையப்ப முதலியார் அவர்கள் அக் காலத்தில் ஒவ்வொரு நாளும் கூவம் நதியிலே இறங்கிக் குளித்து வந்தாராம்.

'' ரமணன் ''



பணம் ஒரு பொருட்டல்ல!

விஞ்ஞான மேதை டாக்டர் ஐன்ஸ்டீன் தமக்கு வரும் செக்குகளைப் புத்தக அடையாளமாகப் பயன் படுத்துவது வழக்கம். ஒரு முறை ராக் பெல்லர் நிறுவனம் 1500 டாலருக்கு உரிய செக்கை அவருக்கு அனுப்பி வைத்தது. புத்தக அடையாளமாக விஞ்ஞானியால் பயன்படுத்தப்பட்ட அது புத்தகத்தோடு சேர்ந்து தொலைந்து போய்விட்டது. கணக்குச் சரியாகாத காரணத்தால் மற்றொரு மாற்று செக்கினை அனுப்பி வைத்தனர் ராக்பெல்லர் நிறுவனத்தினர். அது ஐன்ஸ்டீனுக்குக் கிடைத்ததும் அவர் திருப்பி எழுதினாராம் 'செக் எதற்காக?' என்று.

ஆதாரம்: 'குட் பார் எ வீக்'
தகவல்: ப. குணசேகர்

உங்களுக்குத் தெரியுமா?



ஜேம்ஸ் கார்டனர் என்ற ஸ்காட்லாந்து கர்னல், இராணுவத்தினருக்குக் கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தபோது, ஒரு துப்பாக்கிக் குண்டு குறி தவறி அவரது வாயினுள் புகுந்து பல், பல்லீறு முதலிய எவற்றிற்கும் சேதமின்றிப் பின் கழுத்தின் வழியே வெளியேறியது! இது நடந்தது 1706ம் ஆண்டு மே மாதம் 23ந் தேதி. இதனால் ஏற்பட்ட ரணம் ஆறியும் கூட இதன் மூலம் கழுத்தில் ஏற்பட்ட துளை மட்டும் 39 ஆண்டுகளுக்குப் பின் அவர் ஒரு போரில் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி இறக்கும் வரை அப்படியே இருந்ததாம்!

ஆதாரம்: 'மிரர்' **தகவல்: சம்பத்குமார்**

கைதியாக மாறிய கவர்னர் ஜெனரல்

கோவானிய மக்களால் லிஸ்பனிலுள்ள போர்ச்சுகீசிய பாராளு மன்றத்துக்குத் தங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் டி ஸில்வா என்பவர் பிரசித்தி பெற்றவர். 1832ஆம் ஆண்டில் இவர் லிஸ்பனுக்குப் போனார், கோவானியப் பிரதிநிதியாக.

போர்ச்சுகலின் சரித்திரத்தில் பரபரப்பு மிக்க ஆண்டு அது. நெப்போலியனின் படையெடுப்பைப் போர்ச்சுகல் சமாளிக்க முடியாது போகுமோ என்ற சந்தேகச் சூழ்நிலையில் பிரிட்டன் போர்ச்சுகலைப் பாதுகாக்க முன்வந்து அந்நாட்டின் சில பகுதிகளில் படைகளை இறக்கி ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. பாதுகாப்பின் பொருட்டு ஏற்பட்ட ஆக்கிரமிப்பு இது என்றாலும் தேவையான காலஅளவுக்கு அதிகமாகவே பிரிட்டன் தன் படைகளைப் போர்ச்சுகீசிய மண்ணில் வைத்திருப்பதாகக் கருதிய போர்ச்சுகீசிய மக்கள் வெகுண்டு எழுந்தார்கள். பிரிட்டன் உடனடியாகத் தன் படைகளை 'வாபஸ்' பெற வேண்டும் என்று கிளர்ச்சி செய்தார்கள். இதனாலெல்லாம் ஏற்பட்ட கலவரங்கள், ஒழுக்கக் குலைவு காரணமாகப் போர்ச்சுகீசிய மன்னர் தாம் செய்வதாக மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்த அரசியல் சீர்திருத்தங்களைச் செய்யாமல் ஒத்திப் போட்டார். அத்துடன் டி ஸில்வா லிஸ்பனை வந்தடைந்த அதே ஆண்டில் போர்ச்சுகீசிய பாராளுமன்றத்தையும் கலைத்து விட்டார் மன்னர்.

பாராளு மன்ற உறுப்பினராக வந்தவர் பாராளு மன்றமே இல்லாததைக் கண்டு மனமுடைந்தார். எனினும், டி ஸில்வா லிஸ்பனிலேயே தங்கினார். சீக்கிரமே போர்ச்சுகலில் ஓர் உள்நாட்டு யுத்தம் உருவாயிற்று. பாராளுமன்றத்தின் உரிமைகளைத் திரும்பப் பெற நினைத்தவர்களுக்கும் அரசரின் சார்பில் சாதகமாகப் பேசி அவருக்கு உறுதுணையாக நின்றவர்களுக்கும் இடையில் நிகழ்ந்தது இப்போர். டி ஸில்வா இந்தப் போரில் பங்கு பற்றினார். பாராளுமன்றத்தின் பெருமையை நிலைநாட்டப் பாடுபட்டார். இறுதியில் வெற்றி இவர் கட்சிக்கே கிடைத்த போது டி ஸில்வா போர்ச்சுகீசிய ஜனநாயகத்தின் காவலர் எனப் போற்றப்பட்டார். 1834ஆம் ஆண்டு மன்னர் பாராளு மன்றத்தைக் கூட்ட வேண்டிய நிர்ப்பந்தச் சூழ்நிலைக்கு உள்ளானார். இதற்குள் மிகவும் பெரும் புகழும் பெற்றுப் பிரபலமடைந்துவிட்ட டி ஸில்வாவையே மன்னர், இந்தியாவில் போர்ச்சுகீசிய ஆட்சிக்கு உட்பட்டிருந்த சகல பகுதிகளுக்கும் கவர்னர் ஜெனரலாக நியமித்தார். இது எப்போர்ப்பட்ட கௌரவம் என்பது, 1915ல்தான் வங்கத்தில் சத்யேந்திர பிரஸன்ன ஸின்ஹா பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார் என்பதை நோக்குகையில் புரியும்.

கோவானியர் ஒருவரே தங்கள் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருப்பதை அறிந்து, கோவானிய மக்கள் அளவிட முடியாத குதூகலம் அடைந்தார்கள்.

நாட்டு நலனை மனத்தில் கொண்ட டி ஸில்வா பல சீர்திருத்தங்களைச் செய்தார் கோவாவில். ஜனநாயக ரீதியில் அவர் செய்த சில நிர்வாகச் சீரமைப்புக்கள் ஒரு சாராருக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. இவர்கள் போர்ச்சுகீசியரும் கோவானியரும் ஆதி நாளில் மணம் புரிந்து கொண்டதால் பிறந்தவர்களின் சந்ததியினர். இந்த லியூஸோ இந்தியர்களில் பலர், ராணுவத்தில் உயர் பதவிகள் வகித்து வந்தனர். தங்களைக் கோவானியரைவிட ஒருபடி உயர்வாக எண்ணி வந்தனர். தங்களது தனி உரிமைகள் சிலவற்றுக்கு ஆபத்து வருவது கண்டு சினம் கொண்டனர். வெள்ளைக்காரன் இடத்தில் ஒரு சுதேசி கோவானியனின் தலைமையைஏற்கவும் அவர்களுக்கு விருப்பமில்லை.

இவர்களும் வேறுசில அதிருப்தியாளர்களும் ஒன்று கூடிச் சதி செய்து டி ஸில்வாவைக் கோவாவைவிட்டே துரத்திவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆனால் டி ஸில்வா அதைரியப்படவில்லை. டாமனுக்குத் தப்பிச் சென்ற அவர், அங்கு தமது சொந்த சுதந்திர கோவானிய சர்க்காரையே அமைத்தார். டாமன், டையூ, டாட்ரா, நாகர்-ஹாவெலி ஆகியவை இந்த அமைப்பில் இணைந்தன. இரண்டாண்டுகள் இங்கு ஆட்சி புரிந்த டி ஸில்வா தமது சர்க்காரை பிரிட்டிஷ் இந்தியா மதித்து ஒப்புக் கொள்ளச் செய்தார். அத்துடன் கோவாவின் விடுதலைக்காக ஒரு பெரும் படை திரட்டினார். ஐந்து போர்க் கப்பல்களில் அவரால் அனுப்பப்பட்ட இந்தப் படை கிளம்பிக் கோவா நோக்கி அலைகடலில் முன்னேறியது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாகக் கோவாவை நெருங்கு முன்னரே இந்த ஐந்து போர்க் கப்பல்களும் கடும் புயலில் சிக்குண்டு பிளந்து நொறுங்கின.

இது நடந்து கொஞ்ச காலத்துக்குப் பிறகு டி ஸில்வா கைதானார். போர்ச்சுகீசிய மன்னரால் புதிதாக நியமிக்கப்பட்டிருந்த கவர்னர் ஜெனரல், டி ஸில்வாவுக்கு விலங்கிட்டு அரசியல் கைதியாக லிஸ்பனுக்கு அனுப்பி வைத்தார்.

கவர்னர்ஜெனரலாகவும் விளங்கி காராகிருகத்தையும் கண்ட ஒருவரது வீர வரலாறு இது.

வி.எஸ். ஷெட்டணகர்

முள்ளும் மலரும்

உமா சந்திரன்

அத்தியாயம் 31

மேஜர் ரகுநாத்தோடு கூட வந்த அந்த மூன்றும் மனிதரை எங்கு பார்த்திருக்கிறோம் என்று குமரன் யோசித்துக் கொண்டிருந்த அதே சமயம் அகிலா, ''அடேடே! காப்டன் அருளானந்தமா? உங்களை எதிர்பார்க்கவே யில்லையே!'' என்று மகிழ்ச்சியுடன் கூறியவாறு அவருக்கு வணக்கம் தெரிவித்தாள்.

குமரன் சட்டென்று அவரைப் புரிந்து கொண்டான்.

''டாக்டர், என்னைப் புரிகிறதா?'' என்று அவன் அவர் கையைப் பிடித்துக் குலுக்குவதற்காக ஓரடி முன்னே சென்றதுமே அவர், ''யார்? எஞ்சினியர் குமரனல்லவா நீங்கள்! இங்கே எப்படி வந்தீர்கள்?'' என்று கேட்டார் வியப்புடன்.

''சரி தான். அறிமுகமே தேவையே இல்லை போலிருக்கிறது. முன்னமேயே இவர் உங்களுக்குப் பழக்கமானவர் தானு?'' என்றார் மேஜர் ரகுநாத்.

''ஆமாம், மேஜர், நான் கீழூர் ஆஸ்பத்திரியில் டாக்டராக இருந்தபோது இவர் கருவியாற்றுத் திட்டத்தில்



எஞ்சினியரா யிருந்தார். கிட்டத்தட்ட நாங்கள் இருவருமே ஒரே சமயத்தில்தான் ராணுவ சேவையில் சேர்ந்திருப்போம் என்று நினைக்கிறேன்'' என்றார் அருளானந்தம்.

''நீங்கள் ராணுவத்தில் சேர்ந்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவே தெரியாதே'' என்றான் குமரன்.


''நீங்கள் சேர்ந்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் உங்களை இங்கே சந்திப்போமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை'' என்றார் காப்டன் அருளானந்தம்.

''நான் கனவிலும் நினைக்காத விஷயம் என்ன தெரியுமா ? இந்த மாதிரி உங்களை ராணுவ உடையில் பார்ப்பதுதான். எத்தனையோ பெரிய ஆஸ்பத்திரிகளிலிருந்து உங்களுக்கு அழைப்பு வந்த போதும் கீழூர் ஆஸ்பத்திரியிலிருந்து அசைய மாட்டேன் என்று பிடிவாதமாக இருந்தீர்களே. நீங்களே எப்படித் துணிந்து ராணுவ சேவையில் சேர்ந்தீர்கள்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான் குமரன்.

''ஆச்சரியமாகத்தான் தோன்றும். ஆனால் அதைவிட ஆச்சரியம் ஒன்று இருக்கிறது. கீழூரை விட்டு நான் எங்குமே போகக் கூடாதென்று என்னைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தவள் என் மனைவிதான் என்று உங்களுக்குத் தெரிந்திருக்குமே. ஆனால் அவளே ராணுவ சேவையில் சேரும்படி என்னைத் தூண்டி முக மலர்ச்சியுடன் என்னை அனுப்பி வைத்தாள். 'உங்களுக்கு ஓர் ஆபத்தும் வராது. நீங்கள் எங்கிருந்தாலும் நான் உங்களுக்காகப் பிரார்த்தனை செய்வேன்' என்று அவள் அன்று சொன்ன வார்த்தைகள் இன்றும் என் செவிகளில் ஒலிக்கின்றன. இவ்வளவு நாட்டுப் பற்றும் துணிச்சலும் எங்கிருந்து வந்தன?''

''இதே கேள்வியைத்தான் இந்தப் பாரத சமுதாயத்தைப் பற்றி வெளி நாடுகளில் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்'' என்று சிரித்தான் குமரன்.

''ஏன் காப்டன், இப்போது நீங்கள் விடுமுறையில் வந்திருக்கிறீர்களா ?'' என்று கேட்டார் அருளானந்தம்.



''விடுமுறையா ! இனிமேல் விடுமுறை தேவையே இல்லையே. ராணுவ சேவையிலிருந்தே எனக்கு ஓய்வு கொடுத்து அனுப்பி யிருக்கிறார்கள்'' என்றான் குமரன்.

''அப்படியா? டாக்டர்கள் விஷயத்தில் அவ்வளவு சீக்கிரமாக ஓய்வு கொடுத்து அனுப்ப மாட்டார்கள்.... ஆனால் உங்களுக்கென்ன? உங்கள் பழைய உத்தியோகம் எப்போதும் காத்திருக்குமில்லையா ?''

''சரிதான்..... அந்த உத்தியோகத்துக்கு என்னை விட்டால் வேறு ஆளே கிடையாதா என்ன? நான் சென்னைக்குப் போன பிறகுதான் புதிதாக வேலைக்கு முயற்சி செய்ய வேண்டும் என்றிருக்கிறேன்.''

''புதிய வேலை கிடைக்கிறபடி கிடைக்கட்டும். ஆனால் எப்படியும் பழைய பாசத்துக்காகவாவது பழைய இடங்களுக்குப் போகாமல் இருப்பீர்களா என்ன?'' என்று கேட்டார் அருளானந்தம்.

''போவதாகத்தான் இருக்கிறேன்.''

''அப்படிப் போகும் சமயத்தில் கீழூரில் எங்கள் வீட்டுக்குக் கட்டாயம் போக வேண்டும். நான் சௌக்கியமாயிருக்கிறேன் என்று உங்களிடமிருந்து நேரில் தெரிந்து கொண்டால் என் மனைவிக்கு ஆறுதலாயிருக்கும்'' என்று அவனிடம் வேண்டிக் கொள்பவர் போல் அவன் கைகளைப் பற்றிக் கொண்டு கூறினார் அருளானந்தம்.

''உங்கள் விருப்பப்படியே நான் செய்கிறேன்'' என்று உறுதி கூறினான் குமரன்.

''யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ் .... டெல்லியிலிருந்து வரும் காரவில் விமானம் இன்னும் சிறிது நேரத்தில் இங்கு வந்து சேரும்'' என்ற அறிவிப்பு ஒலி பெருக்கி மூலம் இருமுறை ஒலித்தது. காத்திருக்கும் பொழுதைப் போக்குவதற்காக உணவு விடுதியில் உட்கார்ந்து குளிர்ந்த பானம் பருகிக் கொண்டிருந்த கனகாவும் சபேசனும் மிஞ்சியிருந்ததை ஒரு மூச்சில் குடித்து விட்டுப் பரபரப்புடன் எழுந்தனர். சர்வரிடம் பில்லைக் கேட்டு வாங்கிப் பணம் கொடுத்துவிட்டு இருவரும் வெளியே வராந்தாவுக்கு வருவதற்கும், காரவில் விமானம் கம்பீரமாக இறங்கி வந்து தரையைத் தொடுவதற்கும் சரியாக இருந்தது.

அந்த விமானத்தில் வந்து இறங்கப் போகும் தங்கள் தங்கள் உறவினரையோ, நண்பரையோ வரவேற்பதற்காக அங்கே தடுப்புக் கம்பிகளையடுத்து நிறையப் பேர் குழுமி நின்றிருந்தனர். நெருக்கியடித்துக் கொண்டு முன்னே செல்ல விரும்பாமல் சபேசனும் கனகாவும் ஒரு பக்கமாக வராந்தாவின் விளிம்பிலேயே நின்று கொண்டனர். இதற்குள் விமானம் ஒரு சுற்றுச் சுற்றிக் கொண்டு அவர்களுக்கு எதிரே சற்றுத் தூரத்தில் நிலையாக நின்றது. பிரயாணிகள் விமானத்தி லிருந்து இறங்குவதற்கு வேண்டிய படியமைப்பை முன்னே தள்ளிக் கொண்டு சென்ற விமான நிலையச் சிப்பந்திகள் அதை விமானத்தின் வாசலுக்கு நேரே பொருத்தி வைத்தனர். படியமைப்பு வழியே பிரயாணிகள் ஒவ்வொருவராக இறங்கி வர ஆரம்பித்தவுடன் அங்கு கூடியிருந்தோரின் பரபரப்பு அதிகமாயிற்று. உயர்த்திய கைகளையும் கைக்குட்டைகளையும் ஆட்டித் தத்தமக்கு உரியவருக்கு வரவேற்புத் தெரிவித்தவாறு முன்னே பாய்ந்தனர்.

''யார் யாரோ இறங்கி வந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் குமரனுவைக் காணோமே!'' என்றாள் கனகா பொறுமை இழந்தாற்போல்.

''ஒவ்வொருவராகத்தானே இறங்க வேண்டும்...? அதற்குள் அவசரப்பட்டால் எப்படி?'' என்றான் சபேசன்.

மறுகணம் '' அதோ பாருங்கள்... குமரனுவேதான்'' என்று குதூலகத்துடன் கத்தினாள் கனகா. விமானத்தின் இறங்கு வாசலுக்கு வந்து நின்ற குமரனும் அதே சமயம் அவ்விருவரையும் பார்த்துவிட்டு முகமலர்ச்சியுடன் கையை உயர்த்தித் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தவாறு படியமைப்பு வழியே இறங்க ஆரம்பித்தான்.

சபேசனும் கனகாவும் பிரயாணிகள் வெளியே வருவதற்குரிய வாசலை நோக்கி விரைந்தனர். அதற்குள் தன் கையிலிருந்த பொட்டலத்தைப் பிரித்துப் புத்தம் புது ரோஜா மாலையைத் தயாராக எடுத்து வைத்துக் கொண்ட சபேசன், குமரன் நேருக்கு நேர் வந்ததும் அவன் கழுத்தில் அந்த மாலையை அணிவித்தான்.

''அடேடே...இதெல்லாம் என்ன?'' என்றான் குமரன் சங்கோசத்துடன்.

''புகழ் மாலைக்குத் தகுந்த பூமாலை'' என்றாள் கனகா, கைகளைப் பலமாகத் தட்டியவாறு.

அவள் கூறியதை ஆமோதிப்பது போல் சபேசன் கரகோஷம் செய்த போது, குமரனோடு கூடவே வந்து கொண்டிருந்த முகமறியாத பெண்ணொருத்தியும் கைதட்டியதைக் கண்டதும் கனகாவும் சபேசனும் வியப்புடன் அவளைப் பார்த்தனர்.



எரிச்சலா?
அஜீர்ணமாக இருக்கலாம்

ஜீரணம் பாதிக்கப்பட்டால் நிதானம் கெடுகிறது. வேலையில் ஜாக்கிரதையும், ஈடுபாடும் குன்றுகிறது. தொழில் நிர்வாகியான தங்களுக்கு இப்படி நேர்வது நல்லதல்ல. ஹ்யூலெட்ஸ் மிக்சர் அருந்துங்கள். அது ஜீரண சக்தியை ஒழுங்கு படுத்துகிறது; விரைவில் நிவாரணம் அளிக்கிறது. வலியுண்டாக்கும் அமிலங்களை அகற்றி ஜீரணகோசத்திற்கு அதன் வேலையை சரிவர செய்வதற் கேற்ப பாதுகாப்பு அளிக்கிறது.

ஹ்யூலெட்ஸ் மிக்சர் குழந்தைகளின் வயிற்று உபாதைகளுக்கும் நல்லது. வயிற்றுப் போக்கு இருந்தால் அபினி சேர்ந்த ஹ்யூலெட்ஸ் மிக்சர் குணமளிக்கும்.





ஹ்யூலெட்ஸ் மிக்சர் ஜீரணத்திற்குச் சிறந்தது


C. J. ஹ்யூலெட் & ஸன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
86A நைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-3

CJH-3306A

குடும்பத்தினர் அனைவரும் திட ஆரோக்கியத்துடன் திகழ

:.பாஸ்:.போமின்®

:.பாஸ்:.போமின் பழரஸ மணம் கமழும் பச்சை நிற வைட்டமின் டானிக். இதில் வைட்டமின் 'பி' காம்ப்ளெக்ஸ் மற்றும் பலவகை கிளிஸரோ :.பாஸ்பேட்டுகள் கலந்துள்ளது. இதுவே குடும்பத்தினர் அனைவரும் வலிவுடனும், சந்தோஷத்துடனும், ஆரோக்கியமாயும் வாழ உதவுவது. :.பாஸ்:.போமின் வீட்டில் வையுங்கள். இதை அருந்தி வந்தால் களைப்பும் சோர்வும் உங்களை அணுகாது. இழந்த சக்தியை மீண்டும் பெற உதவுகிறது. பசியைத் தூண்டும். வலிவைப் பெருக்கும். நோய்களை எதிர்க்கும் சக்தியை அளிக்கும். குடும்பத்தினர் அனைவரும் ஆரோக்கியத்துடன் திகழ—:.பாஸ்:.போமின்.



SQUIBB® TTT®

SARABHAI CHEMICALS

''மன்னிக்க வேண்டும், டாக்டர் அகிலாவைப் பற்றி எழுதியிருக்கிறேனல்லவா? கடைசி நிமிஷத்தில் அகிலாவும் என்னுடன் புறப்பட்டு வரும்படி ஆயிற்று'' என்று விவரித்த குமரன் அகிலாவின் பக்கம் திரும்பி, ''மிஸ்டர், இவள்தான் என் தங்கை கனகா. இவர் மிஸ்டர் சபேசன், என் தங்கை புருஷர்'' என்று அறிமுகம் செய்து வைத்தான்.

அகிலா இருவருக்கும் கரம் கூப்பி வணக்கம் தெரிவித்தாள்.

''உங்களைப் பற்றிக் குமரண்ணா எல்லாம் விவரமாக எழுதியிருக்கிறார். இவ்வளவு சீக்கிரம் உங்களைச் சந்திக்கப் போகிறோமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை'' என்று கூறியவாறு கனகா அகிலாவின் கரங்களை அன்புடன் பற்றிக்கொண்டாள்.

''என்னுடைய மாமா சென்னையில்தான் இருக்கிறார். அவருடைய பெண்ணுக்கு நாளைக்கு மாம்பலத்தில் கலியாணம். உங்கள் குமரண்ணா புறப்படுவதற்குக் கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் அழைப்புக் கடிதம் வந்தது. அப்பா அங்குள்ள பொறுப்புக்களை விட்டு விட்டு எப்படிப் புறப்பட முடியும்? அதனால்தான் என்னை அனுப்பினார். காப்டனுடைய துணை கிடைத்தது எனக்குச் சௌகரியமாகப் போயிற்று'' என்று விவரித்தாள் அகிலா.

''கலியாணத்துக்கு நாளைக் காலையில் போய்க் கொள்ளலாம். மற்றபடி நீங்கள் சென்னையில் இருக்கும்வரை எங்களோடுதான் தங்கியிருக்க வேண்டும்'' என்றாள் கனகா.

ராயபுரத்திலிருந்த அவர்களது வீட்டையடைந்து ஹாலுக்குள் அடியெடுத்து வைத்ததும் குமரன் அப்படியே உணர்ச்சி வசப்பட்டு நின்றுவிட்டான். ராணுவ உடையிலிருந்த வீரமணியின் பெரிய அளவு போட்டோ ஒன்று எதிர்ச் சுவரில் மாட்டப்பட்டிருந்தது. அன்று காலைதான் கனகா அதற்குச் சாத்தியிருந்த மாலை இன்னும் அப்படியே புதுமை பரப்பிக் கொண்டிருந்தது.

கண்களில் துளித்து நின்ற கண்ணீருடன் குமரன் அதனருகே சென்று சற்று நேரம் மௌனமாக நின்றுகொண்டிருந்தான். பின்பு ஒரு பெருமூச்சுடன் மெதுவாக நடந்து வந்து ஹாலுக்கு நடுவே போட்டிருந்த சோபாவில் மற்றவர்களோடு உட்கார்ந்து கொண்டான்.

''வீரமணிக்கு வீரமரணம் கிடைத்துவிட்டது. நான்தான் வடுப்படாமல் திரும்பி வந்திருக்கிறேன்'' என்றான் குமரன் விரக்தியுடன்.



''சி. ஐ. டி இலாகாவில் பணிபுரிந்து நாளை நீங்கள் ரிடையர்டு ஆகிறீர்களே! உங்கள் சேவையைப் பாராட்டிப் பணமுடிப்பு அளிப்பதற்காக நாங்கள் வைத்திருந்த ரூ. 111 ஐக் காணோம். தயவுசெய்து தாங்களே அதைத் தேடிக் கண்டுபிடித்து எடுத்துக் கொள்ளுங்கள், சார்!''

''வடுப்படாமலா? உங்கள் மார்பில் எவ்வளவு அபாயகரமான காயம் ஏற்பட்டிருந்தது என்று எனக்கல்லவா தெரியும்! நீங்கள் தப்பிப் பிழைத்ததே தெய்வாதீனமாயிற்றே!'' என்றாள் அகிலா.

''தெய்வத்துக்கு என்மேல் என்ன கோபமோ தெரியவில்லை'' என்றான் குமரன், ஒரு வறண்ட சிரிப்புடன்.

அன்று குமரன் உத்தியோக விஷயமாகவும் நட்பு முறையிலும் பழைய நண்பர்கள் பலரையும் சந்திக்க வேண்டியிருந்தது. சபேசனை உடன் அழைத்துக் கொண்டு நெடு நேரம் வரை வெளியிலேயே சுற்றிக் கொண்டிருந்தான். வீட்டில் தனித்து விடப்பட்ட கனகாவும் அகிலாவும் அவ்விருவரும் திரும்பி வரும்வரை திறந்த மேல் மாடியில் உட்கார்ந்து கடலைப் பார்த்தவாறு வெகுநேரம் வரையில் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தனர்.

மறுநாள் காலை குமரன் அகிலாவைக் கலியாண வீட்டில் கொண்டு விட்டுவிட்டு மாம்பலத்திலிருந்து திரும்பி வந்தபோது சபேசன் காரியாலயத்துக்குப் புறப்பட்டுச் சென்றிருந்தான். வீட்டில் கனகா மட்டும் தனியே இருந்தாள்.

''நீங்கள் வந்த பிறகுதான் அவர் ஆபீசுக்குப் போக வேண்டுமென்றிருந்தார். அதற்குள் ஆபீசிலிருந்து டெலிபோன் வந்துவிட்டது. ஏதோ அவசர வேலையாம். எந்த அவசர வேலையானாலும் இவரைத்தான் தொந்தரவு செய்

கிறார்கள். சொந்தமென்று சொல்லிக் கொள்ள இவருக்கென்று ஒரு நேரமும் கிடையாது போலிருக்கிறது'' என்று அலுத்துக் கொண்டாள் கனகா.

''நல்லதுதானே கனகா. அப்படியெல்லாம் இருந்தால்தான் வேகமாக முன்னுக்கு வர முடியும்'' என்றான் குமரன்.

''நீங்கள் வந்திருக்கும் சமயத்தில் உங்களுடன் கொஞ்ச நேரம் பேசக் கூட முடியாவிட்டால் என்ன இருக்கிறது?''

''பரவாயில்லே. நேற்று முழுதும் தான் சபேசனே என்னுடன் இழுத்துக் கொண்டு ஊரெல்லாம் சுற்றியாயிற்றே!'' என்றான் குமரன்.

''ஆமாம், உங்களுடைய உத்தியோக விஷயமாக என்ன முடிவு செய்தீர்கள்? இவருடைய கம்பெனியிலேயே உங்களுக்கு ஒரு நல்ல உத்தியோகம் தயாராக இருக்கிறதாமே.''

''ஆமாம். நான் சரியென்று சொல்வதுதான் பாக்கி. அநேகமாக அதையே தான் ஏற்றுக்கொண்டுவிடுவேன் என்று நினைக்கிறேன்.''

''ஆனல் அந்த உத்தியோகத்தில் ஒரு தொல்லே இருக்கிறதே!''

''என்ன?''

''அடிக்கடி நாடு முழுவதும் பல இடங்களுக்கும் பிரயாணம் செய்து கொண்டிருக்க வேண்டுமாமே. முக்கியமாக வடநாட்டில் அங்கங்கே நடக்கும் வேலைகளை மேற்பார்ப்பதற்காக ஒவ்வொரு இடத்திலும் இரண்டு மாதங்கள் மூன்று மாதங்கள் தங்கியிருக்கவும் வேண்டியிருக்குமாமே!''

''அதை நான் தொல்லேயாக நினைக்கவில்லே. அதையே ஒரு கவர்ச்சியாகக் கருதுகிறேன்.''

''நிலேயில்லாமல் சுற்றிக் கொண்டிருப்பதையா?''

''நிலேயாக ஒரே இடத்தில் இருப்பதில் மட்டும் எனக்கு என்ன கவர்ச்சி இருக்கிறது?'' என்று சிரித்தான் குமரன்.

கனகா சிரிக்கவில்லே. அவள் முகம் மாறி விட்டது.

''நீங்கள் இப்படிப் பேசும்போது எனக்கு எவ்வளவு வேதனையாக இருக்கிறது தெரியுமா? இவ்வளவு தூரம் உங்களுக்கு வாழ்வே வெறுத்துப் போகும்படியாக அப்படி என்ன நடந்து விட்டது?'' என்றாள்.

''நீ நினைப்பது தவறு கனகா. நான் வாழ்வை வெறுப்பவனு யிருந்தால் உயிருக்குயிரான வீரமணியைப் பறி கொடுத்த பிறகு நான் உயிரோடு திரும்பி வந்திருப்பேனு?'' என்று குமரன் உணர்ச்சியுடன் கேட்டதும் கனகாவால் ஒரு பதிலும் சொல்ல முடியவில்லே. தமையனைப் பற்றிய துயர நினைவில் கண்களில் நீர் ததும்பச் சற்று நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தாள். பின்பு ஒரு பெருமூச்சுடன் கூறினுள்.

''நீங்கள் வாழ்வை வெறுக்க மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனல் வெறுப்பில்லாமல் இருப்பதும் பற்றுக் கொள்வதும் ஒன்ருகி விட முடியாதே.''

''பற்று இல்லாமலா உத்தியோகத்தைத் தேடி அலேந்து கொண்டிருக்கிறேன்?''

''அது உழைப்பில் உள்ள பற்று. ஓய்ந்து உட்கார்ந்திருப்பதை நீங்கள் ஒருநாளும் விரும்ப மாட்டீர்கள் என்பதுதான் அதற்குக் காரணம். அதற்கும், வாழ்வில் பற்று இருப்பதற்கும் வெகு தூரம்'' என்றாள் கனகா.

''எனக்கு வாழ்வில் பற்றே கிடையாது என்று நீயாகவே முடிவு கட்டி விட்டாயா?'' என்று சிரித்தான் குமரன்.

''நான் மட்டும் அப்படி நினைக்கவில்லே. நேற்று அகிலாவுடன் ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தேனே, அவளும் உங்களுடைய இந்த விரக்தியைப் பற்றித்தான் கவலேப்பட்டுக் கொண் டிருக்கிருள். எப்படியாவது அதை மாற்ற வழி கிடையாதா என்று தான் துடித்துக் கொண்டிருக்கிருள்.''

அகிலாவின் பேச்சு வந்ததும் குமரன் மௌனமா யிருந்தான். சட்டென்று கனகா கூறினுள்: ''குமரண்ணு, உங்களுக்குத் தங்கை முறையில் ஒரு விஷயம் சொல்ல எனக்கு உரிமை உண்டென்று நினைக்கிறேன்.''

''சொல்லு கனகா.''

''அகிலா எனக்கு அண்ணியாக வந்தால் எனக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருக்கும்.''

அவளுடைய நேரடியான இந்தப் பேச்சு குமரனைத் திக்குமுக்காடச் செய்தது. என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திகைத்தாற்போல் உட்கார்ந்திருந்தான்.

''ஏன் பதில் பேச மாட்டேன் என்கிறீர்கள், அண்ணு?''

''நடக்க முடியாத ஒரு விஷயத்தையும் உன் சந்தோஷத்தையும் சம்பந்தப்படுத்திப் பேசி விட்டாயே. அப்புறம் எனக்குப் பேச வாயேது?'' என்றான் குமரன் சற்று வேதனையுடன்.

''நடக்க முடியாத விஷயம் என்று ஏன் சொல்கிறீர்கள்? அகிலாவின் மனத்தை நான் புரிந்து கொண்டு விட்டேன். நீங்கள் சரியென்று சொன்னுல் இது கட்டாயம் நடந்து விடும்.''

''மன்னித்துக்கொள், கனகா. வீரமணியின் நினைவுக்குப் பிறகு ஒவ்

வொரு விதத்திலும் உன்னுடைய சந்தோஷத்துக்காகப் பாடுபடக் கடமைப்பட்டவன்தான் நான். ஆனால் இந்த ஒரு விதத்தில் மட்டும் நீ விரும்பும் சந்தோஷத்தை உனக்குக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறேன்.''

''வாழ்நாள் முழுதும் உங்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தையே நினைத்து ஏங்கிக்கொண்டிருக்கப்போகிறீர்களா?''

''என் முடிவுக்குக் காரணம் ஏக்கமில்லை, கனகா. நேர்மை உணர்ச்சி. எனக்காக மட்டுமல்ல. அகிலாவுக்காகவும்தான். அகிலாவை நான் என் மனத்தில் எவ்வளவு பக்தியுடன் போற்றி வருகிறேன் என்று உனக்குத் தெரிந்திருக்க முடியாது. வள்ளியைச் சந்திப்பதற்கு முன்னால் நான் அகிலாவைச் சந்தித்திருந்தால் ஒருவேளை என் மனம் வேறு விதத்தில் அவளை ஏற்றிருக்குமோ என்னவோ? ஆனால் இப்போது அகிலாவிடம் நான் கொண்டிருக்கும் பக்தி வாழ்க்கைப் பிணைப்பாகப் பரிணமித்தால் அந்த பக்தியையே குறைவு படுத்துவதாகிவிடும். என் பக்தியில் முதலிடம் பெற்றுவிட்ட அகிலா என் நினைவிலும் முதலிடம் பெற வேண்டாமா?''

''அதாவது ஆயுள் முழுவதும் அந்தக் காட்டுப் பெண்ணின் நினைவுக்குத்தான் முதலிடம் கொடுத்துப் போற்றிக் கொண்டிருக்கப் போகிறீர்களா?''


''வருங்காலத்தைப் பற்றி எனக்குத் தெரியாது. என்னுடைய இப்போதைய மனநிலையைக் கருதித்தான் நான் பேசுவதெல்லாம். வள்ளியைக் காட்டுப் பெண் என்று நீ பழித்தாலும் அவளுடைய நினைவு எனக்குப் புனிதமானதுதான். அந்த நினைவுக்குத் துரோகம் செய்து நான் அகிலாவை ஏற்றுக்கொள்வது அகிலாவுக்கே செய்யும் துரோகம் என்றுதான் நான் நினைக்கிறேன்.''

''அந்த வள்ளி உங்களுக்குச் செய்த துரோகத்தைப் பற்றிய சிந்தனையே உங்களுக்குக் கிடையாதா?''

''வள்ளி எனக்குத் துரோகம் செய்ததாக நான் என்றாவது நினைத்தால்தானே? அவள் நிலைமையை நான் பார்த்த அதே அனுதாபக் கண்களுடன் நீயும் பார்த்திருந்தால் அவளைப் பற்றிய கடுமையான எண்ணத்துக்கு உன் மனத்தில் இடமே இருக்காது.''

''நீங்கள் ஆயிரம் சமாதானம் சொன்னாலும் சரி, அந்தப் பெண்ணின் நினைவுக்காக உங்கள் வாழ்வையே பாழ்படுத்திக் கொள்வதை நினைத்தால் எனக்குக் கோபம்தான் வருகிறது'' என்றாள் கனகா வெறுப்புடன்.

ஒன்று, இரண்டு, மூன்று...பத்து!

★  ★

என் கணவர் படுத்திருக்கிறார். பத்துக்கு முன் அவர் எழுந்திருப்பதில்லை.

-- ஒரு குத்துச் சண்டை வீரனின் மனைவி. -த. ச.

''என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளும்போது உன்னுடைய கோபம் மாறிவிடும் என்றே நம்புகிறேன்'' என்று கூறி எழுந்தான் குமரன்.

சாப்பாட்டுக்குப் பிறகு வெளியே புறப்பட்டுச் சென்ற குமரன் மாலையில் சபேசனுடன்தான் திரும்பி வந்து சேர்ந்தான்.

''கனகா, சந்தோஷச் செய்தி'' என்று கூறிக் கொண்டே உள்ளே வந்தான் சபேசன்.

''குமரன் எங்கள் கம்பெனி வேலையையே ஏற்றுக் கொண்டு விட்டார்.''

''இதைக் கேட்டு நான் ஆச்சரியப்படவில்லை. அண்ணா வேறு ஏதாவது நிலையான வேலையை ஒப்புக் கொண்டிருந்தால்தான் நான் ஆச்சரியப்பட்டிருப்பேன்'' என்றாள் கனகா.

''இந்த வேலையை நான் ஒப்புக்கொள்வதைப் பற்றிக் கனகாவுக்கு இஷ்டமேயில்லை'' என்று சிரித்தான் குமரன்.

''ஆமாம், என் இஷ்டத்தைக் கேட்டுக்கொண்டுதான் ஒவ்வொன்றும் செய்கிறீர்களா, என்ன?'' என்றாள் கனகா.

''உடனேயே வேலையில் சேர்ந்துவிடப் போவதில்லை, கனகா. பத்து நாள் அவகாசம் கேட்டிருக்கிறேன்'' என்றான் குமரன்.

''நல்ல வேளை. வேலையில் சேர்ந்த பிறகுதான் அலைச்சல் இருக்கவே இருக்கிறது. பத்து நாள் அவகாசத்தையாவது அலைச்சல் இல்லாமல் எங்களுடன் கழிப்பீர்களல்லவா?'' என்றாள் கனகா.

''இல்லை, கனகா! வேலையில் சேருவதற்கு முன்னால் நான் மேற்கொள்ள வேண்டிய புனித யாத்திரை ஒன்று இருக்கிறது. சுருளியாற்றுத் திட்டத்தில் எனக்குப் பழக்கமாகிவிட்ட இடங்களை ஒரு தரம் பார்த்து வரவேண்டுமென்ற ஆவலை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை'' என்றான் குமரன்.

''புனித யாத்திரையா இது?'' என்று கேட்டாள் கனகா கிண்டலாக.


''ஆமாம் கனகா! என் நினைவில் ஒன்றிவிட்ட அந்த இடங்களுக்கு என் வரையில் ஒரு புனிதத் தன்மை உண்டு'' என்றான் குமரன். **(தொடரும்)**

மார்ச் 3-ந் தேதி முதல் தென்னாடெங்கும்

கண்ணிலே கனிந்து நிற்கும் கண்ணனாக என். டி. ராமாராவ்...... அழகே உருவாகி அகந்தையின் சின்னமான சத்யபாமா தேவியாக ஜமுனா......மாதர்குல மாணிக்க தேவியாக அஞ்சலிதேவி நடிக்கும்...



SATYAM



ஒரு திருத்தம்

எ. சுவாமிநாதன்

இரவு ஒன்பதரை மணி. ராம்சாமி தமது பங்களாவின் ஹாலில் உள்ள சோபாவில் அமர்ந்து கொண்டு, கொட்டைப் பாக்கைச் சீவி வெற்றிலை போட ஆரம்பித்தார்.

இந்தச் சுமுகமான சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு "ஊரிலிருந்து என் அம்மா கடிதம் போட்டிருக்கிறாள்..." என்று கூறியவாறே வந்தாள் அவரது மனைவி கமலம். "என் மூன்றாவது தங்கைக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறதாம். பங்குனி முதல் வாரத்தில் முகூர்த்தம்..."

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்!"—வெற்றிலைச் சுருளை வாயில் அடக்கிக் கொண்டார் ராமசாமி. மேலே பேச்சுக் கொடுத்தால் தமது மடியைக் கடிக்கும் என்னும் விஷயத்தை அறியாதவரா அவர்?

"தங்கை கல்யாணத்துக்காக அம்மா..." கமலம் சற்றுத் தயங்கினாள்.

"கமலம்! இதோ பார். உன் இரண்டாவது தங்கை கல்யாணத்துக்கு அப்படியும் இப்படியுமாக மூவாயிரம் வரை எனக்குச் செலவு வைத்து விட்டீர்கள்" என்று அலுத்துக் கொண்டார்.

"இந்தக் கடைசித் தங்கைக்கு அப்புறம் வேறு பெண்கள் கிடையாது. என் தம்பி இரண்டு பேர்கள். அவர்கள் அடுத்த வருஷம் சம்பாதிக்க ஆரம்பித்துக் கடனையெல்லாம் அடைத்து விடுவார்கள். உங்கள் பணத்துக்கு நான் ஜவாப்தாரி."

ராமசாமியின் முகம் தணலில் விழுந்த அப்பளம் போலக் கருகியது. வேண்டா வெறுப்பாக 'உம்' கொட்டினார்.

"கல்யாணத்துக்குப் புடவை வேட்டியை நாம் வாடிக்கையாக எடுக்கும் ஜவுளிக் கடையிலேயே எடுத்து வரலாமா?"

ராமசாமியின் தலை தஞ்சாவூர்ப் பொம்மை மாதிரி ஆடி ஓய்ந்தது. "சரி, என்ன எழுதியிருக்கிறார்களோ, அதையெல்லாம் சொல்லித் தொலை!"

"அப்படி ஒன்றும் அதிகம் எழுதிவிடவில்லை. இருநூறு பத்திரிகை, நூற்று ஐம்பது ரூபாய்க்குள் கடிகாரம், பத்து கிலோ காப்பிக் கொட்டை, சர்க்கரை பத்துக் கிலோ... அப்படியே கிராமத்திலிருந்து பழைய நெல் ஒரு ஐந்து மூட்டை...தோட்டத்தில் விளையும் காய்கறிகள்..."

ராமசாமிக்குப் புரிந்து விட்டது. அதோடு தாயார் சொன்ன ஒன்றும் ஞாபகத்துக்கு வந்தது. உடனே சோபாவிலிருந்து நிமிர்ந்து உட்கார்ந்து, "கமலம்! ஒரு சமாசாரம்..." என்றார்.

"என்ன சொல்லுங்கள்!"

"கல்யாணம் உன் பிறந்த வீட்டில் அகரமாங்குடியில்தானே நடக்கப்போகிறது?"

"ஆமாம்!"

"உன் இரண்டாவது தங்கைக்கு நான் செலவு செய்ததைக் கண்டு என் அம்மா ஒன்று சொன்னாள். அப்போது நான் கேட்கவில்லை....இப்போது..."

திடுக்கிட்டாள் கமலம். மாமியார் ஏதாவது தடையுத்தரவு போட்டிருப்பாளோ என்னும் ஐயம் மின்னவிடவே, அவள் சுருதி குறைந்துவிட்டது.

"நான் தரமாட்டேன் என்றால் நீ விடப்போகிறாயா? அதனால் அம்மா சொன்னது போல்...."

"யார் அம்மா?"

"என் அம்மாதான்."

"என்ன செய்யச் சொல்கிறீர்கள்?"

"உன் அம்மா, அப்பா, தம்பிகள், தங்கைகள் எல்லோரையும் ஒரு வாரத்துக்கு முன்னேயே இங்கே வந்துவிடச் சொல்!"

"எதற்கு?"

"கல்யாணத்துக்குத்தான். இந்த வீட்டில் வைத்தே நடத்தி விடுவோம்! நமது பணத்தைச் செலவழித்து அவர்களுக்குப் பெயர் வாங்கித் தருவானேன்? கல்யாணம் செய்து வைத்த புண்ணியத்தோடு பெயரும்தான் நமக்கு வரட்டுமே! இரண்டாவது மைத்துனியின் கல்யாணத்தின்போது என் அம்மா இதைத்தான் சொன்னாள். நீ நினைத்தது போல் உதவாதே, கிதவாதே என்று தடுக்கவில்லை!" என்றார்.

கமலம் கல்லாய்ச் சமைந்து விட்டாள். பிறந்த வீட்டுப் பெருமைக்கு இப்படியா பங்கம் நிகழ வேண்டும்?—அதுவும் அவள் மாமியாரின் முன்னிலையில்.



கடமைக்கும் பாசத்துக்கும் ஊரைபாடல் நடந்து கொண்டிருந்தது.

போலீஸ் இன்ஸ்பெக்டர் பாலசுந்தரமும் அவன் அண்ணன் மூர்த்தியும் பேசிக் கொண்டிருந்தனர். மூர்த்தி சென்னை மாநகரில் பிரபலம் அடைந்த, பலர் அறிந்த ஒரு செல்வன். பாலசுந்தரம் கடமையே மூச்சாகக் கொண்ட போலீஸ் இன்ஸ்பெக்டர். பல திருட்டு வழக்குகளில் நல்ல பெயரெடுத்தவன்.

மூர்த்திக்கு முப்பது வயது இருக்கும். அவனுக்கு அருக்குணவதியும் அழகின் திருவுருவுமான லட்சுமி மனைவியானாள். இருவரின் அன்புப் பெருக்கால் உதித்த மகன் இளங்கோ.

பாலசுந்தரம் இருபத்தைந்து வயது நிரம்பாத இளைஞன். அண்ணனிடமும் தன் அண்ணியிடமும் மங்காத பாசம் கொண்டவன். தாயன்பு தெரியாது வளர்ந்த அவன், தன் அண்ணியைத்தான் தாயாய்ப் போற்றி வந்தான். அவளும் தன் மைத்துனனைத் தன் மகனாகவே பாவித்தாள்.

''அண்ணா! இப்போது மப்டியில் நான் ஓர் இடத்துக்குப் போகப் போகிறேன். ஒரு கள்ளக் கடத்தல் கும்பலை இன்றிரவு பிடித்தாக வேண்டும். ஆறு மாதங்களாக முயற்சி செய்கிறேன். அந்தக் கள்ளக் கடத்தல் கும்பல் இருக்கும் இடமே தெரியாமல் இருந்தது. இன்றுதான் ஒரு சிறு துப்புக் கிடைத்தது.''

''நடு நிசியாகப் போகிறது. இந்த வேளையிலா போகப் போகிறாய்?''

''ஆம், அண்ணா!''

''துணை?''

''யாரும் இல்லை. நானே தான் போகிறேன்.''

''துணைக்கு நானும் வருகிறேன் தம்பி. எதுவரையில் போகிறாய் ?''

''தம்புச் செட்டித் தெருவுக்கு!''

மூர்த்தியின் முகம் குப்பென்று வியர்த்தது. அவன் தன் முகத்தைச் சட்டென்று துடைத்துக் கொண்டான். பாலு, ''நான் போய் வருகிறேன், அண்ணா!'' என்று சொல்லிவிட்டு வெளியில் சென்றான். அவனுடைய கால் சட்டைப் பைக்குள் குண்டுகள் அடைபட்ட ரிவால்வர் கனத்தது. அவன் வாகனம் எதையும் உபயோகிக்காமல் நடந்தே சென்றான். அவனுக்கு முன்னால் அவன் குறிப்பிட்ட தெருவைப் போலீசார் மப்டியில் வளைய வந்து கொண்டிருந்தனர்.

அவன் பூக்கடை போலீஸ் ஸ்டேஷனைத் தாண்டும்போது ஒரு சிவப்புக் கார் அவனைத் தாண்டி வேகமாகச் சென்றது. பாலு அதை உற்றுப் பார்த்தான். நம்பரைக் கவனித்தான். அது அவர்களுடைய கார்தான். ஆனால் ஓட்டிச் சென்றவர்தான் யாரென்று அவன் கவனிக்கவில்லை. அவன் அண்ணனாக இருக்க முடியாது. மூர்த்தி இந்த நேரத்துக்கு இங்கு ஏன் வரப் போகிறான்? கார் டிரைவராகவும் இருக்க முடியாது. அவன் ஒன்பது மணிக்கே தன் வீட்டுக்குப் போய்விட்டான். அவனது அண்ணிக்கும் கார் ஓட்டத் தெரியும். அவளும் வந்திருக்க மாட்டாள். அவள் ஊரிலே இல்லை. அவள் தன் குழந்தையோடு பிறந்த வீடு சென்றிருந்தாள்.

பின் .... ?

காரைத் திருடிக் கொண்டு கள்ளன் யாராவது ஓட்டிச் செல்கிறானா ?

பாலு சிந்தனை செய்து கொண்டே நடந்து கொண்டிருந்தான். அவன் குறிப்பிட்ட தெருவின் ஆரம்பத்தில் அந்தச் சிவப்புக் கார் நின்றிருந்தது. உள்ளே ஒருவரும் இல்லை. அப்போது அவன் அந்தக் காரைக் கண்



காணிப்பதா? கள்ளக் கடத்தல் கிடங்கினுள் நுழைவதா என்பது பற்றி யோசித்துக் கொண்டு சற்று நேரம் நின்றான். மப்டியில் இருந்த இரு போலீஸ் ஜவான்கள் அந்தச் சமயம் அங்கு வந்தனர். ஒருவரை அருகில் அழைத்து,

"நீ காரில் ஏறிப் படுத்துக்கொள். யார் வந்து காரை ஸ்டார்ட் செய்தாலும் உன் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி அவனைக் கைது செய்" என்றான் மெல்லிய குரலில்.

மற்றொருவனிடம், "ஒவ்வொரு கதவிலும் பேட்டரி விளக்கு அடித்துப் பார்த்துக் கொண்டே போ. எந்த இடத்தில் கதவில் பூட்டு இல்லையோ அங்கே நீ நின்று கொள்; நான் கிடங்கினுள் நுழையப் போகிறேன். என்னுடைய விசில் சத்தம் கேட்டதும் எல்லாரும் ஓடி வந்து கதவை உடைத்தாவது உள்ளே வந்துவிட வேண்டும். சற்றுத் தாமதித்தாலும் என் உயிருக்கே ஆபத்தாக முடியலாம். நீ நிற்கும் இடமும் நான் நுழையும் இடமும் ஒன்றாக இல்லையானால் ஆகாயத்தைப் பார்த்து ஒரு முறை சுடு. நான் புரிந்து கொண்டு நான் இருக்கும் இடத்தைச் சுட்டிக்காட்டித் தெரிவிக்கிறேன். எல்லாரும் நுழைந்து விடுங்கள்" என்றான்.

பாலு சொல்லிவிட்டுச் சில கஜங்கள் நடந்து சென்றான். ஒரு சந்து. அந்தச் சந்தினுள் நுழைந்து விட்டான். போலீஸ்காரன் ஒவ்வொரு கதவிலும் வெளிச்சம் அடித்துப் பார்த்துக் கொண்டே சென்றான். தெருவின் கடைசி வரையில் சென்றும் எல்லாக் கதவுகளிலும் பூட்டு தொங்கக் கண்டானே தவிர பூட்டில்லாத கதவையே அவன் காணவில்லை. அவன் சோர்ந்து போய்த் திரும்பிக் கொண்டிருந்தான். அவன் கார் அருகே வருவதற்கும் இன்ஸ்பெக்டர் சந்தில் இருந்து வருவதற்கும் சரியாக இருந்தது. இருவரும் வந்து காரினுள் பார்த்தனர். காரில் படுத்திருந்த போலீஸ்காரர் இல்லை!

இருவரும் திடுக்கிட்டனர். போலீஸ்காரர் எங்கு சென்றிருப்பார்? எல்லாக் கடைகளையும் கவனித்துக் கொண்டு வந்த போலீஸ்காரன் கார் நின்றிருந்த இடத்தின் கதவைக் கவனிக்கவில்லை. அகஸ்மாத்தாக பேட்டரி அடித்துப்பார்க்க அந்தக் கதவில் பூட்டில்லாமல் இருக்கக் கண்டான். உடனே இன்ஸ்பெக்டருக்கு ஜாடையாகத் தெரிவித்தான்.

இன்ஸ்பெக்டர் பாலு புரிந்துகொண்டான். உடனே வேறு வழியாகச் சென்று அந்தக் கிடங்கினுள் நுழைந்தான்.

கார் அருகே நின்று கொண்டிருந்த போலீஸ்காரர் இரண்டு மணி நேரம் காத்திருந்தார். உள்ளேயிருந்து விசில் சத்தமோ துப்பாக்கி குண்டு வெடித்த ஓசையோ கேட்கவில்லை.

அந்தக் கதவு திறக்கப்பட்டது. உள்ளேயிருந்து இன்ஸ்பெக்டர் பாலு கதவைத் திறந்து கொண்டு அமைதியுடனும் சோகத்துடனும் வந்தான்.

"நாம் நன்றாக ஏமாற்றப்பட்டு விட்டோம். நமக்குக் கிடைத்த தகவல் தவறானது. இதுவல்ல கள்ளக் கடத்தல் கிடங்கு" என்று சொல்லிப் போலீஸ்காரனை அனுப்பி வைத்தான். பிறகு தானே காரில் ஏறிப் படுத்துக் கொண்டான்.



மேலும் ஒரு மணிநேரம் சென்றிருக்கும். உள்ளேயிருந்து மூர்த்தி வந்தான். காரில் ஏறி அமர்ந்தான். காரை 'ஸ்டார்ட்' செய்தான். கார் அவர்கள் வீடு நோக்கித் திரும்பியது. பாலு படுத்துக் கொண்டிருப்பதை அவன் கவனிக்கவில்லை. மூர்த்தி வீடு சென்றதும் காரை ஷெட்டில் விட்டுவிட்டு உள்ளே வந்து படுத்துக் கொண்டான்.

கிடங்கில் நடந்தது என்ன?

போலீஸ்காரரை எச்சரித்துவிட்டு, சிவப்பு வண்ணக் கார் நின்றிருந்த இடத்தின் கதவு பூட்டில்லாமல் இருக்கவே வேறு வழியாகப் புகுந்து கிடங்கினுள் நுழைந்து விட்டான் பாலு. அவன் எதிர்பார்த்தது வீண்போகவில்லை.

அந்தக் கடத்தல் கூட்டத்தின் தலைவன் யாரோ எவனோ என எண்ணிக் கொண்டு அவன் உள்ளே நுழைந்தான். அவன் எதிர்பார்க்கவில்லை, தன் அண்ணன்தான் அந்தக் கூட்டத்தின் தலைவன் என்று !

தங்கக் கட்டிகள், கடிகாரங்கள், சவரன்கள், டிரான்ஸிஸ்டர்கள், பேனாக்கள், பிளேடுகள் இன்னும் எத்தனை எத்தனை பொருள்களோ அங்கு குவிந்திருந்தன. ஏழெட்டுப் பேர் அமர்ந்திருந்தனர். நாற்காலியில் உற்கார்ந்திருந்தான் மூர்த்தி.

"யாரும் அசையாதீர்கள். அசைந்தால் பிணமாவீர்கள் !" என்று எச்சரித்துக் கொண்டே நீட்டிய துப்பாக்கியுடன் எதிரில் நின்றான் இன்ஸ்பெக்டர் பாலு. தலைவனைக் கண்டதும் அவன் கை தாழ்ந்தது.

"அண்ணா, நீங்களா?" என்று உரக்கச் சொன்னான் பாலு. மூர்த்தி 'ஆம்' என்பது போல் தலையாட்டிக் கொண்டே மெல்லச் சிரித்தான். "நான்தான் பாலு! ஏன் ஆச்சரியப்படுகிறாய் ?"

பாலு பேசவில்லை, அவன் வியப்புத் தீர்ந்தால் அல்லவோ பேசுவதற்கு?

மூர்த்தியே பேசினான். "பல காலமாய் நான் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறேன். நமக்கு பங்களா வாசம், டாம்பீக வாழ்வு, பாங்கியிலே ரொக்கம், உல்லாசமாகப் பவனி வரக் கார், உண்ணுகின்ற உணவு, உடுக்கின்ற உடை, நீ படித்த படிப்பு எல்லாம் தந்தது, தந்து கொண்டிருப்பது இந்தத் தொழில் தான்" என்று சொல்லித் தன் தம்பியை நோக்கினான். உணர்ச்சிப் பிழம்பாய் அவன் மாறிக் கொண்டு இருந்தான்.

"அண்ணா!" என்றான் மெல்லிய குரலில். அவன் குரல் நடுங்கிக் கொண்டிருந்தது. கடமைக்கும் பாசத்துக்கும் அவன் மனத்துக்குள்ளேயே ஒரு போர். அவன் தன் அண்ணனோடு இது வரை வாழ்ந்த பழைய நாட்களை எண்ணிப் பார்த்தான். அண்ணனுக்கு மனைவியாய், தனக்கு அண்ணியாய் — தாயாய் வந்த லட்சுமியை நினைத்துக் கொண்டான். ஒரு வேளை உணவுக்குத் தான் பட்ட துன்பத்தில் அண்ணன் எத்தனை துன்பப்பட்டிருப்பார் என்பது அப்போது அவனுக்கு நினைவு வந்தது.

அப்போது பாலுவுக்குப் பத்து வயது இருக்கும். அமைந்தகரைக்குப் பக்கத்தில் உலகத்தில் அசிங்கியம் எல்லாம் குடி கொண்ட ஒரு குப்பத்தில் அண்ணனும் தம்பியுமாய் வாழ்ந்து கொண்டிருந்தனர். மூர்த்தி ஒரு சோடாக் கடையில் வேலை செய்து கொண்டிருந்தான். பதினைந்து வயதுப் பையனுக்கு என்ன பெரிதாகச் சம்பளம் கொடுத்து விடுவார்கள்? அப்போது மூர்த்திக்குப் பதினேழு ரூபாய் சம்பளம்.

வயிறாரச் சுவையோடு ஒருவேளை அரிசிச் சோறு சாப்பிட அந்த இரண்டு பேரும் எத்தனையோ நாட்கள் ஏங்கியிருக்கிறார்கள். அந்த அவல நிலையிலும் மூர்த்தி தன் தம்பியைப் படிக்க வைத்துக் கொண்டு வந்தான்.

பாலு எஸ். எஸ். எல். ஸி. முடித்து விட்டால் தங்கள் வாழ்க்கைக்கு விடிவு காலம் என்று மூர்த்தி எண்ணிக் கொண்டிருந்தான். வாழ்க்கையில் முன்னேறும் வாய்ப்பு அதாவது அதிர்ஷ்டம், பாலு படிப்பை முடிப்பதற்கு முன்பே அவர்களிடம் ஓடிவந்து சேர்ந்து கொண்டது.

கொடுத்த தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொட்டவில்லை. அவனைக் கள்ளத்தனத்தில் ஈடுபடுத்தித்தான் கொடுத்தது. சாதாரணமாக ஆரம்பித்தான், ஒன்றிரண்டு கள்ளக் கடத்தல் சாமான்கள் வாங்கிப் பயந்து பயந்து விற்றுக் கொண்டிருந்தான். அவனிடம் கணிசமான தொகை சேர்ந்தது.

லட்சுமியின் தந்தை, மூர்த்திக்குப் பணம் எப்படி வந்தது என்பதைப் பற்றி யோசிக்கவில்லை. அவன் டாம்பீக வாழ்வைப் பார்த்துத் தம் பெண்ணைக் கொடுக்கத் தாமே முன் வந்தார்.

லட்சுமி மூர்த்தியின் வீட்டுக்கு வந்தாள். லட்சுமி தேவியை அவள் தன்னுடனேயே அழைத்துக் கொண்டு வந்தாள். செல்வம் கொழித்தது. மூர்த்தி மேலும் மேலும் நகரில் பிரபலமானான். அவள் வந்தவேளை!

பாலு மேற்கொண்டு படிக்க வேண்டும் என்று மூர்த்தி விரும்பினான். பாலுவுக்கு அந்த எண்ணம் இல்லை. அண்ணியின் அன்பாலும், அண்ணனின் பாசத்தாலும் உல்லாசமாக உண்டு, உடுண்டு திரண்ட தன் கட்டுடலைக் காவலர் பணிக்கு ஒப்படைக்க விரும்பினான். மூர்த்திக்கு விருப்பம் இல்லையென்றாலும் தன் தம்பியின் நோக்கத்துக்குத் தடை சொல்லாமல் விட்டுக் கொடுத்தான். பாலு போலீஸ் இன்ஸ்பெக்டர் வேலைக்குப் பயிற்சி மனுச் செய்து கொண்டு பயிற்சி பெற்றுப் போலீஸ் இன்ஸ்பெக்டரானான்.

தாயன்புக்கு ஏங்கிய பாலுவுக்குத் தாயாகவே மாறிவிட்டாள் லக்ஷ்மி. அவளது அன்பும் அரவணைப்பும் பாலுவுக்குச் சிறந்த புகழைத் தேடித் தந்தன.

எதை எதையோ எண்ணிப் பாலு நின்று கொண்டிருந்தான். அவன் என்ன செய்வான்? எதைச் செய்வான்? கடமைக்காக அண்ணனைக் கைது செய்வானா, பாசத்துக்காக அண்ணனை விட்டுச் செல்வானா?

"ஏன் தம்பி பேசாமல் நிற்கிறாய்? நீ வந்த வேலையை முடித்துக்கொள். ஆனால் இதோ என்னைச் சுற்றி நிற்கும் அப்பாவிகள் நான் சொன்னதைச் செய்யும் ஏவலர்கள். கூலிக்காகப் பணி செய்யும் பஞ்சைகள். அவர்

களுக்கும் இந்தக் கடத்தலுக்கும் சம்பந்தம் இல்லை. அவர்களை விட்டுவிடு. என்னைக் கைது செய்து கொண்டு போ!''

''அண்ணா! நான் உங்களை எதிர்பார்க்க வில்லை. இந்த இடத்தில் இந்த நிலையில் நான் உங்களைச் சந்திப்பேன் என்று கனவிலும் நினைக்கவில்லை. பாசத்தால் துடிக்கும் நான் எப்படி அண்ணா உங்களைக் கைது செய்வேன்?''

''குற்றம் ஒன்று உண்டானால் தண்டனை யும் ஒன்று உண்டு. நான் குற்றம் செய்தவன். பல நாள் திருடன். தண்டனை அனுபவித்தே ஆகவேண்டும். இன்று அகப்பட்டுக்கொண் டேன். என்றோ பிடிபட வேண்டியவன். என் செல்வச் செழுமை என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை. எந்தப் பணத்தால் நீ படித்தாயோ, அந்தப் பணத்தின் படிப்பே, அது தந்த உழைப்பின் உயர்வே, அது தந்த வேலை வாய்ப்பே என்னைக் குற்றவாளிக் கூண்டிலே நிற்க வைக்கப் போகிறதென்றால் நான் பெருமிதம் அடைகிறேன். என்னைக் கைது செய். கடமை தவறாத இன்ஸ்பெக்ட ராக என்னை அழைத்துச் செல். தம்பியால் நான் கைது செய்யப்படுகிறேன் என்றால் அது எனக்கு இழுக்கல்ல. பெருமையே. உனக்கும் பெருமைதான். ஆனால் ஒன்று...''

''என்ன அண்ணா? சொல்லுங்கள்.''

''நான் சிறைக்குச் சென்றுவிட்டால் உன் அண்ணி துடித்துப் போவாள். அவளையும் அவள் அன்பு மகன் இளங்கோவையும் நான் திரும்பும்வரை ஆறுதலும் தேறுதலும் சொல்லிக் காப்பாற்று.''

''அண்ணா! என்னால் உங்களைக் கைது செய்ய முடியாது. காட்டிக் கொடுக்கவும் முடியாது. நான் போகிறேன். நான் போய் விடுகிறேன். இந்தத் தொழிலை இன்றோடு விட்டு விட்டு நீங்களும் தப்பித்துக் கொள் ளுங்கள்.''

பாலு அங்கே நிற்கவில்லை. சொல்லிக் கொண்டே வேகமாகத் திரும்பிவிட்டான். ''பாலு! தம்பீ!'' என்று அண்ணன் கூவியது அவன் செவி ஏற்கவில்லை.

காரை ஷெட்டில் நிறுத்திவிட்டுப் படுக் கைக்குப் போய்க் கொண்டிருந்தான் மூர்த்தி. தாழ்வாரத்தில் ஓர் உருவம் நின்றுகொண் டிருந்தது. ''யார் நீ?'' என்று அதட்டியபடி கேட்டான் மூர்த்தி.

''நான்தான் முதலாளி, கான்ஸ்டபிள் கண்ணாயிரம்!''

பாலுவால் காருக்குள் காவல் இருக்கும் படி ஏவப்பட்ட போலீஸ்காரர் கண்ணா யிரம் மூர்த்தியின் கையாள் என்பது பாலு வுக்குத் தெரியாது. பாலுவும் மற்றொரு கான்ஸ்டபிளும் மறைந்ததும் கண்ணாயிரம் கிடங்கினுள் ஓடிச் சென்று மூர்த்தியை எச் சரித்தான். மூர்த்தி கண்ணாயிரத்தைத் தன் பங்களாவில் போய் இருக்கும்படி சொல்லி அனுப்பினான். அவனுக்குத் தரவேண்டிய பங்குத் தொகையின் ஒரு பகுதியை அன்றைக் குக் கொடுத்துவிட வேண்டும் என்று அவனை வீட்டுக்கு அனுப்பி வைத்தான்.

''கண்ணாயிரமா?'' என்று கேட்டுவிட்டுக் கதவைத் திறந்தான். விளக்கைப் போட்ட





''அதோ போறாரே அவர், உங்கள் ஆபீஸ் நண்பர்தானே?''

''ஆமாம். அதெல்லாம் பழைய சங்கதி. இப்போ எங்க ஆபீசில் லேடி டைப் பிஸ்ட் வந்து சேர்ந்ததிலிருந்து, எனக்கு அவர் வில்லன். அவருக்கு நான் வில்லன்.''

தும் தன்னிடம் தோல் பை இல்லாதிருப் பதை உணர்ந்தான். காரிலே வைத்துவிட் டுத் திரும்பி விட்டதாக எண்ணிக்கொண்டு மறுபடியும் கார் ஷெட்டைத் திறந்தான். கார் அருகே சென்றதும் உள்ளிருந்து கேட்ட தெம்பல் ஒலியை உற்றுக் கேட்டான். அது தன் தம்பி பாலுவினுடையதுதான் என்ப தைத் தெரிந்து கொண்டான்.

பாலுவைக் கவனித்துக் கொள்ளாமலே முன் சீட்டிலிருந்த தோல் பையை எடுத்துக் கொண்டு கார் ஷெட்டைப் பூட்டாமல் திரும்பி வந்தான்.

பங்களாவுக்கு வந்ததும் கண்ணாயிரத்துக் குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்து அனுப்பி வைத்தான். அவுட் ஹவுஸில் குடியிருந்த தோட்டக்காரன் முனியனைப் போய் எழுப்பினான். அவனை அழைத்துக் கொண்டு மறுபடியும் கார் ஷெட் டில் நுழைந்தான்.

''உட்கார் முனியா!'' என்று சொல்லி மூர்த்தியும் தரையில் உட்கார்ந்து கொண் டான்.

''முனியா! இன்னும் இரண்டொரு நாளில் நான் சிறைக்குப் போக நேரலாம். ஆனால் நான் போவதற்குமுன் சில உண்மை களை, சில ரகசியங்களை உன்னிடம் சொல்லி விட்டுப் போக விரும்புகிறேன்.

''உண்மையில் பாலுவும் நானும் உடன் பிறந்தவர்கள் அல்ல. அவன் யாரோ, நான் யாரோ! ஆனால் நான் தாய் தந்தை முகம் பார்க்காத அனாதை. பாலு பிறப்பதற்கு முன்னால் அவன் பெற்றோர்கள் ஓர் ஆஸ்பத்திரியிலிருந்து என்னை வாங்கி வளர்த்த னர். எனக்கு ஐந்து வயது நடக்கும்போது பாலு பிறந்தான். பாலு பிறந்ததினால்

அவன் பெற்றோர் என் மேல் கொண்ட அன்பிலிருந்து மாற்றம் கொள்ளவில்லை. எங்கள் இருவரையும் தங்கள் இரு கண்களாகவே வளர்த்து வந்தனர். பாலுவுக்கு ஐந்தாம் ஆண்டு நடந்து கொண்டிருந்த போது இருவரும் ஒருவர்பின் ஒருவராக இறந்து விட்டனர். பாலுவுக்கு நானே தாயாய் தந்தையாய் இருந்து வளர்த்து ஆளாக்கி விட்டேன். பொறுப்பான வேலையும் கிடைத்து விட்டது. அவனுக்கு நான் செய்ய வேண்டிய எல்லாக் கடமைகளையும் செய்து முடித்து விட்டேன்.

''நான் இப்போது சொன்ன ரகசியத்தை என் மனைவியிடம்கூடச் சொல்லாதே. வெளியில் யாரிடமும் சொல்லாதே. பாலுவுக்கும் கூடத் தெரியக் கூடாது. எனக்கு இன்னும் சில வேலைகள் இருக்கின்றன. அது முடிந்ததும் நானே போலீசில் சரண் அடைவேன். நான் ஓர் அநாதை. தாய் தந்தையர் முகத்தையே பார்த்து அறியாதவன். இன்னும் இழிவாகச் சொல்வேனானால் குப்பையிலே பிறந்த மலர்.

''காலையில் பாலு வந்தால் நான் எங்கே போயிருக்கிறேன் என்று கேட்டால் தெரியாது என்று சொல். வேறொன்றும் சொல்லாதே. லட்சுமி ஊரில் இருந்து திரும்பினால் நான் சிறைப்பட்ட விஷயம் அவளுக்குத் தெரியாதிருக்குமானால் நான் சிங்கப்பூர் வரை சென்றிருப்பதாகச் சொல்.''

''சரி, முதலாளி. அப்படியே சொல்றேனுங்க.''

மூர்த்தி முனியனை அழைத்துக் கொண்டு வெளியில் சென்றான். கார் ஷெட்டின் கதவை மூடவில்லை.

இடங்கைச் சுற்றிப் போலீஸ் பந்தோபஸ்து. ஆள் நடமாட்டம் இல்லாத அந்த நடுநிசி நேரத்தில் போலீஸ்காரர்கள் அங்கங்கே பதுங்கிக் கொண்டிருந்தனர். நேரம் போய்க் கொண்டிருந்தது.

உள்ளேயிருந்து விசில் சப்தம் விட்டு விட்டுத் தொடர்ந்து எழுந்து கொண்டிருந்தது. கதவை உடைத்துக் கொண்டு 'திமுதிமு' என்று போலீஸ்காரர்கள் உள்ளே நுழைந்தனர். உள்ளே மூர்த்தி நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தான். கான்ஸ்டபிள் கண்ணாயிரம் மூர்த்திக்குப் பக்கத்தில் மப்டியில் நின்று கொண்டிருந்தான். அவர்களுக்கு எதிரில் நீட்டிய துப்பாக்கியுடன் பாலு நின்றிருந்தான். மூர்த்தியையும் கண்ணாயிரத்தையும் போலீஸார் அழைத்துக்கொண்டனர்.

''அண்ணா! நீங்கள் என் உடன்பிறக்கவில்லை என்றாலும் நீங்கள் என் அண்ணன் தான். என்னை வளர்த்த தந்தைதான். நான் இப்போது உங்களைக் கைது செய்யப் போகிறேன். தயவுசெய்து உங்கள் கூட்டாளிகளின் பெயர்களையும் விலாசங்களையும் சொல்லி விடுங்கள்.''

''தம்பி, நான் உன் உடன்பிறப்பு அல்ல என்று யார் சொன்னது ?''

''நீங்களே!''

''நானா! எப்போது ?''

''நேற்றிரவு கார் ஷெட்டில் முனியனிடம் நீங்கள் சொல்லிக் கொண்டிருந்தீர்களே!''

மூர்த்தி கலகலவென்று சிரித்தான். ''கடமை உணர்ந்த போலீஸ்காரனா நீ ? சொந்த அண்ணன் என்றால் கைது செய்யாமல் திரும்புவது! உடன்பிறக்காதவன் என்றால் கைது செய்வதா? குற்றம் எவன் செய்திருந்தாலும் குற்றம்தானே?'' என்றான்.

''இல்லை, அண்ணா ! நீங்கள் அங்கேதான் என்னைப் பற்றித் தப்புக் கணக்குப் போட்டு விட்டீர்கள். உங்களை இங்கே பார்த்ததும் பாசத்தால் துடித்ததென்னவோ உண்மை. கடந்த இருபத்திநான்கு மணி நேரத்தில் எனக்குள்ளே நடந்த போராட்டத்தில் கடமைதான் வென்றது. நான் உங்களைக் கைது செய்யவே வந்தேன்.''

மூர்த்தி எழுந்து நின்றான். இருகரங்களையும் பாலுவின் முன்னால் நீட்டி, ''உன் கடமையைச் செய்'' என்றான்.

அன்புக்கும் பாசத்துக்கும் உரையாடல் நடந்து கொண்டிருந்தது.

லட்சுமியும் பாலுவும் பேசிக் கொண்டிருந்தனர். ''பாலு! பத்திரிகையில் செய்தி படித்து விட்டு ஓடோடி வந்தேன். நீயே உன் அண்ணனைக் கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறாய். ஆனால் எனக்கு நேற்றுவரையில் தெரியாது, உன் அண்ணன் ஒரு கள்ளக் கடத்தல் பேர்வழி என்று. உன் கடமையை நீ செய்து விட்டாய். அதற்காக நான் பெருமைப்படுகிறேன்.''

''அண்ணி! உங்கள் கணவர் என்னோடு கூடப் பிறந்த அண்ணன் இல்லையாம். என் பெற்றோரால் எடுத்து வளர்க்கப்பட்ட அநாதையாம்.''

''உனக்கு யார் சொன்னது?''

''உங்கள் கணவரே நேற்றிரவு கார் ஷெட்டில் முனியனிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.''

லட்சுமி வாசல் பக்கம் திரும்பினாள். ''முனியா!'' என்று குரல் கொடுத்தாள். முனியன் வந்து நின்றான்.

''முனியா, நேற்றிரவு உன்னிடம் அவர் என்ன சொன்னார் ? பாலுவுக்கு அவர் உடன் பிறந்த அண்ணன் இல்லையா ?''


''அண்ணன் தம்பிதாங்க. நேற்று ராத்திரி என்கிட்டே அண்ணன் தம்பி இல்லேன்னு அவர் சொன்னது பொய்யிங்க. தம்பி பாசத்தை மறந்துட்டுத் தன்னுடைய கடமையைச் செய்யணும்னு அப்படி ஒரு நாடகம் ஆடிச்சிங்க. அதைக் கேட்டுத்தான் இவரு காலையிலே அண்ணனைக் கைது செய்துச்சுங்க'' என்றான் முனியன்.


பாலு கூடத்திலிருந்த அண்ணன் படத்தருகே ஓடிச் சென்று நின்றான்.

''அண்ணா! நான் கடமை தவறக் கூடாது என்பதற்காக உடன் பிறப்பையே இல்லையென்று சொல்லும் அளவுக்கு என்னைக் கடமை வீரனாக்கி விட்டீர்கள். நீங்கள் நேற்றிரவு சொன்னது போல் குப்பை மலர் அல்ல. இறை அன்புக்குப் பிடித்தமான பாரிஜாதம்!''

பாலு அண்ணன் மேல் கொண்ட பாசத்தால் தேம்பித் தேம்பி அழுதான்.


பவுன் சூரியன்
மார்க் புகையிலை
காரைக்குடி





"பாதாம் அல்வா ரெண்டு பிளேட்!"

அட்டைப் படக் கதை

ஜராசு

"நம்ப பஸ்களிலே தான் இப்படி ஒரேயடியா புளி மூட்டை யாட்டமா அடைபறோம் என்கிறதில்லே. ஜப்பானிலேகூட ரயில்களில் இந்த நிலைமைதானும்" என்றான் ராமு. "அங்கே ரயில்களுக்குள் பிரயாணிகளைத் திணிப்பதற்கென்றே சம்பளம் கொடுத்து ஆட்களை நியமிக்கிறாங்களாம்!"

"என்னடா, டூப் அடிக்கிறே?" என்றான் நண்பன் கோவிந்தன்.

"உங்கிட்டே இது விஷயத்தில் பொய் சொல்லி எனக்கு என்னடா ஆகணும்?"

"அந்தப் பிரச்னைக்கு இடமேது? என்றைக்காவது நீ நிஜம் பேசினால்தானே, அந்தக் கேள்விக்கு அர்த்தமுண்டு!"

"போடா, இடியட்! இந்த வாரம் 'டைம் மாகஸினை'ப் பாருடா; அதிலே போட்டிருக்கான். ஸ்டேஷனிலே பிளாட்பாரத்தில் ஆளுங்க தயாரா இருப்பாங்க. ரயில் வந்து நின்னதும் பிளாட்பாரத்திலே இருக்கிற பிரயாணிகள் உள்ளே ஏற முயலுவாங்க. ஆனால் உள்ளே இருக்கிற கூட்டம் இவங்களை வெளியே பிதுக்கித் தள்ளிக்கிட்டிருக்கும். தொத்திக்கிட்டு நிக்கிறவங்களைப் பிளாட்பாரத்திலே இருக்கிற 'தள்ளுபவர்'கள் அமுக்கித் திணித்துக் கதவை மூடிடுவாங்க."

"தேவலாமே, அந்த 'ஸிஸ்ட'த்தை இங்கேயும் கொண்டு வந்தால் இந்தத் தாவர சாஸ்திரத்தைக் கட்டிண்டு அழறதுக்கு அந்தத் தள்ளும் உத்தியோகத்துக்காவது போகலாம்! இந்தப் பஸ் ஸ்டாப்பிலே எனக்கு அந்த உத்தியோகத்தைக் கொடுத்தால் உடனே ஒப்புக் கொண்டு விடுவேன்; சம்பளத்தைப் பற்றிக்கூடக் கவலை இல்லை" என்றான் கோவிந்தன். அவன் கண்கள் அப்போது கல்லூரியை விட்டு வெளியே வந்து கொண்டிருந்த பெண்கள் கூட்டத்தை வளைய வந்து கொண்டிருந்தன. பெல்லா ரோஸிஸ் கல்லூரிக்குப் பக்கத்தில் இருந்தது அந்தப் பஸ் ஸ்டாப். அந்தக் கூட்டத்தினிடையில் தன் இதயம் கவர்ந்த சுந்தரியைத் தேடினான் அவன். அதோ அவளும் வந்துவிட்டாள். அந்த அலங்கார சுந்தரியை அளவெடுத்தன அவன் கண்கள். அளவெடுக்க வசதியாகத்தான் அவளும் உடலோடு ஒட்டியது போன்ற ஆடை அணிந்து வந்தாள். ஒவ்வொரு நாளும் ஒரு தினுசான உடை; ஒயிலான நடை!

கோவிந்தனுக்கு ஸ்கூட்டர் இருந்தது. அவன் பஸ் ஏறிப் போக வேண்டும் என்கிற அவசியமே இல்லை. ஆனால் அவன் ஒரு நாளைக்கு அந்தச் சுந்தரியை உட்லண்ட்ஸ் கார்டன் ஹோட்டலில் யதேச்சையாகச் சந்தித்ததிலிருந்து அவனும் பஸ்ஸில் செல்லத் தொடங்கி விட்டான். அவன் கல்லூரி மவுண்ட் ரோட்டில்; வீடு டவுன்-பவழக்காரத் தெருவில். ஆயினும் அவன் தினந்தோறும் கர்ம சிரத்தையாகக் காலை எட்டாவது மணிக்கு வடபழனிக்குப் போவான். அங்கே ஒரு வெற்றிலைப் பாக்குக் கடையருகே ஸ்கூட்டரை நிறுத்தி விட்டு அரை பாக்கெட் பிளேயர்ஸ் சிகரெட் வாங்கிக் கொண்டு பஸ் ஸ்டாண்டுக்கு வந்து காத்திருப்பான். சற்று நேரத்துக்கெல்லாம் அந்தச் சுந்தரி வருவாள். அவளுடன் பஸ்ஸில் மயிலாப்பூர் பெல்லா ரோஸிஸ் கல்லூரி வரை பயணம். அங்கே அவள் இறங்கிச் சென்றதும் மானசிகமாக 'டாட்டா' என்றும் 'சாயங்காலம் மீட்பண்ணலாம்' என்றும் கூறி விடை பெற்றுக்கொண்டு வடபழனிக்குத் திரும்புவான். முருகன் உள்ள திக்கு நோக்கிக் கும்பிடு போட்டு வரம் கேட்பான். ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு காலேஜுக்குப் பறப்பான்!

மாலையிலும் இதேபோலத்தான். கல்லூரி முடிந்ததும் அவள் தோழிகளுடன் உட்லண்ட்ஸ் தோட்ட ஹோட்டலுக்கு வருவாள், சிற்றுண்டி அருந்த. கோவிந்தன் அவளுக்கு முன்பாகவே அங்கே ஆஜராகி இருப்பான். அவள் தோழிகளுடன் அமர்ந்து கொண்டதும் அவள் பார்வையில் படுகிற மாதிரி எதிர் மேஜையில் இடம் பிடிப்பான். டிபன் காப்பிக்குப் பிறகு பஸ் பயணம். வடபழனியில் அவள் இறங்கிப் போன பிறகு மீண்டும் உட்லண்ட்ஸுக்கே வந்து அங்கு 'வெனே!' என்று காத்துக் கிடக்கும் ஸ்கூட்டரில் ஏறிக் கொண்டு வீட்டுக்குச் செல்வான்.

கல்யாணம் பண்ணியும் பிரம்மசாரி என்பது போல் ஸ்கூட்டர் இருந்தும் பஸ் பிரயாணியாக விளங்கினான் கோவிந்தன். அவனோடு சில தினங்களில் ராமு துணைக்கு வருவதுண்டு. கொஞ்ச காலத்தில் ராமுவுக்கு இந்த மௌன நாடகம் அலுத்துவிட்டது. ஆனால் கோவிந்தன் விடவில்லை. தினம் அவளை இருமுறை சந்தித்து, வடபழனி ஆண்டவனிடம் அந்த ஒரே வரத்தைக் கேட்காவிட்டாலும் இரவு அவனுக்குத் தூக்கம் பிடிக்காது.



சில சமயங்களில் உட்லண்ட்ஸ் ஹோட்டலில் அவள் தன் தோழிகளுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கையிலேயே, அவள் இவனைக் கள்ளத்தனமாக நோக்குவதுபோல் இவனுக்குத் தோன்றும். அந்தத்தருணங்களில் கோவிந்தன் காலரைச் சரி செய்து கொண்டு அவள் பக்கமாக ஒரு 'ஹீரோ' பார்வையை வீசுவான்.

அவ்வளவுதான்! அதோடு சரி! ஒரு வார்த்தையேனும் அவர்கள் பேசிக் கொள்ள வேண்டுமே? ஊஹூம்! அதற்குத் தைரியம் ஏது? கனமான கண்ணாடித் திரை போல இருவருக்கும் இடையில் மௌனம் நின்றது. அதை உடைக்க இருவருக்குமே துணிவு இல்லை.

பார்வையோடு நின்ற காதல் அவர்களுடையது. அவர்கள் மட்டும்தானா? இன்னும் எத்தனை எத்தனை கல்லூரி மாணவர்கள், மாணவிகள் பார்வைக் காதலுடனேயே திருப்தி அடைந்து திரும்பி விடுகிறார்கள்!

ஆனால் கோவிந்தனுக்கு மட்டும் திருப்தியே ஏற்படவில்லை. நாளாக ஆக, அவனால் இந்த 'சஸ்பென்'ஸைத் தாங்க முடியாது போல் இருந்தது. அதிலும் அன்று ஒரு நாள் அவள் இவன் பக்கமாகத் திரும்பியபோது அந்த இனிய, இனிய.... நினைக்க நினைக்க இனிமை சொட்டும் அழகு இதழ்களில் ஒரு புன்னகை மலர்வது போல் அவனுக்குத் தோன்றியதிலிருந்து அவன் பித்தனாகி விட்டான்.

அன்று இரவு அவனுக்கு உடம்பெல்லாம் கொதித்தது. ''மார்கழி மாசத்துலே இதென்னடா இராக் குளியல்? வேணுமின்னு வெந்நீர் போட்டுத் தரேன்டா!'' என்று தன் தாயார் புலம்பியதையும் பொருட்படுத்தாமல் ஷவருக்கு அடியிலே பத்து நிமிஷங்கள் குளிரில் விறைத்துப் போக நின்று விட்டு வந்து படுத்தான். அப்படியும் தூக்கம் வர மறுத்தது. சுந்தரியின் எழில் உருவம் இதழில் புன்னகை தாங்கி எதிரில் நிற்கையில் தழலாக அவன் தேகம் வெந்ததில் வியப்பென்ன?

திடீரென்று கோவிந்தனுக்கு ஞானோதயம் ஏற்பட்டது. இன்று அவள் கையில் ஏந்தி நின்ற புத்தகங்களுள் ஒன்றில் 'பாலிடிக்ஸ்' என்ற வார்த்தையைப் பார்த்ததாக அவனுக்கு ஞாபகம் வந்தது. ஏன் நேற்றுக்கூட அவள் ஓர் அரசியல் சம்பந்தப்பட்ட நூலை வைத்திருந்தாளே. அப்புறம் நாலு நாளைக்கு முன்னாலும் பார்த்த நினைவு.

கோவிந்தனுடைய அத்தான் சிவசங்கரன் மூன்று 'பி'க்களையும்–அதாவது பாலிடிக்ஸ்,



ஒரு அமெரிக்கருக்குத் தலை வழுக்கையாயிற்று. மறுபடியும் மயிர் வளருவதற்காக ஏராளமான பணம் செலவு செய்தார். ஒரு ஸ்காட்லாந்துக்காரருக்குத் தலை வழுக்கையாயிற்று. உடனே அவர் தம்முடைய சீப்பை விற்று விட்டார். —முரளி

பிலாஸபி, ஸைக்காலஜி ஆகிய மூன்றையும் கற்றுத் தேர்ந்து எம். ஏ. பட்டம் பெற்று இன்று சைவா கல்லூரியில் லெக்சரராக இருக்கிறான். அவன் துணையை நாடினால் என்ன? அவன் அரசியலுடன் மனோதத்துவத்தையும் கற்றறிந்தவனாயிற்றே !

'ஹல்லோ, மை பாய்!'' என்று கோவிந்தனை வரவேற்ற சிவசங்கரன், விஷயமறிந்ததும் ''ஹௌ ட் டு பி ஆஃப் ஹெல்ப் டு யூ'' என்று கூறி ஸ்கூட்டரில் கோவிந்தனுக்குப் பின்னால் ஏறிக் கொண்டான். உட்லண்ட்ஸ் தோட்ட ஹோட்டலுக்கு ஸ்கூட்டர் விரைந்தது.

'ஆகா! சிவசங்கரன்தான் முகவாயில் குறுந்தாடியும், மண்டையில் கோழிக் கொண்டையுமாக எவ்வளவு அழகாக இருக்கிறான். உயரமான கம்பீரத் தோற்றத்துடன் நடந்து போய் அலட்சியமாகவும் தன்னம்பிக்கையுடனும் அந்தக் கல்லூரிப் பெண்களுடன் பேச ஆரம்பித்து விட்டானே!' அந்த மேஜையைச் சுற்றி இருந்த பெண்கள் கல கலவென்று சிரித்தார்கள் அவன் கூறியதைக் கேட்டு. நட்சத்திரங்களாக அந்த யுவதிகளின் வெண்ணிறப் பற்கள் பளிச்சிட்டன என்றால் அந்தச் சுந்தரியின் புன்னகை அடிவானத்தில் தோன்றி மறைந்த மின்னல் கீற்றுப் போல் கோவிந்தனின் கண்களைப் பறித்தன. 'பற்பசை தயாரிப்போருக்குத் தெரிய வேண்டியதுதான். சுந்தரியின் வீட்டு வாசலில் கியூ வரிசையில் நிற்பார்கள். அவளைப் போட்டோ பிடித்துத் தங்கள் பற்பசை விளம்பரத்தில் போட !'

இப்படிக் கோவிந்தன் சிந்தித்துக் கொண்டிருக்கையிலேயே சிவசங்கரன் திரும்பி வந்து விட்டான், முகத்தில் வெற்றிப் பெருமிதம் தாண்டவமாட.

''ஸக்ஸஸ்ஸா ?'' என்றான் கோவிந்தன்.

''ப்பூ! இதெல்லாம் என்ன கிள்ளுக்கீரை! இன்னும் இரண்டே நாள் டைம் கொடு ! அதோ, அந்தப் பாசிக் கலர் கிரீன் ஸாரி உடுத்திண்டிருக்காளே, அவள்தானே உன் சுந்தரி ? அவளை நம்ம 'டேபி'ளுக்கே அழைச்சுண்டு வரேன்!''

சொன்னபடியே செய்தும் காட்டினான் சிவசங்கரன். 'ஆகா ! ஸைக்காலஜி படிச்சது வீண் போகுமா?' என்று வியந்தான் கோவிந்தன். 'அவன் லெக்சரர் ; அவள் மாணவி; வேறு வேறு கல்லூரியானால் என்ன? குரு சிஷ்ய பாவத்தில் அவள் அவனுடன் பழகுவதில் தவறில்லையே !'

கோவிந்தனும் சுந்தரியும் இப்போது எதிரெதிரே ஒரே மேஜையில் அமர்ந்திருந்தார்கள். அவனுக்கு மெய்சிலிர்த்தது. ஜில்லென்று மூன்று பேருக்கும் ஐஸ்கிரீம் ஆர்டர் பண்ணினான். சிவசங்கரன் ஐஸ்கிரீமைச் சுவைத்தபடியே சுந்தரிக்குப் பக்கத்தில் இன்னும் நெருக்கமாகத் தன் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டான். ஓர் அந்நியோந்நிய பாவத்துடன் அரசியல் அறிவை அவளுக்குப் புகட்டத் தொடங்கினான். தவறென்ன? அவளும் தன்னை மறந்த லயத்தில் ஈடுபட்டு அவன் கூறுவதையெல்லாம் வார்த்தை விடாமல் கேட்டுக் கொண்டாள். பிசகென்ன ? கல்வி அறிவு பெறுவதில் அத்தனை ஆர்வமா அவளுக்கு !

தன் யுக்தி பலித்ததென்று தன்னைத் தானே மெச்சிக் கொண்டான் கோவிந்தன். 'அவள் படிக்கும் பாடம் பாலிடிக்ஸ். அவளிடம் தான் படிக்கும் தாவர சாஸ்திரம் பற்றியா பேச முடியும்? அரசியல் தத்துவங்களை விமரிசிக்க அத்தானை அழைத்து வந்தது அருமையான யோசனை அல்லவா ? இருவருக்கும் பொதுவான ஓர் அம்சம் இருந்தால்தானே பேச்சு சுவாரசியமாக இருக்கும்?'

நாலைந்து நாட்களுக்குள் கோவிந்தனின் நிலைமை தர்மசங்கடமாகப் போயிற்று. அவன் இன்னமும் சுந்தரியுடன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை ! அவள் தன் தோழிகளிடமிருந்து விலகி வந்து நாலு நாட்களாக அவன் எதிரே அதே மேஜையருகேதான் அமர்ந்திருக்கிறாள். எனினும், பேசியதெல்லாம் சிவசங்கரனும் அவளும் தான். ஒரே பாலிடிக்ஸ் மயம். ரோமாபுரியில் ஆரம்பித்து சுதந்திரா —தி. மு. க. கூட்டணி வரையில் அரசியல் வியாக்கியானத்தை விடாமல் நடத்தினான் சிவசங்கரன். 'போர் ! ஒரே போர் ! இதற்கு இவனுக்கு டிபனும் ஐஸ்கிரீமும் வேறு தண்டம் அழ வேண்டியிருக்கிறது தினமும்.'

''ஐ லைக் இவ் சுந்தரி!'' என்றான் சிவசங்கரன், ஸ்கூட்டரில் உட்லண்ட்ஸ் நோக்கி வந்து கொண்டிருக்கும் போது. ''ஸ்வீட் கேர்ல் ! என்ன அடக்கம்! எத்தனை அமைதியாக நான் சொல்வதைக் கேட்டுக் கொள்கிறாள் ! அவள் ஆர்வத்தில் நூற்றிலே ஒன்னு உனக்குப் பாடத்தில் இருந்தால் பாஸ் பண்ணி விடுவாய் !''

வயிறு எரிந்தது கோவிந்தனுக்கு. பயன் என்ன ? சிவசங்கரன் பேச ஆரம்பித்தான். சுந்தரி வார்த்தை விடாமல் விழுங்கினாள். மகுடியில் மயங்கி ஆடும் நாகம் போல அவள் தன்னை மறந்து சிவசங்கரனின் பேச்சில் ஈடுபட்டாள்.

கண்ணுக்கு விருந்தாகச் சுந்தரி தன் எதிரே இல்லாமலிருந்திருந்தால் கோவிந்தனால் அத்தானின் தொணதொணப்பைத்

தாங்கவே முடிந்திராது. எனினும் ஏக்கமும் அவனைப் பிடித்து வாட்ட ஆரம்பித்தது. அவன் நினைத்தது என்ன? நடப்பது என்ன? ஒரு வார்த்தை, ஒரு சொல் அவன் அவளிடம் பேச இடம் தரவில்லை சிவசங்கரன். ஒரு தடவை ஏதோ கூற வாயெடுத்தான். சிவசங்கரன் இவன் பக்கமாகத் திரும்பி, ''டிபன் ஆர்டர் பண்ணு! நாங்க முக்கியமான விஷயம் 'டிஸ்கஸ்' செய்யறோம், குறுக்கே பேசாதே!'' என்று உத்தரவு போட்டான். 'குப்'பென்று முகம் சிவந்தது கோவிந்தனுக்கு. அதோடு சுந்தரியும் உள்ளங்கையை உயர்த்திக் காட்டி அமைதியாக இருக்குமாறு சமிக்ஞை செய்யவே அவன் பெட்டிப் பாம்பாக அடங்கிப் போனான். அப்புறம் ஒன்றிரண்டு முறைகள் அவன் பேச வாயெடுத்த போதும் வார்த்தைகள் வெளிவர மறுத்துத் தொண்டையிலேயே செத்து மடிந்து விட்டன. ஏமாற்றம்..... பெரும் ஏமாற்றம்.

அன்று சிவசங்கரனுக்கு ஜுரம் வந்து விட்டது. ''தலைவலி பிளக்கிறது, மண்டையை. என்னால் இன்றைக்கு வர முடியாது. சுந்தரிக்கு ரொம்ப ஏமாற்றமாக இருக்கும். கவலைப்பட வேண்டாம்னு சொல்லு. 'ஸ்வீட் கேர்ல்'! கண் கலங்கிடுவாள். ரொம்ப வருத்தப்பட்டாளானால் இங்கே ஸ்கூட்டரில் அவளை அழைச்சுண்டு வா. ஒரு நிமிஷம் என்னைப் பார்த்துட்டுப் போகட்டும். ஜாக்கிரதையா ஓட்டு ஸ்கூட்டரை. அவளையும் வைச்சுண்டு ஆக்ஸிடெண்ட் பண்ணிடாதே! சார்மிங் கேர்ல்! எங்கிட்ட எவ்வளவு பிரியம் என்கிறே! நான் பேசப் பேச அவளுக்கு அலுக்கிறதே இல்லை!''

சிவசங்கரன் தலைவலி மாத்திரையை விழுங்குவதைப் பார்த்துவிட்டு ஸ்கூட்டரில் ஏறிய கோவிந்தனுக்கு அதை எங்காவது மரத்தில் கொண்டு போய் மோதலாமா என்று தோன்றியது. என்றாலும் அதற்கு முன்னால் ஒரு தடவை கடைசி கடைசியாகச் சுந்தரியைப் பார்த்து விட—ஆமாம் பார்த்துவிடத்தான், அவள் என்ன தன்னை ஒரு பொருட்டாக மதித்துப் பேசிவிடவா போகிறாள்? — அவன் விரும்பினான்.

உட்லண்ட்ஸில் வழக்கமாக உட்காரும் இடத்தில் அமர்ந்தான். ஒரு காப்பிக்கு ஆர்டர் செய்து அதைச் சிறிது சிறிதாக ருசித்தபடியே காத்திருந்தான்.

சுந்தரி வந்தாள், தன் தோழிகளுடன் கும்பலாக. அவள் விழிகள் இவர்களைத் தேடி வளைய வந்தன. சிவசங்கரன் இன்றிக் கோவிந்தன் மட்டும் தனித்து அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் அவள் கால்கள் சற்றுத் தயங்கி நின்றன. சில விநாடிகளுக்கு அடி உதட்டைக் கடித்தபடி யோசித்துக் கொண்டு நின்ற அவளை, சிநேகிதிகள் கலகலவென்று சிரித்துக் கொண்டே அவன் பக்கமாக இலேசாக, விளையாட்டாகத் தள்ளிவிட்டு விட்டு நகர்ந்தார்கள், காலியாக இருந்த வேறு ஒரு மேஜையை நோக்கி.

சுந்தரி அவன் பக்கமாக நடந்தாள். அவள் தன்னை நெருங்கவே மாட்டாளோ

The following particulars regarding the ownership of the 'KALKI', the Tamil weekly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

1. *Place of Publication :* Madras
2. *Periodicity of its Publication :* Weekly
3. *Name of Printer and Publisher :* R. Ananthanarayanan
   Nationality : Indian
   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Kilpauk, Madras-10
4. *Name of Editor :* T. Sadasivam
   Nationality : Indian
   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Kilpauk, Madras-10
5. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital:*

Sri T. Sadasivam, 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-10. Srimathi M. S. Subbulakshmi, 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-10. Sri R. Ananthanarayanan, 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-10. Sri K. Rajendran, 1, Fifth St., New Colony, Lake Area, Madras-34. Sri V. Vaidyanathan, 3, Varadarajulu Naidu Road, Egmore, Madras-8. Sri K. R. Athmanathan, 20, Dr. Guruswami Mudaliar Road, Kilpauk, Madras-10.

1-3-67 R. Ananthanarayanan, *Publisher*

என்று நினைத்துப் பயந்த கோவிந்தன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். 'பல நாட்கள் பழகியாகி விட்டதே! பயப்படக் காரணம் இல்லைதானே' என்று எண்ணிக் கொண்டான். 'ஐயோ பாவம்! அத்தானுக்குத் தலைவலி என்று கூறி இந்த அழகுச் சிலையின் கோமள இதயத்தைப் புண்படுத்தப் போகிறேனே' என்று நினைத்து வருந்தினான். அவன் மீது கோபப்படாமல் அவளுக்காக வருத்தப்படுவது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

''அவர்..... அவர்..... வரவில்லையா?'' என்று கேட்டாள் சுந்தரி. அவளுடன் பேசவே சிரமப்பட்டான் அவன்.

''இல்லை....'' முதன் முறையாக அவளிடம் பேசியவனுக்கு உணர்ச்சி வசத்தால் தொண்டையை அடைத்தது. கனைத்துக் கொண்டு மேலே தொடர்ந்தான்: ''அத்தானுக்குக் கடுமையான தலைவலி'' என்றவன் உடனுக்குடன், ''ஒன்றும் பெரிதாக இல்லை;

சரியாகப் போய் விடும்; கவலைப்பட வேண் டாம்'' என்று ஆறுதலும் சொன்னான்.

''நல்ல வேளை பிழைத்தேன்!'' என்று பெருமூச்சு விட்டபடியே அவனெதிரே அமர்ந்தாள் அவள்.

'எத்தனை கரிசனம் இவளுக்கு. செவசங்கர விடம்' என்று நினைத்தபோது துக்கத்தால் கோவிந்தனின் கண்களில் நீர் முட்டியது.

''நான் கேட்கிறேன் என்று தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள்'' என்று ஆரம் பித்தாள் சுந்தரி. ''அதெப்படி அந்த 'போரை'ச் சகித்துக்கொண்டிருக்கிறீர்கள்?''

''என்ன என்ன?'' அவன் துள்ளி எழுந்த வேகத்தில் காப்பி சட்டையில் சிந்தியது. கப்பும் ஸாஸரும் கைநடுங்கியதால் தாள ஒலி எழுப்பின. அவற்றை வாங்கி வைத்து விட்டுச் சட்டையைத் துடைத்துக் கொள்ளக் கைக்குட்டையைக் கொடுத்தாள் அவள். ''என்ன நடந்து விட்டது, இப்போது? ஏன் இப்படிப் பதற்றமடைகிறீர்கள்? உங்களுக் குப் பிடிக்கவில்லையென்றால் நான் அவரைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. அவர் தொணதொணப்பைப் பொறுத்துக் கொண் டிருக்கிறேன். ஆனால் உண்மையை எத்தனை நாட்களுக்கு உங்களிடமிருந்து மறைப்பது? இன்று சந்தர்ப்பம் கிடைத்தது சொல்லி விட்டேன். அவரையும் அவருடைய பாலிடிக்ஸையும் நினைத்தாலே எனக்குப் பயமாயிருக்கிறது.''

ஜில்லென்று ஒரு பக்கெட் ஐஸ் தண் ணீரை அவன் தலையில் யாரோ கொட்டி விட்டதுபோல் அவன் மேனி அந்த நினைவி லேயே நடுங்கிச் சிலிர்த்தது. அந்தச் சில்லிப் பைப் போக்கிக் கதகதப்பை அளிக்க ஆசை தான் கோவிந்தனுக்கு. ஆனால் அதற்குள் நடக்கக் கூடியதா அது ?

''நீ என்ன சொல்லுகிறாய்? 'நல்ல வேளை நான் பிழைத்தேன்' என்றாயே; அத்தான் இங்கே வராததால் பிழைத்தேன் என்று அதற்கு அர்த்தம் ?''

''ஆமாம், ஏன் கேட்கிறீர்கள் ?''

''ஒன்றுமில்லை, நீ மேலே சொல்லு !''

''சொல்ல என்ன இருக்கிறது ? எட்ட இருந்த தம்மை நெருங்க வைத்தவர் என்ப தால் அவரிடம் ஓர் அநுதாபம். அவர் லெக்சரர், நான் மாணவி. அந்த விதத்தில் மதிப்புக் கொடுக்கக் கடமைப்பட்டவள் நான். அப்புறம் உங்கள் அத்தான் என்பதால் மரியாதை காட்டவும் வேண்டும். இல்லா விட்டால் எனக்கென்ன தலையெழுத்தா அவர் அடிக்கும் போரைச் சகித்துக் கொண் டிருக்க? எவ்வளவு அலுப்புச் சலிப்பாக அவர் பேச்சு இருந்தாலும் உங்கள் அருகில் தினம் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்க முடிந்ததே, அதுதான் எனக்குப் பைத்தியம் பிடிக்காமல் காப்பாற்றியது !''

''நீ காலேஜில் அரசியலைப் பாடமாக எடுத்துக் கொண்டிருப்பதால்.....''

''அரசியலா? கல்லூரிக் காம்பவுண்டுக் குள்ளே நுழைந்து விட்டால் எனக்கும் பாலிடிக்ஸுக்கும் ஸ்நானப் பிராப்திகூடக் கிடையாது.''

''அப்படியானால் நீ பாலிடிக்ஸ் புத்த கங்கள் எடுத்து வருவது ?.....''


''அதுவா ? என் அக்கா ராணி மங்கம்மா கல்லூரியிலே அரசியல் படிக்கிறாள். அங்கே லைப்ரரியில் நல்ல புத்தகங்கள் இல்லையாம். அதற்காக என் காலேஜ் லைப்ரரியிலிருந்து அவ்வப்போது சில புத்தகங்கள் எடுத்துக் கொண்டு போய்க் கொடுப்பேன். எனக்குக் கல்லூரியில் முக்கிய பாடம் தாவர சாஸ் திரம்; ஆனால் இஷ்ட பாடம் மனை இயற் கலை !'' பட்டுக் கன்னம் சிவக்கச் சிவக்கக் கூறினாள் அவள்.

''சுந்தரி ! பாதாம் அல்வா சாப்பிடு !'' என்ற கோவிந்தன் இரண்டு ஸ்வீட்டுக்கு ஆர்டர் செய்தான். காப்பிக்குப் பின் பாதாம் அல்வா சாப்பிடும் பிரகிருதியை வியப்புடன் பார்த்துவிட்டு நகர்ந்தான் ஸர்வர்.

''என் பெயர் ஹேமா ; சுந்தரியில்லை. எனக்குப் பாதாம் அல்வா பிடிக்காது'' என்றாள் அவள்.

''என் உள்ளத்தில் சுந்தரியாகத்தான் நீ நீண்ட நாட்களாக இடம் பெற்றிருக்கிறாய். அதை மாற்றுவதென்றால் கஷ்டப்படும். எனக்குப் பாதாம் அல்வா பிடிக்கும். நீ சாப் பிடாவிட்டால் பரவாயில்லை; தொட்டுக் கொடுத்துவிடு, போதும். உன் பங்கையும் சேர்த்து நானே சாப்பிட்டு விடுகிறேன்'' என்றான் கோவிந்தன்.

சுந்தரியின் சிரிப்பொலி சுந்தரமாகக் கேட்டது.



ஒரே மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது

ப்ரூக் பாண்ட் A-1 தேயிலைத் தூள் — நேர்த்தியான தேயிலைகளால் நன்கு கலக்கப்பட்டது. மிக்க நறுமணமுள்ளது . . . புத்துணர்ச்சியூட்டும் சுவையுடையது. ஒரு A-1 தேயிலைத் தூள் பாக்கெட் நல்ல சுவையுள்ள அதிக கப்புகள் தேநீரைக் கொடுக்கும். லக்ஷகணக்கான மக்கள் அருந்தி மகிழும் ப்ரூக் பாண்ட் A-1 தேயிலைத் தூளை நீங்களும் சுவையுங்கள்.

BB 3442

இன்னும் ஒன்று..

கடுங்குளிர் காலம். மூடுபனியின் இருட் போர்வையில் கைக்குக் கை புலனாகவில்லை. பூவுலகுக்கும் அதைப் படைத்த ஆண்டவனுக்கும் இடையே, ஒரு திரைக்குப் பதிலாக இரு திரைகள் இருந்தன. ஒன்று வானம்; இன்னொன்று மூடு பனி. திடீரென ஒரு குரல் பூமியிலிருந்து எழுந்தது. அழுங்குரல்..... இடையிடையே இலேசான விசிப்பு; 'உள்ளத்தை உருக்கும் இசையோடு இலேசாகத் தபலாவை அடக்கி வாசிப்பது போல. வெற்றுவெளி வழியே பயணமாகி, மூடுபனியைத் தள்ளி விலக்கிக் கொண்டு வானத்தைக் கிழித்தவாறு அது தன் ஆண்டவன் வரை சென்றது.

ஆண்டவனுக்கு மனிதனின் அலறல்களைக் கேட்டுப் பழக்கம் உண்டு. ஆனால் இந்தக் குரல் என்ன குரலோ? இரண்டு மூன்று தடவை கேட்டவுடனேயே உள்ளத்திலே ஓர் உதைப்பை — உருக்கத்தை உண்டு பண்ணி விட்டது. அவன் கலங்கிப் போய் 'ஜிப்ரீல்' என்னும் தன் தெய்வ தூதனுக்குக் குரல் கொடுத்தான்: ''ஜிப்ரீல்! நம் காவல் தேவதைகள் எங்கே இருக்கின்றன? விடாமல் வந்து கொண்டிருக்கிறதே. இது யாருடைய குரல்? இதை ஏன் யாரும் கேட்கவில்லை ?''

ஜிப்ரீலின் ஒளி படைத்த முன் நெற்றியிலே ஒரு சுருக்கம்கூட ஏற்படவில்லை. மிகுந்த மன அமைதியுடன் பதில் அளித்தான்: ''காத்தற் கடவுளே! எல்லாரும் தங்கள் தங்கள் கடமையில் கண்ணாயிருக்கிறார்கள். ஆனால் இந்தக் குரல் மிகவும் கனத்து ஒலிக்கிறது. அதனால் எல்லோரையும் தாண்டித் தங்கள் வரைக்கும் வந்துவிட்டது. அழும் பெண்ணின் குரல் இது. உங்களிடம் ஏதோ வேண்டுகிறாள்.''

''பெண்ணா?'' — காத்தற் கடவுள் மிக மெதுவாகக் கூறிக் கொண்டார். பிறகு தம் குரலைச் சற்று உயர்த்தி முணுமுணுத்தார்: ''மனிதனுக்கு எல்லாம் கொடுத்துவிட்டேன். ஆயினும் உலகம் உண்டான நாளிலிருந்து இது வரை என்னிடம் ஏதும் கேட்காத—வேண்டாத மனிதன் வந்ததே இல்லை. ஒவ்வொரு மனிதனும் பூசை என்று பெயர் வைத்து என்னிடம் ஏதாவது வேண்டிக் கொள்ளவே செய்கிறான். நல்ல வேடிக்கை!''

'' என் மிகைப் பேச்சை மன்னிக்க வேண்டும், வழிபடு தெய்வமே! எல்லாம் நீங்கள் கொடுத்தீர்கள். ஆனால் இன்னும் எத்தனையோ விஷயங்களை உங்கள் கைக்குள்ளேயே வைத்துக் கொண்டிருக்கிறீர்கள், ஆற்றல் அனைத்தும் படைத்த ஆண்டவனே!'' என்றான் ஜிப்ரீல் மிகவும் மெதுவாக.

''இதற்குச் சான்று?''—ஆற்றல் அனைத்தும் படைத்த ஆண்டவனின் குரலிலே கோபம் கொதித்தது.

''சான்று? அன்பு, அருமை, பெருமை, ஒருமைப்பாடுகள்'' — ஜிப்ரீல் அடுக்கிக் கொண்டே போனான்.

கீழேயிருந்து அழும் குரல் இடைவிடாமல் ஒலித்தது. முத்தெனப் பளபளக்கும் கண்ணீர் பல நிறம் காட்டிக் காற்றிலே மிதந்து வந்தது. விசிப்பு ஆண்டவனின் அகக் கதவைத் தட்டியது.

உருது மூலம்:
ரஜியா ஸஜ்ஜாத் ஜஹீர்
தமிழாக்கம்:
ரா. வீ.



''என்ன வேண்டுமாம், கேள்!'' — ஆண்டவனால் அவள் மீது இரக்கம் காட்டாமல் இருக்க முடியவில்லை.

''குழந்தை வரம் வேண்டுமாம், அவளுக்கு !''

''அவ்வளவுதானே ? அப்படியானால்...?''

''சகலருக்கும் ஆண்டவனே! இவளுக்குப் பிள்ளைப் பேறு என்பது கிடையாது. இவள் தலைவிதியிலே, 'குழந்தை' என்னும் பகுதிக்கு நேரே இரு கோடுகள் குறுக்காக இழுக்கப்பட்டிருக்கின்றன. அதன் பொருள், அவள் எந்த நாளும் தாயாக முடியாது என்பது தான். இவளுக்கு வேண்டிய மட்டும் அழகிருக்கிறது. பணங்காசு இருக்கிறது. அருமை பெருமை இருக்கிறது. அன்பு இருக்கிறது. அதனால் இவளுக்குக் குழந்தைச் செல்வத்தையும் கொடுத்து விட்டால், தங்கள் நெறி முறையில் பெருங் குழப்பமே ஏற்பட்டு விடும் வழிபடு பொருளே !''

ஆண்டவன் யோசனையில் ஆழ்ந்துவிட்டான். அவன் சிருஷ்டியிலே அமைதி நிலவியது. 'வானம் மௌனமாயிருக்கிறது. கருணை மாரி பொழியுமோ, என்னவோ?' என்று மண்ணில் பிறந்தோர் பேசிக் கொண்டார்கள்.

கணப்பொழுதுக்கெல்லாம் அமைதி கலைந்தது. ''என்னால் இந்தக் கூக்குரலைக் கேட்க முடியவில்லை. ஏதாவது வழி செய்தாக வேண்டும். கூப்பிடு, அவளை இங்கே!'' என்ற கட்டளை பிறந்தது.

எழிலுக்கு எழில் சேர்க்கும் ஷீலா படித்த வண்ணமே இரவைப் போக்கிவிட்டாள். நவீனம் சுவையாயிருந்தது. அவளைப் பொறுத்த வரை அதன் சுவை ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. உண்மையைக் கேட்டால், நவீனம் படிக்காமல் அவள் என்ன செய்வது? அன்றிரவு அவள் கணவன் ஒரு பெரும் வியாபார விஷயமாக பம்பாய் சென்றிருந்தான். போகும் பொழுது, ''பயப்படாதே, ஷீலா ! நான் நான்கைந்து மணிக்குள் பம்பாய் போய்ச் சேர்ந்துவிடுவேன். இரண்டு மூன்று மணி நேரத்தில் போன வேலையை முடித்துக்கொண்டு விமானத்திலேயே திரும்பி வந்து விடுகிறேன். கிட்டத்தட்ட ஐம்பதினாயிரம் ரூபாய் கிடைக்கும் என்று எண்ணுகிறேன். அதனால் தான் போகிறேன். இல்லாவிட்டால் உன்னைத் தனியாக விட்டு விட்டுப் போகமாட்டேன்!'' என்று சொல்லிச் சென்றான்.



அவளை உயிருக்கு உயிராக நேசிக்கும் கணவன், அவள் பெருமைக்குப் பெருமை சேர்க்கும் கணவன்! அவன் நினைவு வந்ததும் ஷீலாவின் விழிகளிலே நீர் பனித்திரையெனப் படர்ந்தது. பன்னிரண்டு வருடங்களுக்குமுன் அவளை எப்படி நேசித்தானோ, அப்படியே இன்றும் நேசிக்கிறான் அவன்.

அவன் பிரிவுத் துயரை மாற்ற அவளது தோழிகள் அவளைத் திரைப்படத்துக்கு இட்டுச் சென்றார்கள். இரவு ஒன்றரை மணிக்குத் திரும்பி வந்தவள் புத்தகத்தைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு படிக்க உட்கார்ந்து விட்டாள்.

மணி ஐந்து அடித்தது. கதாநாயகனுக்கும் நாயகிக்கும் கல்யாணம் நடந்தேறியது. நவீனமும் முடிந்து விட்டது. ஆனால் அதிலே ஒரு குறை. பெருங்குறை அது. எத்தனை பெரிய முட்டாள் இந்த நவீனம் எழுதியவன்? அடிப்படை விஷயத்தை விட்டு விட்டானே! இதைச் சொல்லவில்லையே? அவர்களுக்குக் குழந்தைகள் எத்தனை என்று சொல்ல வேண்டாமோ?

அவள் கட்டிலிலிருந்து எழுந்தாள். நவீனத்தை நாற்காலியில் வீசியெறிந்தாள். நாற்புறமும் பார்த்தாள். அறையிலே இருந்த ஒவ்வொரு பொருளும் விலையுயர்ந்தவை; அழகு மிக்கவை. எல்லாம் ஒழுங்காக அந்தந்த இடத்திலே வைக்கப்பட்டிருந்தன. அவை இடம் விட்டு இடம் மாறிப் போக ஏது வழி? அவற்றை உருட்டிப் புரட்டி உடைத்து ஒடித்து எறிவதற்கு அங்கே யார் இருந்தார்கள்?

ஷீலா கட்டிலில் படுத்து விசித்து விசித்து அழலானாள். விசிப்பினால் அவள் உடல் குலுங்கியது. விழிகளிலிருந்து அருவியெனப் பொங்கும் நீர் தலையணையை நனைத்தது. அப்புறம் திடுமென அவள் கண் முன்னே ஒரு காட்சி.

எட்டுகளைக் குட்டக் குட்ட எடுத்து வைத்து வெகு விரைவில் அவள் எண்ணற்ற படிகளைக் கடந்து செல்கிறாள். எழிற்பூங்கா ஒன்றை அடைகிறாள். அங்கே ஒவ்வொரு செடியும் குலுங்கக் குலுங்கப் பூத்திருக்கிறது. ஒவ்வொரு மரமும் காயும் பழமுமாகக் கனத்துத் தொங்குகிறது. பாதையும் படு துப்புரவாக இருக்கிறது. புல்—பூண்டு, குப்பை சத்தை பெயருக்குக்கூடக் கிடையாது. தொட்டிகளிலே பளிங்கு போன்ற நீர். பசும்புல் தரை வெல்வெட்டு விரித்த மாதிரி இருக்கிறது. ஒருவேளை இங்கேயும் பொருள்களைத் தொடவோ, இங்கு அங்கென்று அவற்றை எடுத்து மாற்றிப் புரட்டி வைக்கவோ யாரும் இல்லை போலிருக்கிறது.

அவள் தொண்டை கிழியக் கூச்சலிட்டாள்: ''ஆண்டவனே! என் செல்வமனைத்தையும் எடுத்துக் கொள். எனக்கு ஒரு குழந்தையைக் கொடுத்துவிடு. ஒரே ஒரு.... ஆமாம். ஒரே ஒரு......''

சட்டென ஒரு குரல் அவள் காதுகளிலே ஒலித்தது: ''இதோ, பார்! ஷீலா! பணம் கொடுத்து எந்தப் பொருளையும் பெற்று விடலாம் என்று எண்ணாதே. அது நடவாத செயல். உன் அழுகை என் உள்ளத்தைத் துளைத்து விட்டது. அதனால் உனக்கு ஒன்று சொல்கிறேன். நீ உலகத்திலே ஒரு பெண்ணை—ஆம், ஒரே ஒரு பெண்ணைத் தேடு போதும். அவள் தன் குழந்தையை — தனக்கு இருக்கும் குழந்தைகளில் ஒன்றை மட்டும் வெறுத்துச் சலித்துக் கொண்டாலும், நான் உன் செல்வத்தை யெல்லாம் எடுத்துக் கொண்டு, அந்தக் குழந்தையை உனக்குத் தந்து விடுகிறேன். அதனால் தேடு, தேடு, தேடு!''

சிறுகச் சிறுக அந்தக் குரல் காற்றிலே கலந்து தேய்ந்து மறைந்தும் விட்டது. இத்தகைய அநுதாபத்தையும் குழையக் குழைய அன்பையும் இன்று வரை அவள் எந்தக் குரலிலும் அநுபவித்ததில்லை. போன வேகத்தைக் காட்டிலும் படுவேகமாக அவள் படியிறங்கி வந்தாள். அந்த எழிற் பூங்காவிலே இப்பொழுது எந்தவிதக் கவர்ச்சியும் இருப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை. உயர்வைக் காட்டிலும் தாழ்விலே அவள் மனம் அதிக நாட்டம் கொண்டது. மற்ற உயர்வெல்லாம் அவளுக்கு உயர்வாகத் தோன்றவில்லை. இந்தத் தாழ்வே உயர்வாகத் தோன்றியது. தாழ்விலே உயர்வைக் காணும் ஆசை வலுத்தது.


ஆனால் அவள் தேடும் பொருள் இலகுவில் கிடைத்து விடக் கூடியதா? உலகத்திலே எந்தத் தாய்தான் தன் குழந்தையைச் சலித்துக் கொள்வாள்? அவளை எங்கென்று தேடுவது? தேடினாலும்தான் கிடைப்பாளா? யோசிக்க யோசிக்கப் பிடிபடாத பொருள் பிடிபட்டதாகத் தோன்றியது அவளுக்கு. ஏழைமை பிடுங்கித் தின்னும் இடத்தில் குழந்தைச் செல்வம் ஏராளமாக இருக்குமானால் ஒரு வேளை கிடைக்கலாம் அல்லவா?

அவள் கால்கள் தாமாகவே இயங்கி நடந்தன. சட்டென நின்றாள் அவள். அப்பப்பா! எத்தனை அசடு அவள்? இதற்காகத் தொலை தூரம் எதற்காக நடக்க வேண்டும் அவள்? அவள் வீட்டுக்கு வெகு அருகிலேயேதானே முலியா இருக்கிறாள்! முலியாவின் கணவன் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்தான் இறந்து போனான். அவன் அவளுக்கு விட்டுப் போன செல்வம் என்ன, தெரியுமா? சின்னஞ் சிறு குழந்தைகளாக எண்ணிக்கையிலே பத்து. முலியாவின் வீட்டிலே ஒரு வேளை உணவு, பிற வீடுகளிலே விட்டெறிந்த எச்சிற்பண்டங்கள். இன்னொரு வேளை காய்கறி—கீரை விற்பவர்கள் ஒடித்து உரித்துப் போட்ட தண்டுகளும் மேல் தோல்களும் உணவாக மாறி உண்டியை நிறைக்க முயன்றன. அவளது பதினொன்று பதினைந்து வயதுநிறைந்த பெண்ணின் உடலை மறைக்க உருப்படியான ஆடை கிடையாது. நாணல் குடிசைதான் அவள் வீடு. மரத்து நிழலில் கோடையையும் உலர்ந்த இலைகளின் தீக்கணப்பிலே குளிரையும் அவள் கழித்து வந்தாள்.

ஷீலாவுக்கு ஒரேயடியாகக் குளிர்ந்தது. என்ன பனி! என்ன பனி! அவள் கால்களிலே அணிந்திருந்த வெல்வெட்டு ஸ்லிப்பர் புல்லிலே படிந்திருந்த ஜில்லென்ற பனிநீர்த் திவலை பட்டு நனைந்துவிட்டது. திரும்பியவள் வேகமாக முலியாவின் குடிசையை நோக்கி நடந்தாள். நாணல் குடிலைச் சுற்றி வரும் பொழுது அவள் நெஞ்சு 'திக் திக்'கென்று அடித்துக் கொண்டது. ஒவ்வொருபுறமும்

இலவசப் பரிசுகள் –
பார்லேயின் க்ளுகோ
பிஸ்கட்டுகளுடன்





நீங்கள் 2 பெரிய பேக்குகள்
க்ளுகோ பிஸ்கட் வாங்கும்போது, பளபளக்கும்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் டேபிள்ஸ்பூன் ஒன்று

இலவசமாகக்

கிடைக்கும்!

நீங்கள் 3 சிறிய பேக்குகள்





க்ளுகோ பிஸ்கட் வாங்கும்போது ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல் டீஸ்பூன் ஒன்று

இலவசமாகக்

கிடைக்கும்!

பார்லேயின் க்ளுகோ பிஸ்கட்டுகள் சக்தியூட்டுபவை, கோதுமை, பால், சர்க்கரை மற்றும் ஆரோக்கியமளிக்கும் இதர கூட்டுப்பொருள்களின் போஷாக்குச்சத்து நிறைந்தவை.

இந்தச் சலுகை சென்னை நகரத்தில் மட்டுமே உண்டு
–அதுவும் ஸ்டாக்குகள் உள்ளவரைதான்.

everest/14

இடுக்கு வழியாக அவள் கூர்ந்து கவனித்தாள். நடுவிலே வெறுந் தரையிலே முலியா படுத்திருந்தாள். அவள் பக்கத்தில் ஒவ்வொரு புறமும் இரண்டு — இரண்டு, மூன்று—மூன்று என்று குழந்தைகள் அவளே அணைத்தவாறு படுத்திருந்தன. அவளை முழுசாகப் பார்க்க முடியவில்லை. அவள் குழந்தைகளையே போர்வையாகப் போர்த்திக் கொண்டு தூங்கினளோ என்று நினைக்கத் தோன்றியது. எல்லோர் மீதும் அழுக்கேறிய நூல் போர்வை ஒன்று போர்த்தப்பட்டிருந்தது. அதுவும் பல இடங்களில் கிழிந்து ஒரே ஓட்டை யாகிக் கிடந்தது. அந்த ஓட்டைகளின் வழியே ஒவ்வொருவருடைய உடலின் ஏதாவது ஒரு பகுதி தெரிந்தது. போர்வை ஒரு சமயம் ஒருபுறம் இழுக்கப்படும். இன்னொரு சமயம் இன்னொருபுறம் இழுக்கப் படும். இதைப் பார்த்த ஷீலாவுக்கு ஒரு நைப்பாசை. இங்கிருந்து ஒரு குழந்தை குறையக் கூடாதா? தாராளமாகக் குறைய லாமே ! இதனுல் யாருக்கும் ஏதும் சிரமம் இல்லேயே !"

ஷீலாவின் உள்ளம் படபடவென்று அடித்துக் கொண்டது. அமைதியிழந்து ஒரு முறை அந்தக் குடிசையை அவள் வலம் வந்து விட்டாள். பின்புறம் இருந்த நாணல் தட்டியை நகர்த்தி ஒரு முறை உள்ளே எட்டிப் பார்க்கவும் செய்தாள்.

ஆண்டவனே ! முலியா ஒரு வார்த்தை சொல்லிவிடக் கூடாதா? தூக்கத்திலாவது சொல்லட்டுமே !" இத்தனை குழந்தைகளில் அவளுக்கு யாரிடம் சலிப்பு என்று !.... அப்பப்பா! என்ன குளிர் ! என்ன குளிர் ! இந்தப் பதினேர் உயிரும் மண்ணுண்ணிப் பாம்பு போல எப்படி ஒன்றை ஒன்று கட்டித் தழுவிக் கொண்டு படுத்திருக்கின்றன!

திடீரென்று போர்வை விலகுவதை அவள் கண்டாள். முலியாவின் முதுகுப்புறம் சிறிது தெரிந்தது. அங்கே குழந்தை ஒன்றும் அணைத்துக் கொண்டிருக்க வில்லை. முலியா வின் உடல் குளிரில் ஒடுங்கிச் சுருங்கியது. அப்பா ! அவளுக்கு எப்படிக் குளிரும் ? இப்பொழுதாவது..... அவள் இப்படி நினைப்ப தற்குள்ளாகவே முலியாவின் குரல் வந்தது. ஆம், தூக்கத்தில்தான். இருந்தாலும் தெளி வாகக் கேட்டது :

''என் ஆண்டவனே ! நீ எனக்கு இன்னு மொரு குழந்தை கொடுத்திருந்தாயானல், என் முதுகின் இந்தப் பகுதியையும் அது மூடி யிருக்குமே! அப்பா ! என்ன குளிர் ! தாங்க முடியவில்லேயே !''

ஈரேழு பதினன்கு உலகமுமே தொப் பெனப் பூமியில் விழுந்து விட்டது போலத் தோன்றியது ஷீலாவுக்கு. துரிதகதியில் வாசிக்கும் வீணையின் கம்பி பட்டெனத் தெறித்தது போலத் தோன்றியது.

அவள் கண்கள் திறந்து கொண்டன. அதே அறை. அதே விலை உயர்ந்த பொருள்கள். அந்த அந்த இடத்தில் அப்படி அப்படியே ஒழுங்காக இருந்தன. அவை இடம் விட்டு இடம் மாறிப் போக ஏது வழி? அவற்றை உருட்டிப் புரட்டி, உடைத்து, ஒடித்து எறிவதற்கு அங்கே குழவிச் செல்வ மாக யார்தான் இருந்தார்கள்?



நிலவைப் பிடிக்கக் கைநீட்டி
நித்திரை செய்ய அடம்பண்ணி
மலராம் கண்ணில் நீர்கசிய
மங்கலத் தொட்டிலைத் திசைமாற்ற
உறவு கொண்ட தத்துவத்தில்
இறைவன் செய்த வித்தகத்தில்
மரபு விளங்கப் பிறந்ததுதான்
மழலே மொழியும் குழந்தையடா!

— "கண்மணி"

வட்ட மேஜை

மதிய உணவுத் திட்டம்

தேர்தல் முறையில் ஒரு தவறு

அரசாங்கம் மதிய உணவுத் திட்டம் தொடங்கியபோது 'ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு ஆறு பைசா வீதம் மானியம் வழங்கி, மீதி நாலு பைசா பொதுமக்களிடம் நன்கொடையாகப் பெற்று, பத்து பைசா செலவில் உணவளிக்கப்பட வேண்டும் என உத்தரவிட்டது. பின் நடைமுறையில் பொது மக்களிடம் நன்கொடை வசூல் செய்தே திட்டத்தைத் திறம்பட நடத்த முடியாது என்பதனை உணர்ந்து இரு ஆணைகளின்படி பொதுமக்களிடம் நன்கொடை வசூலிப்பதற்குப் பதிலாக அவ்வப் பஞ்சாயத்தே நாலு பைசாவை வழங்க அனுமதி அளித்துள்ளது. நிதி வசதியற்ற பஞ்சாயத்துக்கள் 'அபிவிருத்தி வரி'யின் மூலம் இவ்வுதவித் தொகை வழங்கவும் ஆலோசனை கூறியுள்ளது.

மேலும் மதிய உணவுத் திட்டம் சிறந்த முறையில் நிரந்தரமாக இயங்க ஏற்பாடு செய்ய, அரசினர் வேறு ஓர் ஆணையின்படி நில நன்கொடை பெறப் பஞ்சாயத்துக்களை வற்புறுத்தி, அவ்வாறு வழங்கப்படும் நில தான சாஸனங்களுக்கு ஸ்டாம்புக் கட்டணம் கட்டுவதிலிருந்து விலக்களித்து, பதிவுக் கட்டணத்தைப் பஞ்சாயத்து நிதியில் செலவு செய்யவும் அனுமதியளித்துள்ளது. மேலும் கிராமத்தில் உள்ள புறம்போக்கு நிலங்களைப் பள்ளிகளுக்குப் பட்டா செய்யவும், அதிக நிலமுள்ள இடங்களில் நீர் வசதி செய்யவும் ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளன.

இன்றைய விலைவாசி உயர்வில் பத்து பைசாவுக்கு உணவு அளிக்க முடியுமா என்றால் எங்கள் பள்ளியில் 120 மாணவர்களுக்கு மதிய உணவு நல்ல முறையில் அளிக்கப்படுகிறது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இத்தகைய திட்டம் பற்றிக் குறைகூறி ஒரு தலைமை ஆசிரியர் 8–1–67 தேதி கல்கி இதழ் 59வது பக்கத்தில் ஒரு கடிதம் எழுதியிருந்தார். பத்து பைசாவில் தரமான உணவு போதுமான அளவு அளிக்க முடியும் என்று அவருக்கு உறுதி கூறுகிறேன்.

சில பஞ்சாயத்துகளில் நான்கு பைசா மானியம் அளிக்கப்படுவதில்லை என்றும் 2 பைசாதான் அளிக்கப்படுகிறது என்றும் கூறப்படுகிறது. இந்நிலையில் உள்ள பஞ்சாயத்து மன்றத்தார் கருணைகூர்ந்து இத்திட்டத்தில் கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டும். இத்திட்டத்தில் ஆர்வமற்ற பஞ்சாயத்துகளின் நிர்வாகத்தில் அரசாங்கம் தனிக் கவனம் செலுத்தி, நாலு பைசா மானியம் வழங்க ஆவன செய்து விட்டால், ஆறு பைசாவையும் செலவு செய்து விட்டு நாலு பைசா நன்கொடை கிடைப்பதாகப் பொய்க் கணக்குக் காட்டும் நிலை ஏற்படாது.

மேலே குறிப்பிட்ட கடிதத்தில் உள்ள, ''ஒருசில நேர்மையற்ற ஆசிரியர்கள் விலைவாசி உயர்வையும், நன்கொடை இல்லாமையையும் காரணம் கூறிக் கிடைக்கும் ஆறு பைசாவையும் கூறு போட்டுக் கொண்டனர்'' என்ற வரிகள் ஆசிரிய சமுதாயத்துக்கே கறையாகும். ஆறு பைசாவையே கூறு போடும் பண்புள்ளவனிடம் அறுபது பைசாவைக் கொடுத்தாலும் அப்படித்தானே நடக்கும்!

ஆசிரிய சமுதாயத்துக்கு மதிப்பு இல்லை என்ற கூற்றினை மாற்ற ஒவ்வோர் ஆசிரியரும் கடமை உணர்வோடு நற்பண்புகளுக்கு இலக்கணமாய், தொழிலில் ஆர்வம் கொண்டு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றைக் கடைப்பிடித்து வந்தால் சமுதாயத்தில் மதிப்பு தானே உயரும். எனவே, இத்திட்டத்தில் ஊழல் இல்லை. இதை நடத்திச் செல்வோரின் கவனக் குறைவும், ஆர்வமின்மையும்தான் ஊழலுக்குக் காரணம்.

திருமலைநாயக்கன் பாளையம், கோவை — வெ. இராமகிருட்டினன், தலைமை ஆசிரியன்
10–2–67 — ப.யூ. ஆதாரப்பள்ளி

அஞ்சல் வழித் தேர்தல் வாக்குச் சீட்டுக்களில் ஒரு பெருந் தவறு.

வாக்குச் சீட்டுக்களில், வேட்பாளர்களின் பெயர்களைத் தனித் தனிக் கட்டத்தில், ஆங்கிலத்தில் பொறித்திருக்கிறார்கள். வேட்பாளர்களின் கட்சிச் சின்னங்கள் ஏதுவும் கிடையாது. அன்றியும், வேட்பாளர் பெயரின் கீழே, அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்கான விவரமும் தரப்படவில்லை. ஆனால் காங்கிரஸ் வேட்பாளருக்கு மட்டும் கட்சியின் பெயர் தரப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டு: இராமநாதபுரம் பாராளுமன்றத் தொகுதிக்கான, அஞ்சல் வாக்குச் சீட்டில், நான்கு வேட்பாளர்களின் பெயருக்குக் கீழே, அவர்களின் கட்சி பற்றிய எவ்வித விவரமும் கிடையாது. ஆனால் ஐந்தாவது வேட்பாளரான காங்கிரஸ்காரருக்குமட்டிலும் 'காங்கிரஸ்' என்று அச்சிட்டிருக்கிறார்கள்.

இது ஒரு குறிப்பிட்ட கட்சிக்கே வாக்கு அளிப்பதற்கான கட்டாயச் சூழ்நிலையை ஏற்படுத்த வில்லையா? வெளி மாநிலங்களிலிருந்து தபால் வழியாக வாக்குப் பதிவு செய்யும் நபருக்கு, தனது தொகுதியில் எந்தெந்தக் கட்சிக்காரர்கள் போட்டியிடுகிறார்கள் என்ற விவரம் எப்படித் தெரிந்திருக்க முடியும்?

கல்கத்தா
12–2–67 — ஸ்ரீமதி கலாபன்வாஸ்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.

ஆஹா



... கோலினுஸ்

புதியது - தூயது...

கோலினுஸின் சுவை :
வாயில் புத்துணர்ச்சியூட்டும் இனிய சுவை.
கோலினுஸின் நுரை :
துலக்குவதை எளிதாக்கும், பூரணமாகத் தூய்மைப்படுத்தும்.
கோலினுஸ் கொடுக்கும் அந்த
இனிய சுவாசத்தை நீங்கள் விரும்புவீர்கள்.
மற்றவர்களும் விரும்புவார்கள்.

அந்த ஐந்தாவது சிறுவனுக்கு ஒரு அருமையான யோசனை: கோலினுஸ் உபயோகித்து மற்றவர்களைப்போல் புன்னகை புரியவும்: கோலினுஸ் டென்டல் கிரீம் மூலம் உன்னுடைய பற்களை நாள்தோறும் காலையிலும் இரவிலும் துலக்கவும். மற்றவர்கள் மத்தியில் நம்பிக்கையோடும் மகிழ்ச்சியோடும் உலவ உதவுவது கோலினுஸ்.



ASP/GM/K-4K TAM

களிப்பில் மலரும் புன்னகை...அது கோலினுஸ் தரும் புன்னகை

பயன்படுத்த பதிவுசெய்யப்பட்டுள்ளோர்: ஜெப்ரி மானேர்ஸ் அன்ட் கம்பெனி லிமிடெட்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சத
தபால் செலவு தனி



How often are you evaluating your transport efficiency in relation to maintenance costs?

Economy is a must every day. Whether you run trucks, agricultural plant or industrial equipment, economy is what you look for—sound, long-term economy. Every morning your daily report on operating and maintenance costs is your guide to true economy. Such a guide will reveal to you how the use of genuine spare parts can cut down your maintenance cost, because they are the same original equipment parts of standard quality.

If you are keenon fleet efficiency and economy in order to make more profit, the only sure way is to take a solemn pledge to use only genuine Perkins parts, supremely reliable and highly durable.

Simpson & Co Ltd

Head Office: 202, Mount Road, Madras-2.
Branches: OOTACAMUND - BANGALORE - TIRUCHIRAPALLI - SECUNDERABAD

For PERKINS Engines
®
Simpsons Genuine Spare Parts

® / REGD TRADE MARK

S 330